# வெளிச்சத்தைத் தேடி...

நடு இரவுக்குப் பின்னும் உறக்கமின்றி அவன் படுக்கையில் புரண்டான்.

மண்டை வெடித்துவிடும் போன்ற கவலைகளின் இறுக்கத்தில் அவனுக்குத் துளிகூட தூக்கமே வரவில்லை. திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தான். அடுத்த வீட்டு பால் குக்கர் ஓங்கிய ஒலியில் சீட்டியடித்துக் கொண்டிருந்தது துல்லியமாகக் கேட்டது.

அப்படியென்றால் விடியற்கால வேளை. அவனையுமறியாது உடல் அயற்சியால் உறங்கி விட்டிருக்கிறானே.

இடையே இருந்த ஒட்டுச் சுவரைத் தாண்டி தொடர்ந்து அந்த அடுத்த வீட்டு அம்மாள் கூப்பாடு போட்டதும் காதுகளில் நன்றாக விழுந்தது.

''ஞாயிற்றுக் கிழமையில்கூட காப்பிக்கு இப்படி ஏன் பறக்கறீங்க? சித்த படுத்துக் கிடக்கிறதுதானே? எதுக்கு அவசரமா எழுந்து என் பிராணனை வாங்கிகிட்டு...'' மேலே முணுமுணுத்த அவள், பாத்திரங்களை 'ணங்' என்று வைப்பது கேட்டது.

ஆமாம்! இன்று ஞாயிற்றுக்கிழமை. அவன் ஏன் அவசரமா எழுந்திருக்க வேண்டும்? பல ஆண்டுகள்

ஏற்பட்ட பழக்கத்தின் பாதிப்பு, அவனையுமறியாது அவன் கண்கள் சமையல் அறைப்பக்கம் திரும்பின.

இருட்டு அப்பிக்கிடந்த அந்த அறை முகத்தில் அறைவதைப் போன்ற நினைவை உள்ளத்திலே உண்டாக்கவே கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டான்.

அம்மா இறந்துபோய் சில மாதங்களுக்கு மேலாகி விட்டன. ஆனாலும் அவள் அந்த வீட்டிலே எங்கேயோ இருப்பதைப் போன்ற அந்த நினைவை - அந்தப் பரிவை உதற முடியவில்லையே!

ஞாயிற்றுக்கிழமை என்றாலே அம்மா சொல்வாள். ''வார முழுக்க ஓடா உழைக்கிறே. இன்னிக்காவது சித்த நிம்மதியாகத் தூங்கி ஆர, அமற எழுந்து குளியேன். என்ன அவசரம்? அதற்குள்ளே நான் இட்லி வார்த்து வெங்காய சாம்பார் பண்ணி உனக்குப் பிடிச்ச தேங்காய் சட்டினி அரைச்சு தயாரா வச்சுடறேன். சூடா பக்கெட்டில் தண்ணீர் நிரப்பி வச்சுட்டு கூப்பிடறேன். இந்தக் குளிரில் பச்சைத் தண்ணீரில் குளிக்க வேண்டாம். நான் சொல்றதக் கேளு. ஒரு சின்ன அண்டா தண்ணியை சுட வைக்க நாலு நாழியாகாது.''

அவனைப் பற்றி எல்லாவகையிலும் கவலைப்பட்ட ஒரே ஒரு உயிர் அவன் தாய். அந்த நெருங்கின பந்தமும் சொந்தமும் போனதும் அவன் தன்னந்தனியனாகி, அந்த வீட்டின் வெறுமையில், அதைச் சூழ்ந்து நின்ற வறுமையின் நடுவில் எப்படியோ சில மாதங்களைக் கடத்தி விட்டிருந்தான்.

''எந்தக் கிழமையாக இருந்தா என்ன? ஒரே சீரா காரியங்களை கவனிச்சாதான் உருப்பட முடியும்.



இன்னிக்கு ஓய்வுன்னு அதிக நேரம் தூங்கினா நாளைக்கு வேலைக்கு நான்தானே எழுந்து போகணும்'' பதிலுக்கு அடுத்த வீட்டுக்காரர், மனைவியை அதட்டியது கேட்டது.

அவசரமாகத் தலையணையைத் தட்டி ஜமுக்காலத்தில் வைத்துச் சுருட்டி ஒரு பக்கம் வைத்தான். பொழுது வேகமாகப் புலர்ந்து புது வெளிச்சம் கம்பித் தடுப்புகள் வழியே முற்றத்திலே பளிச்சென்று பரவுவதைக் கவனித்தான்.

சுவரில் தொங்கிய காலண்டரை திரும்பிப் பார்த்ததுமே பகீரென்ற உணர்வு.

மாதம் பிறந்து முதல் ஞாயிற்றுக்கிழமை. விடிந்ததும் விடியாததுமாக வீட்டுக்காரர் வாடகைக்கு வந்து நிற்பாரே!

ஈட்டிக்காரனைக்கூட ஏதாவது சொல்லி சமாளித்து விடலாம். ஆனால் அவனது வீட்டின் சொந்தக்காரரை சமாதானம் சொல்லி அனுப்பி வைப்பது லேசான காரியம் அல்லவே! அதுவும் மூன்றுமாத வாடகை பாக்கியாக நிற்கும்போது...

எழுந்து அலமாரியைத் திறந்து துளியளவு ஒட்டிக் கொண்டிருந்த பேஸ்ட்டைப் பற்களைக் கடித்துக்கொண்டு பிரஷ்மீது பரப்பிக் கொண்டான்.

பிளாஸ்டிக் வாளியையும் அலுமினிய சொம்பையும் தூக்கிக்கொண்டு பின்பக்கத்துக் கதவைத் திறந்துகொண்டு தோட்டத்திற்கு வந்தான். அடுத்த தெருவிலிருந்த ஒரு வீட்டின் கூரையோடு ஒட்டிய பின் சுவர் கொண்டதொரு சின்னஞ்சிறு தோட்டப்பகுதி. அதற்குள் ஒரு கிணறு, துணி துவைக்கும் கல், சிமெண்ட் தொட்டி, வீட்டுக் கூரைமீது

ஓடி ஏறி வியாபித்துக் கொண்ட ஒரு நித்தியமல்லிச் செடி இத்யாதிகள். கார்ப்பரேஷன் தண்ணீர் குழாய் வசதியும் உண்டு.

ஆண் பிள்ளை அழக்கூடாது என்ற சங்கல்பத்தையும் மீறி அவன் ரகசியமாக அம்மாவை நினைத்து அவ்வப் போது உகுக்கும் கண்ணீர் போல தண்ணீர் அதில் எப்பொழுதாவது வரும்.

சமையலிலிருந்து ஸ்நானம், குடிநீர் எல்லாவற்றிற்கும் தோட்டத்துக் கிணற்றையேதான் நம்பி அவனும் அம்மாவும் வாழ்ந்தனர். தண்ணீர் கொஞ்சம் கசக்கத்தான் செய்தது.

இருபத்தஞ்சு ரூபாய் வாடகைக்குத் தனிவீடு. இதுக்கு மேலே மீன மேஷம் பார்க்கக்கூடாது என்று அப்பாவும் அம்மாவும் சேர்ந்து குடியேறிய வீடு அது. மெள்ள வாடகை விஷமாக ஏறி இப்போது நூற்றைம்பது ஆகிவிட்டிருந்தது.

''ஐநூறு கிடைக்கும். போகட்டும் பாவம்னு பார்க் கிறேன்! என் மகன் அமெரிக்காவிலிருந்து வரப் போகிறான்! இந்த வீட்டை இடித்து ஃபிளாட் கட்டிப் போட்டு விடலாம் என்பது என் கருத்து. இப்போ இந்த இடத்து விலை என்ன தெரியுமோ?'' வீட்டுக்காரர் வேலு முதலியார் அடிக்கடி அவனை பயமுறுத்திக் கொண் டிருந்தார்.

ஃபிளாட் கட்ட அவரிடம் பணம் கிடையாது. விற்கவும் மனமில்லை. வெறும் வெத்து வேட்டு என்பதை உணர்ந்த அவனும் ''ஏதோ உங்கள் தயவு சார். எங்களைப் போன்றவங்க உங்களுடைய கருணையால் தானே வாழ்ந்து கொண்டு இருக்கோம்'' என்று புகழ்ந்து வைத்தான்.



வாடகை வாங்க வரும் முதல் ஞாயிற்றுக்கிழமை யன்று மனிதன் அம்மா போட்டுக்கொடுக்கும் காப்பியைக் குடித்துவிட்டுத் தமது சரிகை அங்கவஸ்திரத்தின் மடிப்புக் கலையாது அதைத் தடவிக் கொண்டபடி வீட்டை வளைய வருவார்.

''இந்த இடத்தில் ஆணி அடிக்காதீங்கன்னு முன்னமே சொல்லியிருந்தேனே'' ஏதாவது ஒரு குறையைக் கண்டு கோபத்துடன் மிரட்டுவார்.

''இந்த இடத்தில் முப்பது வருஷத்துக்கு முன்னாடி ஆணி அடிச்சதுதான். நீங்க ஏற்கனவே பார்த்து கண்டித்த விஷயம். அதுக்குப் பிறகு சுவத்திலே நாங்க கை வைத்ததே இல்லை'' அம்மா மெல்லிய குரலில் கூறுவாள்.

''போன மாதம் வாடகை வசூலுக்கு வந்தப்போ நீங்க கொடுத்த நெய்முறுக்கு ரொம்ப பிரமாதம்னு என் மனைவி புகழ்ந்தா.''

அம்மாவுக்கு உடனே புரிந்துவிடும். ஆசாமிக்கு வாடகையுடன் வகையாகத் தின்று ருசிக்க பலகாரம் வேறு மூட்டை கட்டித் தரக் கேட்கிறார்.

''தொலையட்டும். அந்தக் கல்யாண வீட்டு முறுக்கு, அதிரசம், லட்டு இவைகள் செய்யச் சென்ற இடத்தில் வீட்டுக்கார அம்மா அவள் பங்குக்குக் கட்டிக் கொடுத்த பொட்டலத்திலிருந்து இரண்டு லட்டுகளை எடுத்து பிளாஸ்டிக் பையில் போட்டுத் தந்து தொலைப்போம்'' என்று அவள் ஒரு சிறு பொட்டலத்தைக் கொண்டுவந்து

கூடத்து முக்காலி மீது வைப்பாள். வாடகைப் பணத்துடன் வேலு முதலியார் லட்டுப் பொட்டலத்தை மறக்காது எடுத்துக் கொண்டு கிளம்புவார்.

கல்யாண பட்சணங்கள் தயாரித்துத் தருவதுதான் அம்மாவின் வேலை. தங்கை சரோஜாவையும் அவனையும் அம்மாவையும் கைவிட்டு விட்டு அப்பா, தாம் வேலை செய்த பட்டுப் புடவைக் கடையில் பணத்தைக் கையாடி விட்டுத் தலை மறைவாக ஓடிவிட்டபோது அம்மாவின் சமையற்கலைதான் அவர்களைப் பட்டினியின்றிக் காத்தது.

அப்பாவைத் தேடிப்பிடித்து சிறையில் அடைக்காத படி, அவர் எடுத்துக் கொண்டு மாயமான ஐயாயிரம் ரூபாயைத் தான் தருவதாக ஒப்புக் கொண்டு ஜவுளிக் கடைக்காரர் காலில் விழுந்து கெஞ்சி அழுததை அவன் நினைத்த போதெல்லாம் நெஞ்சு கொதித்துப்போனான்.

''என் கணவர் திருடன், ஒத்துக்கிறேன். இதோ பாருங்கோ, இந்தப் பிஞ்சுக் குழந்தைகள். இவர்கள் வருங்காலம் சூன்யமாகி விடக்கூடாது. ஏழையான எங்களுக்கு பெண் குழந்தைக்குக் கல்யாணம் செய்து வைத்து தலை நிமிருவதே பெரிய காரியம். ரொம்ப சிரமமான சங்கதி கடையில் திருடிட்டு அப்பன் ஜெயிலுக்குப் போனான்னு அபவாதம் வந்தால். ஐயா! நீங்களும் பெண்ணை பெற்றவர். என் பெண்ணுக்கும் என் பிள்ளைக்கும் வாழ்க்கைப் பிச்சை கேட்கிறேன். இந்தப் பணத்தை எப்படியாவது செலவினத்திலே போட்டு ஒரு கடன் பத்திரம் எழுதுங்கோ. கையெழுத்துப் போட்டுத் தரேன். வட்டியும் எடுத்துக்கோங்கோ...''



''எப்படியம்மா இந்தத் தொகையை நீங்க கட்ட முடியும்?'' கடைக்காரர் தமது மீசையைத் தடவிக் கொண்டு ஏளனமாகப் பார்த்தார்.

குங்குமம் கரைந்து நெற்றி முழுவதும் பரவ கண்கள் அழுதழுது சிவந்து காண மஞ்சள் வியர்வையில் கலந்து கழுத்தின் மீது ஓட, பழைய சுங்கடி சேலை தலைப்பால் தாலிக் கயிறு மட்டும் தெரிந்த கழுத்தை இழுத்து மூடிக்கொண்டு அம்மா துணிவுடன் பேசினாள்.

திருடனல்லாத தன் கணவனுக்குக் கண்ணகி அன்று வீராவேசத்துடன் நியாயம் கேட்டாள். இந்தக் கண்ணகி திருடனாக ஓடிவிட்ட தன் கணவனைக் காத்து தன் குடும்பமானத்தை ரட்சிக்க கடைக்காரரின் கருணை கேட்டு யாசித்தபடி துணிவாகச் சொன்னாள்.

''எனக்கு பட்சணங்கள் தயாரிக்கத் தெரியும். நாலு வீட்டுக்கு சமைத்துப் போட்டு உங்கள் கடனை மாதம் இத்தனையென்று செலுத்தி அடைச்சுடறேன்.''

என்ன நினைத்தாரோ கடைக்காரர்...ம்-! ஒரு மாதம் தவணை நின்னால் கூட நான் கடுமையான நடவடிக்கை எடுப்பேன். இதில் கையெழுத்துப் போடுங்கள்'' என்று அவசரமாகத் தயாரித்த பத்திரத்தில் அம்மாவின் கையெழுத்தை வாங்கிக் கொண்டார்.

அப்போது அவனுக்குப் பத்து வயதிருக்கும். சரோஜாவுக்கு எட்டு வயது. அம்மா செக்கசெவேலென்று பார்க்க மூக்கும் விழிகளுமாக நல்ல அழகிதான். சின்ன வயதுதான். அந்த வயதில் குழந்தைகளுடன் தனியாக ஒரு பெண்ணை தவிக்கவிட்டு ஓடிப்போனதைப் பற்றி அப்பா சிறிதும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

தன்மேல் எந்தக் குறையும் ஏற்படாது - எந்தத் தவறும் நேர்ந்து விடாது அம்மா. கம்பிமேல் நடக்கும் சர்க்கஸ் வித்தைக்காரி போல நிதானமாக நேர்மையாக நெற்றி வியர்வை வழிய உழைத்து தன் குழந்தைகள் இருவரையும் ஆளாக்கியவள்.

"நம்ம தெருவிலே இருக்காளே பார்வதி! அதான் பட்சணம் செய்து கொடுக்கும் அந்த அம்மா, அவதாண்டி உண்மையான பத்தினி. அவ முகத்திலே விழிச்சா நாம் செஞ்ச பாவம் எல்லாம் பஞ்சாகப் பறந்திடும். இத்தனை நல்லவளை விட்டுட்டு அந்தப் பாவி மணிகண்டன் எங்கேயோ ஓடிப் போயிட்டான். ஆனாலும் பூவும் பொட்டுமா அவன் நினைவை மனதில் வச்சுண்டு குனிந்த தலை நிமிராம - அவள் எப்படித்தான் வாழ்ந்து இந்த இரண்டு குழந்தைகளையும் முன்னுக்குக் கொண்டு வராளோ... மகராசி" - எதிர் வீட்டுப் பாட்டி புகழ் மாலைகளை அள்ளிப் போட்டுக் கொண்டிருந்தாள்.

வேலை செய்யப்போன இடத்திலும் அம்மாவுக்கு நல்ல பெயர். அந்த கையெழுத்தை போட்டுவிட்டு வீட்டுக்கு வந்ததும் முதல் வேலையாக பார்வதி தன் பிறந்த வீட்டு சீதனமான வெள்ளி டம்ளர்கள், உத்தரிணி, தட்டு, தன் கை விரலில் இருந்த தங்க மோதிரம் இவைகளை விற்று கல்யாண பட்சண தயாரிப்புக்கு வேண்டிய உபகரணங்களான சல்லிக் கரண்டிகள் - இரும்பு வாணலி கனமான பித்தளை அடுக்கு - வெண்கல உருளி இத்யாதிகளை வாங்கிக் கொண்டாள்.

கோபுரவாயில் தெரு முனையிலிருந்த பட்சண தயாரிப்புக் கிழவி ஒருத்தியின் துணையை நாடினாள். அவளது குழுவில் ஒருத்தியாக சேர்ந்து கொண்டு



கல்யாணங்களுக்கு பட்சணங்கள் தயாரிப்பது, ஆஸ்திரேலியா - அமெரிக்காவில் தங்கியிருக்கும் தங்கள் குழந்தைகளுக்கு அனுப்ப தாய்மார்கள் தயாரிக்க விரும்பும் மைசூர்பாகு - முறுக்கு - கடலை உருண்டை இவைகளை செய்து தருவது, என்று காலை ஏழு மணிக்கு வீட்டை விட்டு புறப்பட்டு போகிறவள் மாலை ஏழு மணிக்கு நெருப்பருகே வெந்து உடல் சோர்ந்து - வீடு வந்து சேருவாள். கல்யாண காலங்களில் சில சமயங்களில் வீடு திரும்ப அவளுக்கு இரவு மணி பத்தாகிவிடும்.

ஐந்து வருஷ காலத்தில் வட்டியுடன் அப்பா எடுத்துக் கொண்டு ஓடிய அந்தத் தொகையை அடைத்ததுடன் - புடவைக் கடைக்காரர் வீட்டுக் கல்யாணத்திற்கு வேண்டிய பலகாரங்கள் அத்தனையையும் அவர்கள் வீட்டு அடுப்புக்கருகில் உட்கார்ந்து இனாமாக அம்மா தயார் செய்து கொடுத்தாள்.

கடைக்காரர் மனம் கனிந்து போனார்.

இத்தனை நாணயமாக வாழும் ஒரு பெண்மணியின் கடும் உழைப்பை வசதி உள்ளவர்கள் இனாமாக எடுத்துக் கொள்வது முறையில்லை என்ற எண்ணமாக இருக்கலாம். தங்கள் வீட்டுக் கல்யாண தினத்தன்று பார்வதிக்குக் கடைக்காரரின் மனைவி ஒரு பட்டுப் புடவையும், ரவிக்கைத் துண்டும் வைத்து வெற்றிலை பாக்கு பழம், பூவுடன் வழங்கினாள்.

அம்மா பார்வதி அந்தப் புடவையை தான் உடுத்தவில்லை. வருஷங்கள் சில ஆகும் என்ற போதிலும் சரோஜாவின் கல்யாணத்திற்கு உதவும் என்று பிளாஸ்டிக் உறையிலேயே போட்டு பத்திரமாக வைத்து விட்டிருந்தாள்.

## 2

அவன் ஆண்பிள்ளை என்றதால் அம்மா அவனைப் பற்றி அதிகம் கவலைப்படவில்லை. ஆனால் சரோஜா பெண் குழந்தை. அவள் வயதுக்கு வந்துவிட்டாள் என்றதுமே அம்மாவுக்குக் கவலை கொஞ்ச நஞ்சமல்ல. தங்கையை பள்ளிக்கூடத்தில் கொண்டு விட்டுவிட்டுத் தான் அவன் தன் கல்லூரிக்குப் போக வேண்டும் என்பது அம்மாவின் ஆக்கினை.

பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பும் சரோஜா நேரே எதிர் வீட்டு பாட்டியின் வீட்டில் வந்து அம்மாவோ அண்ணனோ வீடு திரும்பும் வரை படித்துக் கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டுமென்ற உத்தரவு. சரோஜா எஸ்.எஸ்.எல்.சி.யை முடித்தவுடன் மேலே படிக்க வைக்காது நிறுத்திவிட்டாள் அம்மா. அத்துடன் தான் பலகாரம் சுடும் இடங்களுக்கு தன்னுடனேயே கூட்டிச் செல்ல ஆரம்பித்தாள். கொஞ்ச காலத்திற்குப் பின்னர் பார்வதி கோபுர வாயில் பட்சணத் தயாரிப்புக் குழுவினின்று விலகி அந்த தொழிலைத் தானே தனிப்பட செய்ய ஆரம்பித்தாள்.

தனியாக ஆரம்பித்த தொழிலில் வருமானம் ஏராளமாக இருந்தது. சுமங்கலி பாவம் - கல்யாண வயதில் ஒரு பெண்ணுடன் கஷ்டப்பட்டு வேலை செய்கிறாள் என்று பரிதாபப்பட்ட கல்யாண வீட்டவர்கள் அவள் தயாரித்த பலகாரங்களில் சிறிது எடுத்துப் பொட்டலம் கட்டி அத்துடன் ரவிக்கைத்துண்டு - வெற்றிலை பாக்கு பழத்துடன் அவள் கேட்டதற்கு மேலே பத்தோ இருபதோ



வைத்து தாராளமாகக் கொடுத்தனர். தனியாக ஆரம்பித்த உழைப்பில் பார்வதி, கல்யாண காலத்தில் ஏராளமாகவே சம்பாதிக்கத் தொடங்கினாள். சிக்கனமாக வாழ்ந்ததினால் கொஞ்சம் பணத்தை சரோஜா கல்யாணத்திற்கு சேர்த்து வைத்திருந்தாள்.

அத்துடன் மட்டுமா?

பார்வதி தன் தாழ்மையான பதில்களாலும் - நேர்மையான நடத்தையாலும் வேலை செய்த வீட்டில் உள்ளோரின் மதிப்பை அதிகமாகவே பெற்று விட்டிருந்தாள்.

நாராயணன் வீட்டில் நடந்த அத்தனைச் சடங்குகளுக்கும் பல ஆண்டுகளாக அவள் பட்சணம் தயாரித்து தந்தவள் என்ற காரணத்திற்காக காஸ் அடுப்புத் தேவைப்படுகிறது என்று அவள் முறையிட்டபோது எப்படி எழுதிப் போடுவது என்ற முறையை காட்டிக் கொடுத்ததுடன் அதைப்பற்றி விசாரித்து அடுப்பு வாங்கித்தர முன்பணம் கொடுத்து உதவினாள் நாராயணனின் மனைவி.

லட்சுமணன் வீட்டுக்குப் பல காலமாக தீபாவளி - கல்யாணம் - காதுகுத்தல் என்ற எல்லா வைபவங்களுக்கும் சமையலிலிருந்து பலகாரத் தயாரிப்புவரை கருத்தோடு கவனித்து உதவுகிறவள் என்கிற காரணத்திற்காக லட்சுமணன் மனைவி தன் கணவனிடம் சொல்லி - அவர் நண்பரின் பெரிய கார் சாமான்கள் விற்பனை பகுதியில் - அண்ணாசாலை சில்லறை வியாபார நிறுவனத்தில் பி.காம். படித்துவிட்டு வேலைக்கு அலைந்து கொண்டிருந்த மகனுக்கு கிளார்க் வேலை வாங்கித் தந்து விட்டிருந்தாள்.

"இந்த வேலையை உன் பிள்ளை கெட்டியாகப் பிடித்துக் கொள்ளட்டும். படிப்படியாக முன்னேறி

வந்துவிடுவான். பிறகு கைநிறைய சம்பாதிப்பான். கவலைப் படாதே பார்வதி அதுக்கப்பறம் நீ கரண்டியைத் தூக்க வேண்டியதில்லை'' என்றாள் ஸ்ரீமதி லட்சுமணன்.

ஆரம்பகாலத்தில் அந்த நிறுவனத்தில் அவன் வாங்கிய சம்பளம் மிகக் குறைவுதான். முன்னூற்றுக்குக் கொஞ்சம் குறைவாகத்தான் கிடைத்தது. பஸ் செலவு போக மாதம் இருநூற்றைம்பதைத்தான் அம்மாவிடம் கொடுக்க முடிந்தது.

அவன் கொடுத்ததை அப்படியே வங்கியில் போட்டு சேமித்து வைத்திருந்தாள் பார்வதி. ஒரு வருஷ காலத்தில் சேர்ந்த அந்தப் பணத்துடன் தான் ஏற்கனவே கல்யாணத்திற்கு சேமித்ததையும் சேர்த்து வைத்துக் கொண்டு சரோஜாவுக்கு கல்யாணம் செய்யும் ஏற்பாடுகளில் முனைந்தாள்.

அவர்கள் சொன்னார்கள் - இவர்கள் கேள்விப்பட்டார்களாம் என்று வேலை செய்யப் போன இடத்தில் கேள்விப்பட்ட வரன்களையெல்லாம் சல்லடை போட்டு சலித்து முடிவில் ஜகதீசனைத் தேர்ந்தெடுத்தாள். சரோஜா, அம்மாவைப்போல தங்கநிறம், மாப்பிள்ளை கொஞ்சம் கருப்புதான்.

ஆண்பிள்ளைக்கு நிறம் தேவையான சங்கதியா? நல்ல மனுஷர்கள், அதுபோதும் என்றுதான் அவனுக்குத் தன் பெண்ணை தன் சக்திக்கும் மீறிய நிலையில் அவர்கள் வீட்டில் கேட்ட வரதட்சிணை, சீர் இவைகளுடன் செய்து கொடுத்தாள்.

பார்வதியின் பலநாள் உழைப்பு வீணாகிப் போகவில்லை. பெண்ணுக்குக் கல்யாணம் கூடிவிட்டிருக்



கிறது என்பதை அவள் வேலை செய்த வீட்டவர்களிடமெல்லாம் சொன்னதுதான் தாமதம், பலர் அவளுக்கு உதவ தாமாகவே முன் வந்தனர்.

அந்தப் பகுதி மாதர் சங்கத்துப் பெண்கள் திருமாங்கல்யமும் கூரைப்புடவையும் வாங்கித் தந்து உதவினார்கள்.

ஒரு பணக்கார அம்மா - பெண் குழந்தையில்லாதவள் - பார்வதியின் பலகாரங்களை அடிக்கடி அமெரிக்காவிலுள்ள மகன்களுக்கு அனுப்பி வைத்து மகிழ்கிறவள் - சரோஜாவின் புக்ககம் கேட்ட சீர் பாத்திரங்களை வாங்கித் தந்து விட்டிருந்தாள்...

இப்படி ஆளுக்கு ஒரு கை கொடுக்க, தான் சேமித்த பணம் அத்தனையையும் போட்டு அவள் தன் மகளை வாழ்க்கைப்படுத்தி கணவன் வீட்டுக்கு அனுப்பி வைத்தாள்.

ஜகதீசன், அவள் மகன் சபரிநாதனைப்போல ஒரு அலுவலகத்தில் கணக்கராகப் பணிபுரிந்து கொண்டிருந்தான். சில வருஷங்களுக்கு முன்னதாக சேர்ந்து வேலை நிரந்தரமாகிவிட்டதால் ஐநூறுக்கு மேல் சம்பாதித்தான்.

மாமனார் கூட ஏதோ ஒரு கடையில் கணக்கெழுதிக் கொண்டிருந்தார். சிறு வயதிலேயே விதவையாகிவிட்ட ஒரு சகோதரி வீட்டோடு இருந்தாள். இதைத்தவிர அப்படி ஒரு கூட்டம் நிறைந்த வீடல்ல அது. பார்வதியைப் போல அவர்களும் நகரத்தில் ஒரு பகுதியில் ஒட்டு கட்டடமானதொரு தனி வீட்டில் வசித்துக் கொண்டு இருந்தனர். தன் தகுதிக்கு மகளுக்கு சரிசமமான

அந்தஸ்தில் ஒரு இடம் கிடைத்ததே என்று அவள் சந்தோஷப்பட்டுக் கொண்டு இருந்த சமயம் ஒரு நாள் சரோஜா கலங்கிய கண்களுடன் தன்னந்தனியாக அம்மாவைப் பார்க்க வந்தாள்.

''கல்யாணத்தின்போது இருபது பவுனுக்கு நகைகளும் - வைர மூக்குத்தியும் போடுவதாக ஒப்புக் கொண்டீர்களாம். ஆனால் பதினைஞ்சு பவுனுக்கு மட்டும் நகை போட்டுவிட்டு வைரமூக்குத்தியைப் பற்றி மறந்தே போனீர்களாம். அடிக்கடி மாமியாரும் நாத்தனாரும் இடித்துப் பேசறா. அம்மா எப்படியாவது...'' பேச முடியாது திணறினாள் மகள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை; சபரிநாதன் வீட்டில்தான் இருந்தான். அம்மாவுக்கு வெளியில் வேலை இருக்க வில்லை. அவளும் வீட்டில் தங்கியிருந்தாள். பசியும் சோர்வுமாக வந்திருந்த மகளுக்கு அம்மா முதலில் இலை போட்டு சாப்பாடு போட்டாள்.

''முதல்லே சாப்பிடு, பிறகு நிதானமா பேசுவோம். என்ன இருந்தாலும் நீ தனியா புறப்பட்டு பஸ்சில் வந்து இருக்கக்கூடாது. மாப்பிள்ளை துணையோட வந்திருக்கணும்.''

''அவர் கூட வர இஷ்டப்படலை அம்மா. அவர் தன் தாயாருக்கு ரொம்ப பயந்தவர். தன் சகோதரி பேச்சுக்கும் அடங்கிப்போனவர். அதனாலே அவரே என்னை தனியே போய் உங்ககிட்ட சொல்லிட்டு வரச்சொல்லி பஸ்சில் ஏத்தி விட்டார் அம்மா. நான் என்ன செய்யட்டும்...''

வாயில் அடைத்துக்கொண்ட சாம்பார் சாதத்தை விழுங்க முடியாது விக்கினாள் சரோஜா.



## 3

சபரிநாதனின் நெஞ்சில் யாரோ நெருப்பை வைத்து விட்டது போன்றதொரு எரிச்சல்.

சரோஜாவுக்கு அப்படி ஒன்றும் வயது ஆகிவிட வில்லை. அவளை ஒத்த பெண்கள் கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு பெற்றவர்களின் அரவணைப்பில் ஆனந்தமாக வீட்டில் பல எதிர்பார்ப்புகளுடன் தங்கி யிருந்தனர். அம்மா பார்வதிதான் அவசரப்பட்டுக்கொண்டு கண் போல கட்டிக்காத்து வளர்த்த தங்கையை ஒரு கோழைப் பயலுக்கு கட்டிக் கொடுத்து விட்டிருக்கிறாள். தீயாக நெஞ்சில் ஆத்திரம் புரள, அவனையும் மீறிக் கத்தி விட்டான்.

''உன் மாமியார் பொய் சொல்றா. நாம் அப்படிச் செய்வதாக எதுவும் ஒப்புக் கொள்ளவில்லை. அம்மாவிட மிருந்த கடைசி நகையான அந்த கெட்டிக் கொலுசை அழிச்சு உனக்கு தாலி சரடு பண்ணினா. கைக்கு ஒரு ஜோடி வளையல் போட்டா. வைர மூக்குத்தி என்ற பேச்சே கல்யாணத்தின் போது எடுக்கவேயில்லை. இப்போ என்ன திடீர்னு ஒரு பொய்யைச் சொல்லி உன்னை இங்கே அனுப்பியிருக்கா உன் மாமியார். அவர்கள் கேட்கிறபடி பார்த்தால் இன்னும் ஆறு பவுன் நகைகளும் - ஒரு வைர மூக்குத்தியும் தேவைப்படும். இவைகள் வாங்க எங்ககிட்ட பணமேது - திருடினால் ஒழிய.''

அவன் முடிக்குமுன் சரோஜா குமுறிக்குமுறி அழத் தொடங்கிவிட்டாள். ''அவர்களுக்கு எப்படியோ நம்

அப்பா சமாச்சாரம் தெரிஞ்சு போயிருக்கு அம்மா. ஒரு நாள் என் நாத்தனார் என்கிட்ட சொன்னா. 'உங்கப்பா எங்கேயோ வடக்கே சந்யாசம் வாங்கிக் கொண்டு விட்டதாக உங்கம்மா புளுகினாளே. உங்கப்பா புடவைக் கடையொன்றில் காசைத் திருடிட்டு ஓடிப்போன வராமே'ன்னு நறுக்குன்னு கேட்டுட்டா. அப்போ நான் ஒரேயடியா மறுத்துப் பேசினேன். மாமியார் தன் பெண்ணோட சேர்ந்துண்டு நம்ப குடும்பத்தைரொம்ப கேவலமா பேசினபோது -'' மேலே சொல்லமுடியாது திக்கித் திணறினாள். குலுங்கக் குலுங்க அழுதாள்.

அம்மாவின் கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் துளிகள் சிந்தின.

அவன் கண்களில் நெருப்புப் பொறி பறந்தது.

''நான் ஒண்ணும் உண்மையை மறைக்கலையே. சம்பந்தி வீட்டவர்கள் சார்பில் வந்த அந்த தாடிக் கிழவர் கிட்டே நடந்த விஷயத்தை ஒளிக்காமல் சொன்னேன். அவர்தான் என்னை அதைப்பற்றி ஏதும் பேச வேண்டோம்னு தடை போட்டார்.

''ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணத்தை நடத்தி வைக்கணும்பா. நீ உண்மையைச் சொல்றே. அதுக்காக உன்னை நான் ரொம்ப சிலாகிச்சுக்கிறேன். உன் கணவர் செய்த அந்தக் காரியம் எப்பவோ நடந்தது. நீ பேசாம இரு. நான் உன் இஷ்டப்படி அதைப்பத்தி சம்பந்தி அம்மாகிட்டே பேசிடறேன். உன் கணவர் செய்த அயோக்கியத்தனத்துக்கு இந்தக் குழந்தையின் வாழ்க்கையை ஏன் மாசுபடுத்தணும்' அப்படின்னார். அவர்தான் இந்த சந்நியாசக் கதையைக் கட்டி விட்டவர்.



அவர் நல்லதை உத்தேசித்து செய்தார்'' அம்மா படபடவென்று பேசினாள்.

''உன்கிட்ட இதைச் சொல்லி உன் மனசை நோக வைக்க வேண்டாம்னு நானும் பேசாமல்தான் இருந்தேன். உன் புக்ககத்தை பத்தியும் ஒரு கதை பரவலாகப் பேசப்படறது உனக்குத் தெரியுமா? கல்யாணம் பேச வந்த அந்த தாடி மனிதர் அதையும் எங்ககிட்ட சொல்லி விட்டுத்தான் போனார். உன் நாத்தனார் கல்யாணத்துக்கு முன்னால் தன்னோட பள்ளிக்கூடத்திலே படிச்ச வேறு ஒரு ஜாதிப் பையனோட சிநேகமா இருந்தாளாம். கல்யாணமான பிறகு இதைத் தெரிந்து கொண்ட அவளுடைய புக்ககத்துக்காரர்கள் உன் மாமியார் கண்களில் விரலைவிட்டு ஆட்டினார்களாம். அவளை டைவர்ஸ் பண்ணி தன் பிள்ளைக்கு வேறு ஒரு நல்ல பெண்ணை பார்த்துக் கல்யாணம் செய்து வைக்கப் போறதாக பயமுறுத்தினார்களாம். அப்படி நடக்குறதுக்குள்ளே இயற்கை முந்திக் கொண்டு விட்டது. உன் நாத்தனார் புருஷன் ஏதோ காய்ச்சல் வந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டான். வீடு திரும்பலை. உன் நாத்தனார் விதவையாகி வீடு வந்து சேர்ந்துவிட்டிருக்கிறாள். அவன் உயிரோடு இருந்தால் விவாகரத்தாகி வீடு வந்து சேர்ந்திருப்பாள். அவளை வாயை மூடிக்கச் சொல், இல்லாட்டா நானே வந்து அந்த கடந்த காலக் காதலை எடுத்து எல்லார் முன்னாலும் போட்டு உடைச்சு அவள் முகத்திலே கரியைப் பூசிவிடுவேன்'' ஆத்திரத்துடன் உரக்கக் கத்தினான் சபரிநாதன்.

''சபரி! என்ன வார்த்தை சொல்றே! அப்படி செஞ்சா நம்ப பெண் வாழ்க்கை பாழாகிவிடுமே, அந்த ராட்சசி

பழி வாங்கிடுவாளே, கண்ணில் படாதது மண்ணில் மறைஞ்சு போகட்டும். நமக்கேன் வம்பு சபரி. இதில் நீ ஆத்திரப்பட்டுக்கொண்டு ஏதாவது கோளாறு பண்ணிடாதே'' அம்மா இடைமறித்தாள்.

ஒரு கல்யாண வீட்டில் அம்மா, முதல் நாள் செய்த வேலைக்குத் தன் பரிசாக எடுத்து வந்த பலகாரம் அத்தனையையும் ஒரு ட்ப்பாவில் நிறைத்து மகளிடம் கொடுத்து கை செலவுக்குப் பத்து ரூபாய்களைத் தந்து...

''கொஞ்சம் மாமியாரிடம் அவகாசம் கேட்டுவை. எப்படியாவது பாடுபட்டு நகையில் ஏற்பட்ட குறையை நிவர்த்தி செய்து விடுகிறோம்னு சொல்லு'' என்று உபதேசித்து மாமியார் வீடுவரை கூட துணையாகச் சென்று அவளை விட்டுவர மகனை ஏவினாள்.

பஸ் பயண முழுவதும் அண்ணனும் தங்கையும் ஏதும் பேசவேயில்லை. நிலையத்திலிறங்கி அவளது புக்ககத்தை நோக்கி நடக்கும்போது அவன் சொன்னான்.

''மேலும் அவர்கள் உன்னை நகைக்காக துன்புறுத் தினால் நீ உடனே பஸ் ஏறி வீட்டுக்கு வந்துடு. மத்ததை நான் பார்த்துக்கிறேன்'' என்று சவால் விட்டான்.

அதற்குப் பின் நாட்கள் வேகமாக நகர்ந்தன. சரோஜா பிறந்தகத்திற்கு வரவேயில்லை.

அவன் வேலைக்குப் போய்க்கொண்டு வந்தான். அம்மா வழக்கம் போல விடியற்காலையில் எழுந்து குளித்துவிட்டு வேகமாக சமையலை முடித்து மேடை மீது வைத்துவிட்டு - தன் சமையல் பாத்திரங்களுடன் ஒரு ரிக்ஷாவில் வேலைக்குக் கிளம்பிவிடுவாள். அவன் தானே



காலை சாப்பாட்டை எடுத்துப் போட்டுக் கொண்டு சாப்பிட்டு முடித்த கையுடன் தானே கொஞ்சம் தயிர் சாதம் கலந்து அலுமினிய டப்பாவில் அடைத்துக் கொண்டு வீடடைப் பூட்டிக் கொண்டு கிளம்பிவிட்டால், பிறகு அம்மாவும் பிள்ளையும் பார்த்துக்கொள்வது இரவு சாப்பாட்டின் போதுதான். கூடியவரை அம்மா தன் மகளின் புக்ககத்தைப் பற்றி பேசாதிருந்தாள். அவனும் தங்கை வீட்டவர்களை விட்டு மற்ற ஊர் சங்கதிகளைத்தான் அம்மாவிடம் பேசினான்.

பல்லைத் தேய்த்து முடித்ததும் பிரஷ்ஷை உள்ளே கொண்டுவந்து அலமாரியில் வைத்துவிட்டு சோப்பு பெட்டி, துவாலை சகிதம் பின்னால் சென்றான். கிணற்றிலிருந்து இரண்டு வாளி நீரை இரைத்து பிளாஸ்டிக் பக்கெட்டில் நிறைத்துக் கொண்டான். தோய்க்கும் கல்மீது உட்கார்ந்தபடி செம்பால் மொண்டு தலையில் கொட்டிக் கொண்டபோது தண்ணீர் சில்லென்று உச்சந் தலையி லிருந்து உள்ளங்கால் வரை ஒரு பிடி பிடித்தது. முதல்நாள் பிசுபிசுத்த மழையினால் ஊதல் காற்று கிளம்பி விட்டிருந்தது. பற்கள் தந்தியடிக்க - உடல் நடுங்க - மேலே தொடர்ந்து இன்னும் சில செம்பு தண்ணீரை ஊற்றிக் கொண்டு அவசரமாய் சோப்பை உடலில் தீத்திக் கொண்டு குளியலை முடித்து விட்டுத் துவாலையால் தலையைத் துவட்டி கொண்டு நனைந்த ஆடைகளை மாற்றிக் கொள்ள உள்ளே ஓடிவந்தான். இரவு அணிந்திருந்த லுங்கி - உள்ளாடைகளை அலசிப் பிழிந்து கொடியில் போட்டு விட்டு மாற்று வேட்டி அணிந்து - நெற்றியில் திருநீறு அப்பிக் கொண்டு கூடத்து சுவற்றில் தொங்கிய அம்மா

படத்தை நமஸ்கரித்துவிட்டு - அவன் சமையலறை பக்கம் திரும்பியபோது வாசல் கதவு தட்டப்பட்டது.

வேலு முதலியார் - பாவி மனுஷன் அதற்குள்ளாகவா வாடகைக்கு வந்துவிட்டார்?

அடி வயிற்றைப் பிசைந்த திகிலுடன் வாயிற் கதவை திறந்தான்.

பால்காரன் பாவாடை தகரக்குவளையும் அளக்கும் உழக்குமாக நின்று கொண்டிருந்தான்.

''பிடி ஐயா பாத்திரத்தை. கால வேளையிலே எனக்கு எத்தனை இடத்துக்குப் போகணும்'' - சொல்லிக் கொண்டே பின்னால் உள்ளே வந்தான் பாவாடை. மேஜைமீது தயாராக வைத்திருந்த ஸ்டீல் பாத்திரத்தை எடுத்து சப்ரி நீட்டினான். இது அம்மா காலத்திலிருந்து தொடர்ந்த வழக்கம். அம்மாவுக்கு புட்டிப்பால் பிடிக்காது. வாசலில் மாட்டை நிற்கவைத்து கறந்து தரும் பாலைத்தான் வாங்குவாள். அவள் வாங்கிய கொஞ்சம் பாலுக்கு மாட்டை வாசலில் கட்டிக் கறக்க - பாவாடை நாளடைவில் இடக்கு செய்ய ஆரம்பிக்கவே - கைப்பாலாவது கொடுக்கட்டும் என்று அனுமதித்தாள்.

பாவாடை துணிச்சலுடன் ஐம்பது சதவிகிதத்திற்கு அதிகமாகவே தண்ணீரை கலந்து பால் என்று ஊற்றிக் கொண்டிருந்தான்.

மாதம் முடிந்ததும் பணம் என்று நச்சரித்துக் கொல்லமாட்டான். கொடுக்கும் போது வாங்கிக் கொள்வான் என்றதொரு குணத்திற்காக அவன் கொடுத்த தண்ணீர் பாலை அம்மா தொடர்ந்து வாங்கிக் கொண்டிருந்தாள். அவளுக்குப் பின்னும் அதே வழக்கம் தொடர்ந்தது. பாவாடைக்கு இரண்டு மாத பால் பணம் பாக்கி...



''என்ன ஐயா...! கம்பெனியிலே சம்பளம் போட மறந்துட்டாங்களா...'' ஞாபகப்படுத்திய வண்ணம் பாலை பாத்திரத்தில் அளந்து ஊற்றினான். அரை லிட்டர்பால், அதிலே காப்பி, தயிர், மோர் எல்லாம் கவனித்துக் கொள்ள வேண்டிய நிலை. அதற்குக்கூட உடனடியாக பணம் கொடுத்து சமாளிக்க முடியாதபடி அவன் நிலைமை மோசமாகிவிட்டிருந்தது.

''பாவாடை, பத்து நாள் பொறுத்துக்கோங்க. எல்லாத்தையும் மொத்தமாக கட்டிடறேன், அம்மாவோட மாதத்திவசம் வந்ததா, அதனாலே...''

''ச்சோச்சோ...'' அனுதாபப்பட்டான் பாவாடை. அம்மா உயிருடன் இருந்தபோது அவனுக்கும் அடிக்கடி கல்யாண வீட்டுப் பலகாரம் சுத்தமான நெய்யில் செய்த லட்டு எல்லாம் கிடைத்துக் கொண்டிருந்தன. ''பாவம் மகராசி, போயிட்டாங்க... நீதான் ஒண்டிக்கட்டையா திண்டாடுரே. பத்துநாள் கழிச்சாவது பார்த்து போட்டு குடுத்துடு தம்பி. மாட்டுக்குத் தீவனம் வாங்கணும் இல்லையா...'' கேட்டபடி அவன் வெளியேறினான்.

கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்து அவசரமாக காஸ் அடுப்பை மூட்டினான். அம்மா செய்து விட்டுப்போன புண்ணிய காரியங்களில் அந்த அடுப்பும் ஒன்று. சில நிமிஷங்களில் தண்ணீரைப் பொங்க வைத்து டிகாக்ஷனை இறக்கி கொஞ்சம் பாலைக்காய்ச்சி தானே காப்பி போட்டு சாப்பிட சுலபமாக இருந்தது. ஆனால்

காஸ் தீர்ந்துவிடும் தருவாயிலிருந்தது. அடுத்த சிலிண்டர் வாங்க அவனிடம் பணம் இல்லையே?

காப்பியைக் கலந்து டம்ளரில் நிறைத்துக் கொண்டு வந்து கூடத்தில் உட்கார்ந்தான்.

மெல்ல காப்பியை உறிஞ்சிக் கொண்டு அம்மா படத்தைப் பார்த்தபோது சே-! இதென்ன காப்பி உப்புக்கரிக்கிறதே என்று திடுக்கிட்டு டம்ளரைக் கீழே வைத்தான். கூடத்து தூணில் தொங்கிய சிறு கண்ணாடியில் அவன் முகம் தெரிந்தது.

ஆண்பிள்ளை அழக்கூடாது என்று மனம் பிடிவாதத்துடன் பழைய நினைவுகளை அலசிக் கொண்டிருந்தது. ஆனால் உணர்வுகள் கொந்தளித்து கண்களில் நீரை மல்கச் செய்து அவனையுமறியாது கன்னங்களில் கோடாக ஓடி - உதட்டை நனைத்துக் கொண்டிருந்தது.

எதற்கெடுத்தாலும் கண்ணீர் விடும் பெண் பிள்ளையைப் போல ஒரு ஆண் மகன் அழக்கூடாது. துணிவாக இருக்க வேண்டும். ஆனால் அதற்கும் ஒரு எல்லை உண்டல்லவா? அவன் ஆண் மகன்தான் - துணிச்சலானவன்தான், ஆனால் தொடர்ந்து எத்தனை அதிர்ச்சிகளை - அடிகளைத் தாங்கிக் கொள்ள இயலும்?

சரோஜாவின் கோர மரணத்தைக் குறித்து அவனுள் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்குள் அம்மா மாரடைப்பில் மறைந்து அவனுக்குத் தந்த அந்த வேதனையான அடி - அப்பப்பா...

இதெல்லாம் போதாதுபோல காதலி போல நடித்து கடைசியில் அவன் வேலைக்கே வெடி வைத்த அந்த கிராதகி வசந்தா தந்த அதிர்ச்சி.



தங்கையும் தாயும் போய் விட்டனர். அவன் துயரத்தை அடக்கிக் கொண்டு வேலைக்குப் போய் வந்து கொண்டு இருந்தான்.

தாயின் மறைவினால் ஏற்பட்ட செலவுகளை சமாளிக்க திண்டாடிக்கொண்டு, பால்காரரிடமிருந்து வீட்டு வாடகை வரை பல பாக்கிகள் பயமுறுத்த தனிமையில் தள்ளாடிய அவனை முதலாளி கூப்பிட்டு இருபத்து நான்கு மணிநேரம் முன்னறிவிப்புடன் வேலையிலிருந்து நீக்கிவிட்டார்.

''உன்னை ரொம்ப நல்லவன்னு நினைச்சேன். நீ பெரிய புளியங்கொம்பை பிடிக்க திட்டமிட்டிருக்கிறது புரிகிறது. இப்படிப்பட்ட நயவஞ்சகனை தொடர்ந்து என் அலுவலகத்திலே வச்சிருந்தா என் மானம் கப்பலேறிடும்'' என்று வெறுப்புடன் பேசிவிட்டு தயாராக வைத்திருந்த கடிதத்தை நீட்டி ''ஆரம்ப அறிவிப்புப்படி இருபத்து நான்கு மணி நேரம் நோட்டீஸ் கொடுத்துட்டேன். ஹெட் கிளார்க்குகிட்ட சம்பளத்தை வாங்கிக்கொண்டு நடையைக் கட்டு. தற்காலிகமாக வைத்துக்கொண்ட ஊழியர் நீ. நல்லவேளை உன் வேலை இன்னமும் நிரந்தரமாக்கப் படவில்லை. அதனால் நான் பல தலைவலிகளிலிருந்து பிழைத்தேன்'' கடுமையாகப் பேசிவிட்டு ஃபைல்கள் பக்கம் திரும்பினார்.

வேலைக்கு சீட்டுக் கிழிக்கப்பட்டுவிட்டது. அதற்குப் பின் ஆட்சேபித்துக் கொண்டிருப்பதனால் பயன்-?

சம்பளத்துடன் வீட்டுக்கு வந்தான். அதை வைத்துக் கொண்டு சில நாட்கள் ஓட்டினான். அதற்குப் பின்

எத்தனையோ இடங்களில் அவன் வேலைக்காக அலைந்தான்.

அம்மாவுக்கு இருந்த திறமையோ, செல்வாக்கோ, சாமர்த்தியமோ அவனுக்கு இருக்கவில்லை.

அம்மா உயிருடன் இருந்திருந்தால் இத்தனை நாளில் யார் காலிலாவது விழுந்து அவனுக்கு வேறு ஒரு வேலை தேடிக்கொடுத்திருப்பாள். அவள்தான் போய்விட்டாள். அந்த வசந்தா சண்டாளியைக்கூட எங்குமே பார்க்க முடியவில்லையே. அவனால் பார்க்க முடிந்தால் சங்கு போன்ற அந்த கழுத்தை நெரித்து... வாயில் கதவு பட படவென்று தட்டப்பட்டதும் திடுக்கிட்டு சிந்தனைகளை உதறிவிட்டு வேகமாக சென்று திறந்தான்.

வழக்கம்போல மாதம் பிறந்த முதல் ஞாயிறு காலை வாடகையை வசூலிக்க வீட்டுக்காரர் வேலு முதலியார் வந்திருந்தார்.

நரை கோடுகள் தெரியாது டை அடித்த கிராப்பு முடியை அழுத்தமாக வாரிவிட்டுக்கொண்டு மீசைக்கு நன்றாக எண்ணெயிட்டுக் கொண்டு - சரிகை அங்க வஸ்திரம் வெள்ளை மல்ஜிப்பாவில் புரள - பட்டுக்கரை வேட்டியில் மாப்பிள்ளைபோல - அள்ளி மேலே தெளித்துக் கொண்டு இருந்த அத்தரின் மனம் குடலைப் புரட்ட பற்கள் அனைத்தையும் காட்டியபடி "என்னப்பா சபரி, சவுக்கியம் எப்படி?" என்றபடி அவனைத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தார்.



## 4

"ஏம்பா சபரி, நீ லீவு எடுத்துக்கிட்டிருக்கியா... நாலு நாளா நான் இந்தப் பக்கம் போறச்சே வீட்டு ஜன்னல் கதவு சாத்தி இருப்பதைப் பார்த்தேன் - கதவு உள்ளாரத் தாப்பாள் போடப்பட்டிருந்தது. உடம்புக்கு ஏதாச்சும் காய்ச்சலோ என்னமோ - ஒய்வா படுத்திருக்கிறவனை ஏன் தொந்தரவு செய்யணும்னு நான் கதவைத் தட்டாம போயிட்டு இருந்தேன். ஆமாம், சம்பளம் வாங்கியிருப்பியே, மூணு மாச வாடகை பாக்கி அப்படியே நிக்குது. உன் தாயார் மகராசி மாரடைப்பிலே போயிட்டாங்களேங்கிற அந்த வருத்தத்திலே நீ கஷ்டப்பட்டுக்கிட்டிருக்கேன்னு தயவு காட்டிட்டு வந்தேன். இனிமேல் தாங்காதப்பா. உனக்கு ஆயிரம் செலவிருக்கும். அதற்கு நான் பொறுப்பாளியா" அங்கவஸ்திரத்தின் முனையால் கூடத்தில் கிடந்த ஒரே ஒரு பழைய நாற்காலி மீது படிந்து கிடந்த தூசியை மெல்ல தட்டிவிட்டு உட்கார்ந்து கொண்டார்.

"என்ன உனக்கு மட்டும் காப்பி போட்டு வச்சுக் கொண்டிருக்கே? நான் வருவேன்னு தெரியும். எனக்கும் ஒரு டம்ளர் காப்பி தரக் கூடாது. உங்க அம்மா இருந்தப்போ காப்பி - பலகாரம் எல்லாம் கிடைக்கும். சும்மா சொல்லக் கூடாது அந்த மகராசிக்கு ரொம்ப தாராள மனசு. நெய் முறுக்கு கையில் எடுத்து வர்றச்ச அப்படியே பொல பொலன்னு உதிர்ந்து வாயில் வெண்ணையா கரைஞ்சிடும்."

மேலே அவரைப் பேச விடாது தடுக்க அவசரமாக சமையல் அறைக்குள் புகுந்து மீதமிருந்த டிகாக்ஷனுடன்

பாலைக் காய்ச்சி காப்பி கலந்து கொண்டு வந்து மேஜை மீது வைத்தான் சபரிநாதன்.

காப்பியை ஒருவாய் உறிஞ்சிவிட்டு வேலு முதலியார் மீசையைத் தன் அங்கவஸ்திரத்தினால் துடைத்துக் கொண்டார்.

''உங்கம்மா போலவே நீயும் 'ஏ ஒன்' காப்பி போடறியே - நல்லா கூட சமைப்பே போலிருக்கே. நீ கூட பேசாம வேலைக்கு முழுக்குப் போட்டுட்டு உங்கம்மா செஞ்சுகிட்டிருந்த தொழிலை நடத்தினா ரொம்பவே முன்னுக்கு வந்திடுவே.''

''அதுக்கு நான் பி.காம் வரை படிச்சிருக்கத் தேவை யில்லையே'' ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு மெல்லிய குரலில் கேட்டான்.

''படிச்ச படிப்புக்கு தக்கவேலை இப்போ உங்களைப் போல இளைஞர்களுக்குக் கிடைக்க மாட்டேங்குது - அதுக்காக படிப்புங்கிற அந்தஸ்தை நினைச்சுக்கிட்டு உச்சாணி கொம்பிலே உட்கார்ந்திருந்தா அங்கேயே உட்கார்ந்திருக்க வேண்டியதுதான். பல்லக்கிலே ஏறத் தெரிஞ்சுக்கணும் - அத்தோட அதை தூக்கவும் தெரிஞ் சுக்கணும். தங்கசாலை தெருவிலே நானக்ராம் மிட்டாய் கடைங்கிறதை கேள்விப்பட்டிருப்பியே. பண்டிகை சமயங்களில் அந்தக் கடை மிட்டாய் வாங்க ஒரு பெரிய க்யூ... செண்ட்ரல் ஸ்டேஷன் வரை நிற்கும். லட்சக் கணக்கிலே பணம் புரளும். ஒரே ஒரு கடை அதுதான். இத்தனைக்கும் அந்த கடையில் கல்லா பெட்டியருகே உட்கார்ந்திருக்கும் வழுக்கைத்தலை கிழவன் நானக்ராம் - முப்பது வருடத்துக்கு முந்தி கையில் ஒரு இரும்பு



வாணலியும் - ஜல்லிக்கரண்டியுமாகத்தான் இந்த ஊருக்கு வந்தான் - இப்போ அவன் பேரன்கள் ஆளுக்கு ஒரு பென்ஸ்கார் - பங்களான்னு தடபுடலாக வாழ்கிறாங்க. ஒருத்தனும் பி.ஏ., எம்.ஏ.ன்னு படிக்கப் போகலை. எஸ்.எஸ்.எல்.சி.யோட நிறுத்திகிட்டு கடையில் உதவ புகுந்துட்டான்க, வடக்கேயிருந்து வெறுங்கையோட வர இவங்கள்ளாம் உழைப்பால உயர்ந்துடறாங்க. தமிழ் நாட்டிலே பிறந்து வளர்ந்த நம்மால் முடியாதா? சிந்தித்துப்பார்...''

''அப்போ என்னைக் கல்யாணப் பட்சணம் செய்யத் தொடங்கச் சொல்றீங்க...''

''அட ஒரு தனி மிட்டாய்கடை ஆரம்பிச்சா என்னான்னு யோசனை சொன்னேன். தொழிலில் என்ன கேவலம் இருக்கு. சொல்லு. கடுமையாக உழைக்கும் எல்லா தொழிலிலும் அந்த சரஸ்வதி தேவியே குடியிருக்கான்னு பாரதி சொல்லி இருக்காரே...''

பரவாயில்லையே. வேலு முதலியாருக்கு தமிழ் எழுதப் படிக்கவே தகறார். பாரதியை உதாரணம் காட்டுமளவு அறிவை வளர்த்துக் கொண்டிருக்கிறாரே, வியப்புத் தாங்காது சிரித்தான் சபரிநாதன்.

''நீங்க சொல்றது சரிதான் ஸார். நடிகர்களின் பிள்ளைகள் நடிப்புத்துறையில் ஈடுபடுவதும் டாக்டர் களின் பிள்ளை, பெண்கள் டாக்டருக்குப் படிப்பதும், பாடகர்களின் குழந்தைகள் பெற்றோர்களின் கலையைத் தொடர்வதும் இப்போ சகஜமாகிவிட்டது.

''அதனாலே நானும் என் தாய் செய்து வந்த தொழிலைத் தொடர்ந்தால் ஒரு சமயம் நீங்க

சொல்றாப்பல பென்ஸ்கார், பங்களா முதலிய சுகங்களை அனுபவிப்பேனோ என்னவோ... இதைப்பற்றி சிந்திக்க வேண்டியது அவசியந்தான்.''

''அட, நான் ஒரு பேச்சுக்குச் சொன்னேன். கடை வைக்க முதல் தேவை. அதுக்கு முன்னாடி நீ என் வாடகை பாக்கியைத் தீர்த்துடு. ஒரு வாரம் அவகாசம் தரேன். எல்லாம் மொத்தமா கைக்கு வந்துடணும். வேறே சால்ஜாப்புகளுக்கு ஒப்புக்க மாட்டேன்.''

காப்பியை வேகமாகப் பருகினார். திடீரென்று ஏற்பட்ட கவலையில் வியர்வை துளிர்த்த முகத்தை அங்கவஸ்திரத்தினால் அழுத்தி துடைத்துக் கொண்டார். சட்டென்று நாற்காலியினின்று எழுந்தார்.

''இப்போ பார்த்துக் கொண்டிருக்கிற வேலையைச் சட்டுனு வுட்டுடாதே. கையில் கொஞ்சம் முதல் சேர்த்துக் கிட்டு பிறகு விடலாம். நான் சொன்ன யோசனையைப் பத்தி நினைச்சுப் பார்க்கலாம். அவசரப்படாதேயப்பா'' என்றவர் சுவரில் தொங்கிய அவனின் தாயின் படத்தைப் பார்த்தார்.

''மகராசி, பூவும் பொட்டுமாகப் போய்ச் சேர்ந்துட்டாங்க.''

''ஆமாம் சவுரி... சாவுக்குப் பிறகு கூட உன்னால் உன் அப்பாவைத் தேடிக் கண்டுபிடிக்க முடியலையா?''

அந்தரங்கமிக்க அவனது சொந்த விஷயத்தில் வாடகை பாக்கி என்ற காரணத்தினால் துணிவுடன் பிரவேசிக்கிறார் என்று கோபம் குமுறிக் கொண்டு வந்தது.

''வடக்கே ஒரு ஆஸ்ரமத்திலே அவர் வசிக்கிறார். அம்மா மறைவைப் பத்தி ஒரு கார்டு போட்டுவிட்டேன்.



பதில் இல்லை. பதில் போடக்கூடாது. சந்நியாசியாகி விட்டபின் மனைவி மக்கள் என்கிற உறவு கிடையாது. ஆனால் இறந்தது அவர் தாயாக இருந்தால் கொள்ளிபோட அவசியம் வந்திருப்பார். இறந்தவள் - அவர் கிரகஸ்தராக இருந்தபோது - அவர் மனைவி, இப்போ யாரோ? நீங்க படிச்சவங்க - உங்களுக்குத் தெரியாத விஷயமா?'' சற்று குத்தலாகப் பேசினான் சபரி.

''ஆமாம்! நீ சொல்வது சரிதான். அவர் வரமுடியாது. உன்னோட இனி தொடர்பு கொள்ளக் கூடாது. சரி, வாடகையைப் பத்தி கவனி. ஒரு வாரம் டயம் கொடுத்திருக்கேன்'' அங்கவஸ்திரத்தை தடவிக்கொண்டு அவர் உட்கார்ந்த - நின்ற இடங்களில் அந்த நாற்றம் பிடித்த - குடலைப் புரட்டிய அத்தரின் மணத்தையும், அவன் மறக்க விரும்பின அப்பாவின் நினைவையும் நிற்க விட்டு விட்டு' வெளியே நடையைக் கட்டினார் வீட்டுக்காரர்.

ஓங்கி வாயிற்கதவை சாத்திவிட்டு உள்ளே வந்தான். மேஜைமீது மீதமிருந்த அவன் காப்பி பச்சைத்தண்ணியாக ஆறிவிட்டிருந்தது. ஒரு வாயாக அதை குடித்துவிட்டு டம்ளரை கீழே வைத்த அவன் மனம் ஆறாத, நெருப்பாக எரிந்தது. டம்ளர்களை கழுவி அடுப்பு மேடை மீது கவிழ்த்துவிட்டு பால் பாத்திரத்தைப் பார்த்தான். பகல் வேளைக்கு காப்பிக்கு ஒதுக்கி வைத்திருந்த பால் காலி. சட்டைப்பையில் கொஞ்சம் சில்லரை இருந்தது. காலை வேளை டிபனுக்கு மூலக்கடை ஓட்டலில் மூன்று இட்லியும் காப்பியும் வாங்கி சாப்பிட அது போதும். அதற்குப் பின்னர்?

லீவு எடுத்துக் கொண்டிருக்கிறாயா தம்பி - என்று வேலு முதலியார் கேட்டபோது எனக்கு இனி எப்போதும்

லீவுதான் சார் என்று சொல்ல வேண்டும் போல ஆத்திரத்தில் துடித்தது உண்மை.

வாடகை பாக்கி என்ற காரணம் அவன் நாவுக்குக் கடிவாளம் போட்டு கோழையாக்கிவிட்டது. வேண்டாத விவகாரங்களை மனிதன் கிண்டி விட்டு விட்டுப்போய் விட்டார்.

வேதனையில், கடந்துபோன அந்த சங்கதிதான் அத்தனையும் கோர்வையாக மனதில் நிற்க - தாங்க முடியாத துயரத்திலே துடித்துக் கொண்டு நிற்கிறவன் அவன் தானே இப்போது.

எல்லாம் இப்பொழுதுதான் நடந்தது போலத் தெரிந்தன.

''சபரி ஸார். உங்களை மானேஜிங் டைரக்டர் கூப்பிடுகிறார்'' என்ற குரல் கேட்டு மேஜை மீது பரத்தலாக வைத்துக்கொண்டு பார்வையிட்டுக் கொண்டிருந்த ஃபைலை படக்கென்று மூடிவிட்டு எழுந்தான்.

ஏ.சி.யின் குளிர்ச்சியில் மேஜைமேலிருந்த ஆஸ்டிரேயில் புகைத்த சிகரெட்டின் மணத்துடன் தலைக்கு மேல் தொங்கிய திருமகள் படத்தருகே புகையிட்ட ஊது வத்தியின் வாசனைக் கலவையில் சுழல் நாற்காலியை அடைத்தபடி உட்கார்ந்திருந்த மானேஜிங் டைரக்டர் அந்த நிறுவனத்தின் முதலாளி கங்காதரன் முன் பவ்யமாக வந்து நின்றான்.

''ஒரு வருஷத்துக்கு முன்னாடி இங்கே வேலைக்கு அமர்த்தப்பட்ட பையன் சபரிநாதன் நீதானே? உன் வேலை எனக்குப் பிடிச்சிருக்கு. நேரத்தோட வரே எல்லாத்தையும்



ஒழுங்கா செய்து முடிக்கிறேன்னு ஹெட் கிளார்க்குக்கூட நேத்திக்கு சொன்னார்...''

ஏ.சி.அறையின் குளிர்ச்சியில் அந்த மகிழ்ச்சி அவன் உடலை வெட வெடக்கச் செய்தது.

''தாங்க்யூ ஸார்-'' என்றபடி தரையைப் பார்த்தான்.

''நம்ப ஆபீஸ் ஃபைல்களில் இதை முக்கியமா எடுத்துக் கொண்டு வரும்படி நம்ப ஆடிட்டர் கிட்டேயிருந்து போன் வந்தது. என்னத்தையோ செக்கப் பண்ணனுமாம். நம்ப கம்பெனிக்கு ஜீவா பிரதர்ஸ்தான் ஆடிட்டர்கள். அந்த கம்பெனி எங்கேயிருக்கு தெரியுமா? கிரீம்ஸ் ரோடிலே எவரெஸ்ட் எக்ஸ்டென்ஷன் என்கிற கட்டடத்திலே ஆறாவது மாடி. லிப்டிலிருந்து இறங்கியதுமே கண்ணாடி கதவில் ஜீவா பிரதர்ஸ்னு பேர் கண்களைப் பறிக்கும் ஆபீஸ் சைக்கிளை எடுத்துக் கொண்டு போய் கொடுத்திட்டு அக்கௌண்ட் செக்ஷனிலிருந்து ரசீது வாங்கிண்டு வரணும். உனக்கு சைக்கிளை விடத் தெரியுமில்லையா?''

தலையை அசைத்தான் பேச நாக்குப் புரள மறுத்தது. ஏ.சி.யின் குளிர்ச்சியை மீறி இப்போது வியர்த்துக் கொட்டியது.

''இந்தா ஃபைல்-'' என்று தடினமானதொரு ஃபைலை அவன் முன் எடுத்துப் போட்டார்.

சைக்கிளை உரிய இடத்தில் வைத்துப் பூட்டிவிட்டு லிப்டைப் பிடித்து ஆறாவது தளத்தை அடைந்து கண்ணாடிக் கதவைத் தள்ளிக் கொண்டு புன்னகையை அள்ளிக் கொட்டிய ரிஸப்ஷனிஸ்டிடம் கேட்டு அனுமதி

பெற்று கணக்கு வழக்குப் பகுதியின் தலைவரிடம் ஃபைலை சேர்ப்பிக்கச் சென்றான்.

''பெரிய அய்யா சொன்னார். கங்காதரன் அண்டு கோவிலிருந்து ஒரு ஃபைல் வரும், அதை நம்ப அக்கௌண்ட்செக்ஷன் தலைமைக்கணக்கரிடம் சேர்ப்பிக்க சொல்லுன்னு சொன்னார். இப்படி வாங்க இவங்கதான் இந்த செக்ஷனுக்கு தலைமை அதிகாரி''- பையன் கூறிவிட்டு பற்களைக் காட்டி முறுவலித்தபடி மாயமானான்.

மறுபடியும் அவனுக்கு உடல் முழுவதும் வியர்த்துக் கொட்டியது. தலைமை கணக்கர் என்றதும் தலைப்பாகையும் கருப்புக்கோட்டும் வாய் நிறைய வெற்றிலை குதப்பிக் கொண்டு ஒரு பட்டை நாமக்காரரை அங்கே எதிர்பார்த்தான்.

அதற்குப் பதில் கஞ்சி மொடமொடப்பிலே புஸ்ஸென்று விரிந்த வெள்ளை தாமரை மலர்போல தெரிந்த வெள்ளை வாயில் சேலைக்குள் தங்க நிறத்திலே ஒரு அழகான இளம்பெண் உட்கார்ந்திருந்தாள். ஒரே கணத்தில் அவனது கண்கள் அவளை காலோடு தலைவரை ஆராய்ந்து விட்டது. காதுகளில் முத்து ஸ்டட் - கழுத்தில் ஒரு போலி முத்துமாலை - ஒரு கையில் ஒரு தங்க வளையல் - இடது மணிக்கட்டில் ஒரு எச்.எம்.டி.வாட்ச், உதட்டில் லேசாக சாயம் - கண் இமைகளில் மைக்கோடு - நெற்றியில் குங்குமப் பொட்டு - அள்ளிக் கொண்டையாக போட்டுக் கொண்டிருந்த முடியின் ஒரு பக்கத்திலே ஒரு வெள்ளை ரோஜா மலர். கையில் ஒரு வீணைதான் பாக்கி. அதைக் கொடுத்துவிட்டால் அவர்கள் வீட்டு அலமாரியை அலங்கரித்த தேவதைகளின் படத்திலிருந்த சரஸ்வதியைப்



போல ரவிவர்மா தீட்டிய அந்த கலைவாணியைப் போல கன்னங்களும் கைகளும் கொழு கொழுவென்று...

''எஸ் ஸார் - உட்காருங்கோ, கங்காதரன் அண்டு கோவிலிருந்துதானே வரீங்க-'' நிலவு சிரித்தது போன்றதொரு பளிச்சென்ற புன்னகையுடன் அவனை அவள் உபசரித்தபோது தன் இதயத் துடிப்பு வேகமாகிவிட்டதை உணர்ந்தான்.

''மிஸ் வசந்தா'' என்று பிளாஸ்டிக்கில் பொறித்த பெயர்ப் பலகையொன்று மேஜையின் ஒரு பக்கத்தில் சாய்ந்த வாக்கில் நிற்பதைப் படித்தபடி நாற்காலியில் உட்கார்ந்தான் - அந்த அக்கௌண்ட் செக்ஷன் முழுதிலுமே வசந்தம் வந்துவிளையாடுவது போன்றதொரு பிரமிப்பில் பேசத் தோன்றாது மீண்டும் அவளை வியப்புடன் பார்த்தான்.

''மிஸ்டர் ஜீவா சீனியர் சொன்னார். இந்த ஃபைல் தான் தேவைப்படுகிறது. நீங்க கங்காதரன் அண்கோவில் வேலை பார்க்கிறீங்களா! இப்போ நாங்கள் டீ சாப்பிடற நேரம். நீங்களும் ஒரு கப் டீ சாப்பிடலாம். வரவழைக்கட்டுமா-'' என்றபடி அவன் கொடுத்த ஃபைலை வாங்கி ஒரு பக்கம் வைத்துவிட்டு மேஜையிலிருந்த மணியை அடித்தாள். அப்பொழுது பார்த்தான் - பிஞ்சு போன்ற அந்த விரல்களின் நகங்கள் லேசான நகப்பூச்சில் மின்னின.

தட்டில் டீ கோப்பைகளுடன் பையன் பிரசன்னமானான். ''ஐயாவுக்கும் ஒரு கப் வச்சிட்டுப் போ-'' என்று அவள் கூறியதும் அலுவலகப் பையன் அவன் எதிரே ஒரு கோப்பை தேனீரை வைத்துவிட்டு அப்பால் நகர்ந்தான்.

கங்காதரன் அண்ட் கோவில் அவன் ஒரு சாதாரண கணக்கர். ஆனால் அவள் அந்த ஆடிட்டரின் நிறுவனத்திலே தலைமை கிளார்க் - ஆயிரம் ரூபாய்க்குமேல் சம்பளம் வாங்கக்கூடும். பட்டதாரியாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த சின்ன வயதில் இத்தனை பெரிய பதவி கிட்டியிருக்குமோ? அந்தப் பகுதிக்கே தலைவியாக வேலை பார்த்தும் கர்வம் இன்றி எத்தனை தாழ்மையாக - அன்பாக இயல்பாகப் பேசுகிறாள்? வியப்புமேல் வியப்பாக வைத்த விழியைத் திருப்ப முடியாதபடி கோப்பையிலிருந்த டீயுடன் அவளது அழகையும் பருகிக்கொண்டிருந்தான்.

அதற்குப் பின்னர் அவன் தொடர்ந்து சில முறைகள் அந்த அலுவலகத்திற்கு ஃபைல்களைத் தூக்கி செல்ல நேர்ந்தது. அது தனது தனிப்பட்ட அதிர்ஷ்டம் என்றுதான் அவன் கருதினான்.

ஒவ்வொரு முறையும் அவள் முன்னைவிட அவன் கண்களுக்கு அழகாகத் தெரிந்தாள் - முன்னைவிட அன்பாகப் பேசி நெருங்குவதை உணர்ந்தான்.

ஒருநாள் பகல் உணவின்போது ஒரு ஃபைலுடன் போய்விட்டான்.

''உட்காருங்க மிஸ்டர் சபரிநாதன்'' என்றாள்.

தூக்கிவாரிப் போட்டது அவனுக்கு. அவன் பெயரைக் கூட அவள் எப்படியோ தெரிந்து கொண்டிருக் கிறாளே?

''ஆமாம், என் பெயர் உங்களுக்கு!'' தடுமாறினான்.

''ஒரு தடவை வந்தபோது ஆபீஸ் பையன் உங்கள் பெயரைக் கேட்டான். காதில் விழுந்தது.''



முத்து கோர்த்தாற்போல லேசாக தெரிந்த பல்வரிசை பற்கள் ஒளியிட மெல்ல சிரித்தாள். அந்த சிரிப்புக்கூட சங்கீதமாக அவன் காதுகளைத் தழுவியது.

''பகல் சாப்பாட்டு நேரத்திற்கு வந்திருக்கீங்க...!''

''மன்னிச்சுக்கோங்க, கொஞ்ச நேரம் பொறுத்து வரேன்...'' அவன் எழுந்திருக்க முயன்றபோது அவள் தடுத்தாள்.

''அதுக்கு சொல்லலை. பார்த்தால் பசியா இருக்காப்பல இருக்கு. அதனாலே நான் கொண்டு வந்திருக்கும் சாப்பாட்டை என்னோட பகிர்ந்து கொள்ளுங்க - பிறகு ஃபைல் விஷயமான காரியங்களை கவனிக்கலாம்.''

''வந்து...'' என்று தயங்கியபோது, ''வந்தாவது போயாவது, ஒரு பிடி சாப்பாட்டுக்குத்தானே நாமெல்லாம் உழைக்கிறோம். வேளைக்கு அதை சரியா கவனிக் காட்டா...'' மேஜையிலிருந்த மணியைத் தட்டினாள்.

''பையா, இன்னொரு தட்டு ஸ்பூன் எடுத்துக் கொண்டு வா. அப்படியே ஒரு கிளாசில் குடிக்க பில்டர் தண்ணி பிடிச்சு எடுத்து வா'' - உத்தரவிட்டாள்.

பையனுக்கு ஆவல் மண்டையை வெடித்தது. ஆமாம் இந்த இளைஞன் யார்? அம்மா ஏன் இப்படி உபசரிக்கிறாங்க?

அதைப் புரிந்து கொண்டவள் போல அவள் சொன்னாள்.

''இவரை யார்னு நினைக்கிறே. எங்க மாமனுடைய மகன். பல வருஷமா ரெண்டு குடும்பமும் சந்திக்காம இருந்தது - இப்போ சந்திக்கிறோம்.''

பையன் பெரிதாக பற்கள் தெரிய இளித்தான்.

''இந்தாங்க ஸார்...'' கூடுதலான மரியாதையுடன் தட்டையும் டம்ளரையும் அருகில் மேஜைமேல் வைத்தான்.

என்ன ஒரு பொய் சொல்றேன்னு பார்க்கிறீர்களா? அப்படி சொன்னா நீங்க இங்கே வந்தா பையனிடம் மரியாதை அதிகம் கிடைக்கும். என்னைப் பத்தியும் தப்பு கணக்குப் போட்டு கதை பரவாது'' கலகலவென்று சிரித்து விட்டு கையோடு தன் தோள் பையில் கொண்டு வந்திருந்த அலுமினிய டப்பாவைத் திறந்தாள்.

''கொஞ்சம் போதும் - என் அம்மா கட்டிக் கொடுத்த சாப்பாடு அப்படியே ஆபீசில் என் மேஜை டிராயரில் இருக்கு'' - மறுத்துப் பார்த்தான்.

''பரவாயில்லை. இது நானே தயாரித்த விஜிடபிள் பிரியாணி'' என்றபடி கம்மென்று மணத்த பிரியாணியில் பாதியை அவன் தட்டில் கொட்டினாள். தொட்டுக் கொள்ள வெங்காயப் பச்சடி. அம்மாவுக்கு பூண்டு மசாலா வாசனை பிடிக்காது. அதனால் வீட்டில் அவள் அதை செய்வதில்லை. ஆனால் அவனுக்குப் பிடிக்கும். அருகிலிருந்த ஓட்டலில் எப்பொழுதாவது கையில் காசிருந்தால் ஒரு பிளேட் விஜிடபிள் பிரியாணி வாங்கி ஒருபிடி பிடித்து விடுவது வழக்கம்.

ஸ்பூனால் அள்ளும்போதே வாயூறிப்போனான். உண்மையில் கையில் மிதந்த பிரியாணி வாய்க்கு ரொம்ப ருசியாகவே இருந்தது. பெண் பார்க்க அழகியாக இருக்கிறாள்... பணிவான குணம். படித்தவள் - புத்திசாலி இப்படிப்பட்டவள்... அதற்கு மேல் சிந்திக்க முடியாது அவன் லபக்கென்று உணவை விழுங்கினான்.



ஒரு துளி தன் சட்டை மேல் விழுந்துவிட்டதும் அவன் பதறிப்போனான்.

''நல்ல ஷர்ட் மேலே எண்ணெய்க் கறை பட்டுட்டதேன்னு கவலைப்படுகிறீர்களா? இருங்க'' என்றபடி அவள் அவசரமாக தன் தோள் பையைத் திறந்தாள். அதிலிருந்த ஒரு சிறிய டால்கம் பவுடர் டின்னை எடுத்தாள். வலது கை பகுதியிலே விழுந்திருக்கு...'' என்றபடி ரொம்பவும் சகஜமாக அந்த உணவுத் துளியை விரலால் தட்டிவிட்டு அது ஏற்படுத்தின கறை மீது பவுடரைத் தெளித்து நன்றாகத் தேய்த்து விட்டாள்.

'அப்படியே இருக்கட்டும். நாளைக்கு தோய்ச்சா கறை போயிடும். எண்ணெய்த் துளிகளை உடனடியா இந்த முறையில் நீக்கிடலாம்' என்றபோது அவளது விரல் அவன் முன்னங்கை மேல் ஏதேச்சையாகப் பட்ட போது அவன் உடல் புல்லரித்துப் போனான்.

நல்லவேளை, அம்மா அவன் ஆபீசுக்கு உடுத்த அதிகவிலை போட்டு வாங்கிக் கொடுத்த மூன்று ஷர்ட்டுகளில் ஒன்றை அவன் அணிந்து கொண்டிருந்தான் - அந்த இளம் பச்சை நிற சட்டையில் அவன் எப்பொழுதும் எடுப்பாகவே தெரிந்தான்.

அம்மா பார்வதி தனக்கில்லாவிடினும் தன் குழந்தைகள் நன்றாக உடுத்த வேண்டும் - சாப்பிட வேண்டும் - ஆரோக்கியமாக இருக்க வேண்டும் - நிறைய படிக்க வேண்டும் என்று விரும்புகிறவள்.

அதுவும் அலுவலக வேலைக்கு மகன் பளீரென்று உடுத்திக் கொண்டு போகவேண்டுமென்று ஆசைப்பட்டாள். மூன்று நல்ல பாண்டுகள் அதற்கேற்ற

ஷர்ட்டுகள் என்று பணத்தைப் பாராது வாங்கிக் கொடுத்திருந்தாள். அவன் கடைக்குத் துணி எடுக்கப் போனபோது அவளும் கூடவே வந்தாள். அந்த ஜட்ஜ் வீட்டுக்குப் பட்சணம் பண்ணப் போனபோது பார்த்தேன். அவர் பிள்ளை சின்னவன் காலேஜ் படிக்கிறான். இந்த கலர் ஷர்ட்டும் இந்த கலர் பாண்டும் போட்டுக் கொண்டிருந்தான். அப்பவே நினைச்சேன். நம்ப சபரிக்கு இது மாதிரி வாங்கிப் போட்டா அவன் நிறத்துக்கு ரொம்ப பொருத்தமாயிருக்கும்னு.''

அம்மாவுக்கு உணவு - உடை இவைகளில் ரொம்பவே ரசனை. தன் பிள்ளை ஓகோ என்று வாழவேண்டுமென்ற கனவு.

''இந்த ஷர்ட் உங்களுக்கு ரொம்ப நல்லாவே இருக்கு. என் கண் பட்டுவிட்டது. அதனால்தான் கொஞ்சம் அழுக்கு பட்டுவிட்டது...'' என்று அவள் மெல்ல சிரித்த போது அவனுக்கு அவளை ரொம்பவும் பிடித்துவிட்டது.

அம்மாவைப் போன்றதொரு பெண் கிடைத்தால் கல்யாணம் செய்து கொள்வேன் என்று பிடிவாதமாக இருந்ததால் - பிள்ளையார் இன்னும் பிரம்மச்சாரியாக அப்படி ஒரு பெண் மானிட குலத்திலாவது கிடைக்க மாட்டாளா என்று ஆற்றங்கரை அரசமரத்தடியிலும் - வாய்க்கால் கரையோர கோவிலிலும் உட்கார்ந்து கொண்டு தானே பெண்ணைத் தேடிக்கொண்டிருக்கிறார். அம்மா போலவே பெண் வேணும்னு நீ ஆரம்பிச்சா உனக்கு சட்டுனு கல்யாணம் ஆகாது. குற்றங்குறை இருக்கும். அதுகளைப் பார்க்காம நம்ப குடும்பத்துக்கு ஏத்த ஒருத்தி கிடைச்சா பேசாம கல்யாணம் பண்ணிக் கொண்டு. எனக்கு வயசாகிண்டு வரதடா சபரி...''



''என்ன ரொம்ப யோசிச்சுண்டு உட்கார்ந்திருக்கீங்க?'' தேனாக ஒலித்த குரல் அவனை திடுக்கிட வைத்தது.

வசந்தா... அழகியோடு மட்டுமல்ல. அம்மாவைப் போல பல நற்குணங்களையும் கொண்டவளாகத் தென்படுகிறாள். நகைச்சுவையோடு அம்மாவைப் போலவே மெல்லிய குரலில் ரொம்ப அழகா பேசுகிறாளே, பிள்ளையாருக்குக் கிட்டாத அதிர்ஷ்டம் அவனுக்குக் கிட்டிவிட்டிருக்கு. ஆனால் அவள் அந்தஸ்து எப்படியோ?

அதைப் பற்றியும் அவன் கவலைப்படத் தேவையில்லை என்ற ஒரு சந்தர்ப்பம் வெகு சீக்கிரத்தில் அமைந்துவிட்டது.

பஸ் நிலையத்திலே நின்று கொண்டிருந்த அவளைக் கண்டு ஒருநாள் மாலை அவன் திகைத்துப் போனான்.

''பஸ்சிலா நீங்க வீட்டுக்குப் போறீங்க.''

''சொந்தக் கார் இருக்குனு நினைச்சீங்களா - என் சம்பளத்துக்கு கார் வச்சுக்க கட்டுப்படியாகுமா?''

அவனையுமறியாது அவள் கூடவே பஸ்சில் பயணப் பட ஆசையாக இருந்தது அவனுக்கு.

''நானும் இந்த பக்கம்தான் போகிறேன்...'' தடுமாறினான்.

''ஒரு உதவி செய்றீங்களா, என்னோட கூட பஸ்ஸில் வாங்க - திருவல்லிக்கேணியில் ஒரு சிநேகிதி வீட்டில் ஒரு பார்சலை நான் கொடுத்துட்டு பிறகு மறுபடி பஸ்ஸில்

போகணும் - இருட்டிப் போயிடும் - கொஞ்சம் பயமாக இருக்கு...''

''கவலைப்படாதீங்க. நான்கூட வரேன்'' தாங்க முடியாத மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டான்.

அவள் மறுத்தும் அவனே இருவருக்கும் டிக்கெட் வாங்கினான். அவள் அந்த தெருவிற்குள் சென்று அந்த பார்சலை குறிப்பிட்ட வீட்டில் கொடுத்துவிட்டு வரும் வரை காத்திருந்தான். இருவரும் நடந்தார்கள்.

''கொஞ்ச நேரம் இப்படி கடற்கரை ஓரமா உட்கார்ந்துட்டு போகலாமா... கடல் மணல் மேலே காற்று வாங்க உட்காருவது எனக்கு ரொம்ப பிடிக்கும். ஆனால்...''

''நான் துணையாக வரேன் - போய் உட்காருவோம்...''

அவனது அன்பை - ஆசையை - எதிர்பார்ப்புகளை எல்லாம் அவள்தான் தூண்டில் போட்டு இழுப்பது போல ஈர்த்துக் கொண்டு போனாள். அவள் இழுத்த இழுப்புக் கெல்லாம் இணங்கினான். அப்படி அவள் மேல் ஒரு கிறக்கம்.

அன்றுதான் அவன் தன்னைப்பற்றி அவளிடம் உண்மையைச் சொல்லிக் கொண்டான்.

''நான் ரொம்ப சாதாரண குடும்பத்திலிருந்து வருகிறவன். என் தாய் பட்சணம் செய்து சம்பாதித்து எங்களை வளர்த்து ஆளாக்கினாங்க. என் சகோதரிக்குக் கல்யாணம் ஆயிட்டது - கங்காதரன் அன்கோவில் நான் ஒரு சாதாரண கிளார்க். தற்காலிகமாகத்தான் இருக்கிறேன்.



பி.காம். படிச்சிருக்கேன். மேலே சி.ஏ. பண்ண ஆசை - ஆனால் வசதி இல்லை. என் அப்பா எங்களை சின்ன வயதிலே விட்டுட்டு ஓடிப் போய்விட்டார்.''

''அட பாவமே...'' அவள் அனுதாபப்பட்டாள்.

''சும்மா ஓடலை வேலை செய்த இடத்திலிருந்து பணத்தைத் திருடிக்கொண்டு ஓடிவிட்டார். அம்மாதான் அந்த பணத்திற்கு ஈடு செய்ய உழைத்து கடைக்காரருக்கு பணம் கட்டினாள்.''

''உங்கப்பா திருடினார்னா அதுக்குக் காரணமும் பல இருக்கும். சந்தர்ப்பம் சூழ்நிலை - வறுமை. அதுக்காக உங்கள் மேல் யாரும் குற்றம் கற்பிக்க முடியுமா. டாக்டர் மகன் டாக்டர் ஆவான் என்பது என்ன நிச்சயம்? அது போல திருடர் மகன் திருடுவான் என்பது நிச்சயமல்ல. ஆனாலும் ஒரு சின்ன திருட்டை செய்திருக்கிறீங்க.''

தூக்கிவாரிப் போட்டது அவனுக்கு.

''என் மனதைத் திருடிக்கொண்டு விட்டீங்களே...'' சிரித்தாள்.

குப்பென்று முகம் சிவக்க ஆனந்த பரவசத்தில் அவளை அள்ளிப் பருகிவிடுகிறவன்போல உற்றுப் பார்த்தான்.

''நிஜமாகவா...'' மூச்சு முட்டியது அவனுக்கு.

''எனக்கும் உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு.''

''அதை பட்டுன்னு சொல்ல ஏன் தயக்கமோ...''

''அந்தஸ்து குறுக்கிட்டால்னு பயமா இருந்தது.''

''நான்ஸென்ஸ்... நமக்குள் எதுவும் குறுக்கிடாது. முதல்நாள் ஃபைலைத் தூக்கிக்கொண்டு வந்தப்பவே

உங்களைப் பார்த்ததுமே எனக்குப் பிடிச்சுப்போச்சு. இல்லாட்டா உட்கார்த்தி வச்சுண்டு டீ கொடுத்து உபசரிப்பேனா. ஆனாலும் உலகம் தெரியாத மனிதரா இருக்கேளே, உங்களை எனக்குப் பிடிச்சுப் போச்சுன்னு என் மூஞ்சியிலேயே எழுதி ஒட்டியிருந்ததே. நீங்க புரிஞ்சுக்கலையா?''

''எனக்கு பெண்களிடம் பேசியே பழக்கமில்லை.''

''அப்படியா... இனி இந்த பெண்ணோட நீங்க அதிகம் பேசலாம் பழகலாம்...''

அப்படி ஆரம்பித்தது அவர்களது காதலின் அறிமுகம். அதற்குப்பின் சந்திப்புகள் தொடர்ந்தன - தினமும் கடற்கரை மணல்மீது உட்கார்ந்துகொண்டு வறுத்த கடலையை கொரித்தபடி பேசினார்கள் - சிரித்தார்கள். என்ன பேசினான் என்பதுகூட நினைவு இன்றி ஜன்னி கண்டவன் போல அவன் பேச - வெண்கலமணி ஓசையில் அவள் சிரிக்க - உலகமே வசந்தம் கொண்டாடிக் கொண்டிருந்த ஒரு அதிசயத்தில் திளைத்துக் கொண்டிருந்தான்.

ஒருநாள் தற்செயலாக அடையாறிலிருந்த கங்காதரனது வீட்டிற்கு ஒரு ஃபைலைத் தூக்கிக்கொண்டு போக நேர்ந்தது.

மானேஜிங் டைரக்டரைப் பார்க்க வாயில் வராந்தாவில் ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தவன் திகைத்துப்போனான். பூக்கூடை நிறைய மல்லிகை மலர்களைப் பறித்து நிரப்பி கையில் பிடித்தபடி தோட்டத்தினின்று வந்து வராந்தா படிமேல் ஏறிய வசந்தாவைக் கண்டு பிரமித்துப் போனான்.



''என்ன அப்படி பார்க்கிறீங்க. இது எங்க வீடு. மிஸ்டர் கங்காதரன் என் பெரியப்பா. நான் அவர் தம்பி மகள்.''

அடிவயிற்றைப் பிடித்து யாரோ அழுத்தி முறுக்குவது போன்ற வேதனை, அடப்பாவி சபரி! எட்டாத கொம்புக்கு கொட்டாவி விடறியே.

பெரிய பணக்காரர் வீட்டுப் பெண்ணைக் காதலிச்சு நீ தோல்வியடைஞ்சு மனம் ஒடியப் போகிறாய் - உள் உணர்வு அதட்டியது.

''இருங்கோ.'' உள்ளே சென்றவள் ஒரு வெள்ளி டம்ளரில் காப்பியைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

காப்பியை அவன் குடித்து முடிக்குமுன் வாசலில் வந்த பென்ஸ் காரிலிருந்து இறங்கினாள் ஒரு மாக்ஸி சிங்காரி - குப்பென்று ஃபாரின் சென்ட் மணம் வராந்தா முழுவதும் பரவியது.

''யார் இவர்?'' வியப்போடு விசாரித்தாள்.

''இவர் நம்ப கம்பெனியில் வேலை பார்க்கிறவர் - அப்பாவைப் பார்க்க வந்தாராம்.''

வந்தவளின் புருவங்கள் ஓகோ... என்று அலட்சியமாக உயர்ந்து தாழ்ந்தன.

''சரி... நீ வா உள்ளே.'' அதிகாரமாகப் பேசிவிட்டு மாக்ஸி சிங்காரி உட்பக்கம் சென்று விட்டாள்.

''என் அக்கா மோகினி, கொஞ்சம் சிடுசிடு சுபாவம்; அக்கான்னா என் பெரியப்பா மகள். நான் வயதில் அவளுக்கு இளையவள்...'' என்று அறிமுகம் செய்து

வைத்துவிட்டு ''பிறகு பார்க்கிறேன்'' என்று உள்ளே சென்று விட்டாள்.

மோகினி - பார்க்கவும் மோகினியாக அழகாகத்தான் இருந்தாள். ஆனால் குணம்தான் பிசாசு போன்றது போலும். தனக்குள் எண்ணியபடி வந்த காரியத்தை முடித்துக் கொண்டு கிளம்பினான். அன்று மாலை வசந்தாவை சந்திக்கும்வரை மனம் கலங்கித்தான் இருந்தது. பெரிய இடத்துப் பெண்மேல் ஆசைப்படுவது நியாயமா - கைகூடி வரும் காரியமா?

கங்காதரன் - தம்பி மகள் என்றால் - கங்காதரன் கம்பெனியில் அவர்களுக்கும் பங்கு இருக்கும். அப்படியென்றால் பெரிய பணக்காரியாச்சே - அன்று மாலை வழக்கம்போல் அவள் அவனை கடற்கரையில் சந்தித்தாள். வழக்கம்போல பேசினாள்; சிரித்தாள் அவன் வாங்கித் தந்த முல்லைச் சரத்தை தன் தலையில் சூடிக்கொண்டாள்.

அந்தஸ்தை உயர்வாக எண்ணினால் தொடர்ந்து அவள் அவனை சந்திக்க முயலுவாளா? - அவன் தரும் அந்த சிறு பரிசான முல்லைச் சரத்தை வாங்கி அணிந்து கொள்வாளா? அவனை அவள் நேசிக்கிறாள் - உண்மையாக உளமாற நேசிக்கிறாள். அவர்கள் இடையே குறுக்கிட்ட குடும்பநிலை வித்தியாசங்களைப் பற்றி பேசி குட்டையைக் குழப்புவானேன்.

எத்தனையோ சினிமாவில் அவன் பார்த்திருக் கிறானே, கதைகளில் படித்திருக்கிறானே, பணக்காரப் பெண் ஒரு குடிசைவாசியை நேசித்து பெற்றோர்களை உதறிவிட்டு காதலுக்கு தன்னை தியாகம் செய்து



கொள்ளும் கதைகள் எத்தனை கேள்விப்பட்டிருக்கிறான். அவனது வாழ்விலும் அப்படித்தான் ஒன்று நிகழப் போகிறது. தனக்குள்ளேயே சமாதானம் செய்து கொண்டான்.

''உன் தந்தையை நான் பார்க்கவேயில்லை. அவரும் அதே நிறுவனத்தில்தான் வேலை செய்கிறாரா'' கேட்டு வைத்தான்.

''என் அப்பா இந்த உலகத்தில் இல்லை. நான் பிறந்த உடனேயே அம்மா போய்விட்டார்கள். அப்பாவும் நானும் பெரியப்பாவுடைய குடும்பத்தோடு இருந்தோம். சில வருஷங்களுக்கு முன்னர் அப்பாவும் போய்விட்டார்.''

''ஐயம் ஸாரி'' அதற்குமேல் துன்பமான அவளது வாழ்க்கை வரலாற்றை கிண்டிக் கேட்க மனமின்றி விட்டு விட்டான்.

''பெரியப்பாதான் இப்ப எனக்கு கார்டியன் போல'' என்றாள்.

திக்கென்ற உணர்வில் அதிர்ந்து போய் பார்த்தான். கடுவன் பூனை என்று அலுவலகத்தில் பெயர் பெற்றவர் கங்காதரன்.

அந்த கடுவன் பூனையிடன் அவன்போய் ''உங்கள் தம்பி மகளை நான் காதலிக்கிறேன் - கல்யாணம் செய்துகொள்ள ஆசைப்படுகிறேன்'' என்று சொல்ல என்ன தகுதியிருக்கு அவனுக்கு. மீண்டும் மனம் கலங்கியது.

''என்ன ஒரு மாதிரி இருக்கீங்க.'' அவள் உசுப்பிய போது அந்த கவலைகளை உதறிவிட்டு மகிழ்ச்சியுடன் பேசத் தொடங்கினான்.

ஆனால் அந்த மகிழ்ச்சி தற்காலிகமான சங்கதியாகி விட்டது. அவன் தங்கை மறைந்த சோகத்தினின்று நிமிர்வதற்குள் - தாய் மாரடைப்பில் மரணமடைந்து போக தாங்க முடியாத துக்கத்தில் திணறிக் கொண்டிருந்தவனுக்கு எத்தனை பெரிய இடி.

''டைரக்டர் பார்க்கணும்னு கூப்பிடறார்'' பையன் வந்து சொன்னபோது ஏதோ ஃபைல் விஷயமாகத்தான் இருக்கும் என்று எண்ணி உள்ளே சென்றான்.

அவரது முகமே எரிமலையாக தீப்பிழம்பாக மாறிவிட்டிருந்ததைக் கண்டு கதிகலங்கிப் போனான்.

''வசந்தாவைக் காதலிக்கிறாயாமே? கல்யாணம் செய்துக்க ஆசையா? இருக்காதா பின்னே, ஒரு சமையல்காரி மகன் பாவம்னு வேலை போட்டுக் கொடுத்ததுக்கு பேஷ்...!''

காதலிப்பது ஒரு குற்றமா? கேட்கத்தான் அவனது இளம் நெஞ்சு துடித்தது. ஜாதி - மதம் - அந்தஸ்து என்ற தடங்கல்களால் ஆயிரம் ஆயிரம் காலமாக இளசுகள் காதலிப்பதைக் குற்றமாகக் கருதி பெரியவர்கள் இடைமறித்து தடுக்க முயன்ற சங்கதி சரித்திரத்திலும் இடம்பெற்ற கதையாயிற்றே.

''இன்றோடு உனக்கு நோட்டீஸ் கொடுத்து விடுகிறேன். இங்கே இனி வேலை கிடையாது. மறுபடி வசந்தாவை சந்திக்க முயன்றால் நான் யார்னு புரிஞ்சுக்குவே'' மிரட்டியபடி அவன் வேலைக்கு சீட்டுக் கிழித்து விட்டார்.

யார் சொல்லியிருப்பார்கள். வசந்தாவா?



வசந்தா அவனை உண்மையில் காதலித்தாள். எதிர்த்துப்போராடி விட்டிருக்க வேண்டும்.

ஆனால் அவளிடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லையே!

அவள் வேலையை விட்டுவிட்டாளாம் அவளுக்குக் கல்யாணம் நடக்கவிருக்கிறதாம்.

அடிப்பாவி! இப்படியா உதறிவிடுவாய்... மனம் கொதித்துப் போனான். சில தினங்களில் அவன் அலுவலகத்திற்கு வந்துவிட்டு முகவரிக்கு மாற்றப்பட்ட தொரு கடிதத்தைப் பிரித்துப் படித்தான். அரு ஒரு மொட்டைக் கடிதம்.

''வசந்தா உன்னைக் காதலிப்பதாக நடித்தாள். ஏமாந்து போனாய். அவளுக்கு இளைஞர்களை தூண்டில் போட்டு அவர்கள் உணர்வை தூண்டிவிட்டு பின்னர் வேண்டாத கந்தைத் துணியாக உதறிவிடுவது ஒரு கை வந்த கலை. நீ பாவம் மூன்றாவது நபர்... ஜாம் ஜாமென்று அவள் கல்யாணம் செய்து கொண்டு வடக்கே போகப் போகிறாள். வாயில் விரலை வைத்துக்கொண்டு குழந்தை போல நிற்காதே - நீ உன் தகுதிக்கு தகுந்த ஒரு சமையற்காரப் பெண்ணைப் பார்த்து கல்யாணம் செய்துகொள் - இப்படிக்கு உன் நன்மையைக் கோரும் ஒரு நண்பர்.''

கடிதத்தை சுக்கல் சுக்கலாக கிழித்து எறியவேண்டும் என்ற ஆத்திரம்தான் வந்தது.

இல்லை - இல்லை - ஒரு நாள் இல்லாவிட்டால் ஒரு நாள் அந்தப் பழிகாரியைச் சந்திக்க நேரும். அந்தக் கடிதத்தைக் காட்டி உன் விளையாட்டை இந்த ஏழைப் பையனிடமா காட்ட வேண்டும் - வேறு ஆளைப்பார்த்

திருக்கக் கூடாதா - நான் ஏழை, ஆனால் ஒரு நல்லவன். நீ என்னைக் காதலிப்பதாக நடித்த சங்கதியை உன் கணவனிடம் சொல்லி உன் வாழ்க்கையைக் குழப்ப மாட்டேன். நீ எங்கேயிருந்தாலும் சுகமாக இரு என்றுதான் வாழ்த்துவேன். ஆனாலும் நீ என் நெஞ்சில் நெருப்பை வைத்து விட்டுப்போய் விட்டாய் பாவி - என்று திட்டிவிட்டு அத்தோடு அவளை மறந்தே போகப் போகிறான். அந்தக் கடிதத்தை அவன் இன்னமும் பத்திரமாகத்தான் வைத்துக் கொண்டிருந்தான்.

அவளை சந்திக்கத்தான் வாய்ப்பில்லை. கங்காதரன் வீட்டு வாசல்படியை மிதித்தால் மனிதன் பின்பக்கம் உறுமிக் கொண்டிருக்கும் அல்சேஷன்களை அவிழ்த்து அவன் மீது விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. காலம் வரும் காத்திருப்போம் - என்றுதான் இருந்தான்.

வேலு முதலியார் வரவால் இந்த நினைவெல்லாம் இப்போது வந்து அப்பா - எத்தனை வேதனை? அடுத்ததாக அவன் சிந்தனை அம்மாவைத் தொடர்ந்தது.

## 5

அப்போது அவன் வேலை செய்து கொண்டிருந்த சமயம் - அத்துடன் வசந்தாவுடன் கடற்கரை காதலில் திளைத்துக் கொண்டிருந்த காலம். சரோஜா உயிருடன் தன் புக்ககத்தில் வாழ்ந்து கொண்டிருந்த போது -

அவர்கள் வசித்த அந்தத் தெருவின் கோடியில் போக்குவரத்து மிகுந்த நெடுஞ்சாலையைப் பார்த்த



வண்ணம் - உள்ளடங்கிய மதில் சுவர்களுடன் கூடியதொரு கோயிலில் குடிகொண்டிருந்த முத்துலிங்கீஸ்வரரை தரிசிக்க அம்மாவும் அவனும் எப்பொழுதாவது போவது வழக்கம்.

யாரோ புண்ணியவான் கட்டிவைத்த கோவில் பல காலமாக பழுது பார்க்காத நிலையில் இருந்தது. தெருவுக்குத் தமது பெயரைத் தந்துவிட்டு முத்துலிங்கீஸ்வரர் - வந்து தம்மை வணங்கிய சில பக்தர்களுக்கு அருள் பாலித்த வண்ணம் தமது தேவியுடன் மற்ற தேவதைகளுடன் அங்கே குடி கொண்டிருந்தார்.

''நான் வசிக்கிற வீட்டை பார்த்துக் கொண்டு விட்டீங்க. உங்க வீட்டை எனக்குக் காட்டவேண்டாமா, உங்கம்மாவை நான் பார்க்க வேண்டாமா?'' பல தடவை வசந்தா கேட்டுத் துளைத்து விட்டாள்.

அம்மா அந்த வேளையில் வீட்டில் இருக்கமாட்டாள் என்ற துணிச்சலில் இன்னும் அம்மாவிடம் தன் மனதைத் திறந்து சொல்லவில்லையே என்ற கூச்சத்தில், வேறு வழியின்றி ஒருநாள் மாலை - வேலைக்குப்பின் கடற்கரையில் அவளை சந்தித்தபோது உடனே பஸ் பிடித்து தாங்கள் வசித்த இடத்திற்கு அழைத்து வந்தான்.

நிலையத்திலிறங்கியவள் கோவிலைப் பார்த்து விட்டாள்.

''உங்கள் வீட்டுக்குப் போய் அம்மாவைப் பார்க்குமுன் சுவாமி தரிசனம் செய்துவிட்டுப் போகலாமே.''

''அப்படியே செய்வோம்'' என்றான்.

இங்குமங்கும் மதில் சுவர்களில் வெடிப்புக் காணப்பட்ட பிரகாரத்தில் பரவியிருந்த கற்கள் சில

இடங்களில் பிளந்து கொண்டு நகர்ந்திருக்க - பலகாலமாக பழுது பார்க்க காத்திருக்கும் கோயில் என்பதை உணர்ந்து கொண்டாள் அவள்.

''இன்னிக்கு திங்கள் கிழமை. அதனால் கொஞ்சம் பக்தர்களின் கூட்டம் இருக்கும். மற்ற நாட்களில் ஒரு சிலர் கூட வந்து தரிசித்துப் போவது அபூர்வம்.''

''கடவுளை தரிசிக்கக்கூட கொஞ்சம் விளம்பரம் தேவைப்படுகிறது இல்லையா'' சிரித்தாள் அவள்.

''யாராவது பெரியவர்கள் முன்வந்து பழுதுபார்க்க நன்கொடை தொகை வசூலித்து கோயிலைப் பற்றிய வரலாற்றை பத்திரிகையில் எழுதி பிரபலப்படுத்தினால், தானே பக்தர்கள் கியூவில் வந்து நிற்க மாட்டார்களா? எப்போ இதெல்லாம் நடக்கும் என்பது அந்த ஆண்டவனுக்கே தெரியும்.''

புன்னகைத்தபடி அவளுடன் கோயிலுக்குள் சென்றான்.

''நீங்களாவது இங்கே அடிக்கடி வருவதுண்டா?'' கேட்டாள் அவள்.

''முன்பெல்லாம் உண்டு. இப்போ இல்லை.''

''ஏன். காரணம்?''

''என் மனத்திற்குள்ளேயே ஒரு கோயில் கட்டிக் கொண்டு இருக்கிறேன்.''

''பூசலார் போன்ற பக்தர் என்ற நினைப்போ. அதில் முத்துலிங்கீஸ்வரரை வைச்சுட்டீங்களா?''

''இந்த மனக்கோயிலில் வசந்தாங்கிற பெண் தேவதை வந்து குடியேறிடுத்தே-'' வேடிக்கையாகப்



பேசியபடி, முதல் முதலாகத் துணிவுடன் அவள் கன்னத்தை மெல்லக் கிள்ளினான்.

''இதுதானே வேண்டாங்கிறேன்'' என்று சிணுங்கிய படி செல்லமாக முறுவலித்துக் கொண்டு அவள் அவனைப் பின் தொடர கோயிலுக்குள் சென்றாள். விநாயகரிலிருந்து ஆரம்பித்து ஈஸ்வரனின் சந்நிதானத்திற்கு வந்தபோது தீபாராதனை நடந்து கொண்டிருந்தது. இரண்டு பேர்கள் அர்ச்சனைக்கு வந்திருந்தனர். தட்டில் சில காசுகளை போட்டு இருவரும் தீபஜோதியை வணங்கினர். ஈஸ்வரனுக்குப் பின் அம்பிகையை தரிசித்துக்கொண்டு, குங்குமத்தை வாங்கி நெற்றியில் வைத்துக்கொண்டாள் வசந்தா.

கோயில் பிரகாரத்தைச் சுற்றி வந்தபோது, அங்கே ஒரு மூலையில் ஓங்கி உயரமாக வளர்ந்திருந்த வேப்ப மரத்தின் அடியே ஒரு மேடையிலிருந்த தாடி மீசைக்கார சந்நியாசியைச் சுற்றி ஒரு சிறு கூட்டம் தெரிந்தது.

சபரிமலைக்குப் போகிறவர் போல கருப்பு ஆடையும் - மாலையும் நெற்றியில் சந்தனப்பட்டையும் குங்குமமும் இளந்தாடி மீசையுமான ஒரு இளைஞன் அவர்கள் அருகே ஓடி வந்தான்.

''வடக்கேயிருந்து ஒரு மகான் வந்திருக்கிறார். திரிகாலஞானி கையைப் பார்த்ததும் டக்கென்று கடந்த காலம் - நிகழ்காலம் - வருங்காலம் எல்லாம் சொல்லி விடுகிறார் - உங்களால் ஆன ஏதோ சில்லறையை அவர் பாத பூஜைக்குப் போட்டால் போதும். அவரது சிஷ்யன் நான் -''

சபரிநாதனுக்கு தாளமுடியாத கோபம் வந்து விட்டது. ''இப்படியெல்லாம் வேஷம் போட்டுக்

கொண்டு யாசிப்பதை விட்டு ஒழுங்கா வேலை செய்யக்கூடாதா...'' வெடுக்கென்று கேட்டான்.

''கோயிலுக்கு அடிக்கடி நான் வராததுக்கு காரணம் இதுவும் ஒன்று. இப்படி ஏதாவது சொல்லிக்கொண்டு ஒரு கூட்டம் கையை நீட்டுவது எனக்குப் பிடிக்காத சங்கதி. வாசலில் வரிசையாக அலுமினிய தட்டுடன் பிச்சைக்கார கும்பல் ஒன்று உட்கார்ந்து கழுத்தறுக்கும். பிச்சை போடுவது பிசகு என்று பிரசாரம் செய்கிற இந்த நாளில் நான் பிச்சை போடுவதை நிறுத்தி விட்டேன்.''

''கண்டபடி பேசாதீங்க... இவர் பெரிய துறவி'' அந்த சிஷ்யன் கொஞ்சம் காரமாகச் சொன்னான்.

''துறவிக்கு மனிதர் மத்தியில் வேலை என்ன?''

''இந்தக் காலத்தில் ரொம்ப வேலை இருக்கிறது. கொலையும் - கொள்ளையும் மதமாச்சரியமும் அதிகமாகிக் கொண்டு உலகம் கெட்டுப் போய்க்கொண்டிருக்கிறது. பாவத்தில் மூழ்காது மக்களை கைதூக்கிவிட மகான்கள் மக்கள் மத்தியில் வாழ்ந்து அவ்வப்போது புத்திமதி வழங்கி அருள்பாலிக்க வேண்டியது கடமை...''

இவன் படித்ததொரு வேஷக்காரன் - வேலை யில்லாததால் இந்த வேஷம் போலும் என்று தனக்குள்ளே எண்ணிய சபரி, ''எனக்கு கைரேகை பார்த்துக்கிற அவசியம் இல்லை - என் வருங்காலத்தைப்பற்றி எனக்கே தெரியும். கடந்த காலம் - நிகழ்காலமெல்லாம் யாரும் சொல்ல வேண்டியது இல்லை - அவரவர்களுக்கே தெரிந்த சங்கதி. ஐயா நீர் உம் வழியைப் பார்த்துப்போம்'' என்று எரிந்து விழுந்தான். இளந்தாடிக்காரன் என்னமோ முணுமுணுத்துவிட்டு அர்ச்சனைக் கூடையுடன் உள்ளே நுழைந்த ஒரு அம்மாவை நோக்கி விரைந்தான்.



''மஞ்சள் வெய்யில் இன்னமும் மறையவில்லை. அப்படி அவர் என்ன சொல்றார்னு கொஞ்சம் வேடிக்கை பார்ப்போமே?'' வசந்தா அவனை இழுத்தாள்.

சற்று பருமனாக நின்ற ஒரு குட்டை மனிதன் பின்னால் நின்றபடி எட்டிப்பார்த்தான் சபரி.

ஒரு நடுத்தர வயதுக்கார பெண்ணின் கையை கண்களால் ஆராய்ந்தபடி - தாடியும் மீசையுமாக குச்சி போன்று ஒடிந்துவிடும் தோற்றத்திலிருந்த அந்த சந்நியாசியின் இடது தோள்பட்டை சபரியின் கண்களில் பட்டதும் திக்கென்று ஒரு திகில் உச்சந்தலையில் இருந்து உடம்பு முழுவதிலும் பரவுவதை உணர்ந்தான்.

நெஞ்சு படபடவென்று துடிக்க - வருங்காலத்தைச் சொல்ல நிமிர்ந்த அந்த சந்நியாசியின் முகத்தை உற்றுப் பார்த்தான்.

நிழல் போல ஒரு ஞாபகம், நெஞ்சை நெருடியது. முத்து முத்தாக வியர்வை நெற்றியில் துளிர்த்தது.

''வா போகலாம்'' என்று வசந்தாவை நெட்டித் தள்ளிக்கொண்டு புறப்பட்டான். வீட்டில் அம்மா இருக்கவில்லை. பூட்டைத் தன்னிடமிருந்த மறு சாவியால் திறந்து அவளை உள்ளே அழைத்தான். ''வலது காலை எடுத்து வச்சு வா. இதுதான் உன் வருங்கால அரண்மனை.''

''அப்படியா! ராமன் இருக்குமிடமெல்லாம் சீதைக்கு அயோத்தி என்பது தெரியுமல்லவா'' என்று விட்டுக் கொடுக்காது அவள் பதிலளித்தாள். சற்றுமுன் ஏற்பட்ட கலவரத்தை மறந்து அவன் மகிழ்ச்சியுடன் சிரித்தான்.

தானே அடுப்பை பற்றவைத்து காபி தயாரித்து - அம்மா பத்திரமாக தகரடின்னில் வைத்திருந்த ரவாலட்டு ஒன்றை எடுத்து காராபூந்தியுடன் தட்டில் வைத்து அவளுக்குத் தந்தான்.

"முன் தூங்கி பின் எழும் பேதையாக நீ வருங் காலத்தில் வாழலாம்..." என்றவன் "இந்த சபரிநாதனுக்கு நன்றாக சமைக்கத் தெரியும். பட்சணம் கூட செய்யத் தெரியும்" சிரித்தான் அவன்.

"ரொம்ப நல்லதாப் போச்சு, இரண்டு பேரும் வேலை செய்து ரெண்டு பேரும் சமையல் செய்து - சரி நிகர் சமானமாக வாழ்வோம் இந்த வீட்டிலே" அவள் மெல்லிய குரலில் கூறிவிட்டு சதங்கை ஒலியாக சிரித்தாள்.

இருட்டிக் கொண்டு வருவதை உணர்ந்து அவன் அவளை உசுப்பினான். "என் தாய் வர ஒரு சமயம் இரவு பத்து மணி ஆகும் - அதுவரை நீ இங்கேயிருப்பது முறையல்ல. அதனால் நீ கிளம்பு. அம்மாவிடம் உன்னைப் பற்றிய விவரத்தைச் சொல்லிவிட்டு பிறகு உன்னை இங்கே அழைத்து வந்து அறிமுகப்படுத்துகிறேன்" என்றான்.

"கட்டாயம் அம்மாவை எனக்குப் பார்க்கணும் - மறக்கக்கூடாது" கெஞ்சலும் - கொஞ்சலுமாகப் பேசிய அவளை, பஸ் நிலையம் வரை தொடர்ந்து சென்று அடையார் போகும் பஸ்ஸில் ஏற்றிவிட்டு வீட்டிற்கு வந்தான்.

அவள் போன பின்பு மறுபடியும் அவன் மனதில் அந்த நினைவு நெருடியது.



அப்போது அவன் சிறுவன்தான். ஆனாலும் நன்றாக நினைவிருக்கிறது. அப்பா மேல் துண்டு இல்லாது திறந்த மார்புடன் முற்றத்து குறட்டோரத்தில் உட்கார்ந்து பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருக்கும் போதெல்லாம் கவனித்திருக்கிறான். தாயிடம் ஒட்டிக் கொண்டு உறவாடியது போல் குழந்தைகள் இருவரும் தந்தையிடம் நெருங்கிப் பழகியதில்லை. வீட்டுக்குள் வரும்போதே அவர் கால் செருப்பு சத்தமும் பார்வதி - என்று கத்தும் அவரது ஓங்கிய குரலும் முகத்தில் தெரிந்த கடுமையும் குழந்தைகளை மிகவும் அச்சுறுத்தின. போதாததற்கு அவர் வந்ததும் வராததுமாக அவனை காரணமின்றி திட்டுவது வழக்கம்.

"கல்லுளி மங்கனாட்டமா ஏண்டா முழிக்கிறே - பம்பரம் ஆடிக்கொண்டு வாசலில் உள்ள பொறுக்கி பசங்களோட என்னடா விளையாட்டு! கைகால்களை அலம்பிண்டு புஸ்தகத்தை எடுத்து வச்சுண்டு படிக்க என்ன கொள்ளை?"

அநேக நாட்களில் அவர் பத்திரிகை படிக்கும்போது ஓரக்கண்ணால் அவரை வெறித்தபடி அவன் பாடபுத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருப்பான்.

அவரது இடது தோள்பட்டையிலே தெரிந்த காயவடுவைப் பார்த்தபோதெல்லாம் அவனுள் ஒரு ஆவல்.

இந்த அப்பாவை யார் இப்படி அடிச்சு வடு வராப்பல காயப்படுத்தினது?

ஒருநாள் அம்மாவின் தொடைமீது தலை வைத்துக் கொண்டு கொஞ்சியபடி தூங்க ஆரம்பித்தபோது

கண்களை திடுக்கென்று திறந்து கொண்டு ''அம்மா...!'' என்றான்.

''என்னடா கண்ணு! தூங்கு... அப்பா இன்னும் வரலை. வந்தால் படிக்காம இதென்ன கொஞ்சல்னு கூப்பாடு போடுவார்'' என்றாள்.

''அம்மா. அப்பாவின் தோள்பட்டையிலே ஒரு பெரிய வடு இருக்கே. அது எப்படியம்மா ஏற்பட்டது? யாராவது அடிச்சுட்டாங்களா?''

அம்மா குபுக்கென்று சிரித்தாள். ''உன்னை அப்பா சில சமயம் அடிக்கிறார்னு உனக்கு கோபம். அதனாலே அவரை யாராவது அடிச்சிருக்க மாட்டாளான்னு மனதுக்குள்ளே ஒரு கெட்ட ஆசை. படுவாப்பயலே. அவரை யார்டா அடிக்க முடியும்? அவர் ஒரு ஆம்பிள்ளை சிங்கமாச்சே... சின்ன குழந்தையா இருந்தப்போ உன்னாட்டம் கொஞ்சம் அடம் பிடிக்கிற வழக்கமாம். அவர் வீட்டு மரத்தில் ஏறி கீழே விழுந்து தோள் பட்டையில் காயம் ஏற்பட்டதாம். அதை உடனே டாக்டர் கிட்டே காட்டி தையல் போட்டிருந்தா இத்தனை பெரிய வடு ஏற்பட்டிருக்காதாம். கிராமம், பேசாம சுண்ணாம்பை கொஞ்சம் தடவி கட்டுப்போட்டுட்டாளாம். அது சீழ் கோத்துண்டு புண்ணாகி ஒரு பெரிய காயமா தோள்பட்டை மேலே குறுக்கா படர்ந்திண்டு, காஞ்சு ஆறின பிறகு கருப்பா ஒரு பெரிய வடுவை உண்டாக்கித்தாம். வெகு தூரத்திலே அப்பா வந்தாகூட அந்த வடு பளிச்சுன்னு தெரியும்'' யுத்தங்களுக்கு சென்று மார்பில் வடுக்களுடன் வரும் தன் வீர மணவாளனை வருணிக்கும் சங்க கால மனைவியைப் போல பெருமையோடு சொன்னாள் அம்மா.



அந்த பெரிய வடு - அவனால் மறக்கமுடியாத அந்த வடுவை அவன் அந்த சந்நியாசியின் இடது தோள்பட்டை மீது பார்த்தபோது அதிர்ந்து போனான். முகத்தை உற்றுப் பார்த்தபோது நிழல்போல நினைவு நெஞ்சை உறுத்தியது.

சந்தேகமேயில்லை... பல ஆண்டுகளுக்கு முன் அவர்களை உதறிவிட்டு ஓடி மறைந்து போன அப்பா மணி கண்டன்தான் சந்நியாசி கோலத்தில் ஒரு சிஷ்யனை வைத்துக் கொண்டு முத்துலிங்கீஸ்வரர் ஆலயத்தில் வந்து முகாமிட்டிருக்கிறார்.

மனிதன் அவர்கள் வீட்டருகே வந்து தங்கியிருப்பதன் நோக்கம்? காவி உடையைக் களைந்து விட்டு மறுபடியும் வந்து குடும்பத்திற்குள் புகுந்து கொள்ளவா!

ஐயோ கடவுளே... அவரை அம்மா பார்க்காதிருக்க வேண்டுமே. அதற்குள் அவரை இங்கிருந்து விரட்ட ஏதாவது வழி பண்ணியாகணும். என்ன செய்ய?

அலுவலகத்தில் வேலை ஓடாது - அன்று அவன் வழக்கம்போல வசந்தாவுடன் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருக்காது - அவசர வேலை என்று கூறிவிட்டு வீட்டுக்கு வந்தவனுக்கு ஒரே வியப்பு.

வழக்கமாக இருட்டிய பின்னரே வீடு திரும்பும் அம்மா பகல்பொழுதே திரும்பி விட்டிருந்தாள்.

வெளியே போக அவள் எப்பொழுதாவது உடுத்தும் பழைய பட்டுச் சேலை - நடமாடும் இஸ்திரிக்காரர் பெட்டி போட்டுக் கொடுத்துப் பத்திரமாக அலமாரியில் பூட்டி வைத்து இருந்த அந்தநீல வண்ண சேலையில்

வெள்ளை ரவிக்கையில் தலை நிறைய மல்லிகைப்பூவும் நெற்றியை நிறைத்த குங்குமமுமாகக் காணப்பட்டாள்.

மகனைக் கண்டதுமே அவள் முகத்தில் கலவரம் தெரிந்தது.

''என்னம்மா இன்னிக்கு வேலை முடிஞ்சுட்டதா?'' சாதாரணமாகக் கேட்டான் அவன்.

''அடுத்த வாரம் அமெரிக்கா போகும் பெண்ணுக்கு குஞ்சலாடு - தேன்குழல் இதெல்லாம் செய்தால் போதும். இப்ப வீட்டு விருந்தாளிகளுக்கு கொஞ்சம் நெய்முறுக்கு செய்து கொடுத்துருங்கோ. அதிகம் வேண்டாம்னுட்டா அந்த ஜட்ஜ் சம்சாரம். அதுவும் நல்லதுதான் - நாலு நாள் ஒய்வா வீட்டிலே இருப்போம்னு நினைச்சுண்டு வந்துட்டேன்.''

''இப்போ எங்கியோ வெளியிலே கிளம்பறாப்பல இருக்கோ.''

''ஆமாண்டா, பிளாஸ்க்கிலே உனக்கு காப்பி வச்சு இருக்கேன். சூடாக இருக்கும். எடுத்து சாப்பிடு. அடுப்பு மேடையிலே அலுமினிய டப்பாவிலே சுக்காரொட்டி சப்ஜி ரெண்டு வச்சிருக்கேன். நான் வரதுக்கு கொஞ்சம் நேரமானால் நீ எடுத்துப் போட்டுண்டு சாப்பிடு.''

''அப்படி அவசரமா நீங்க எங்கே போறேள் என்பதைத் தெரிஞ்சுக்கலாமா?'' - விடாப்பிடியாகக் கேட்டான் அவன் நெஞ்சு ஏனோ ஒரு கலவரத்தில் படபடத்தது.

''கோபுர வாசல் தெரு பாட்டியின் பேத்தி பிரசவத்துக்கு வந்திருக்கா. அவளுக்கு வாய் ருசியா



கொஞ்சம் சமைச்சு எடுத்துண்டு போறேன். பாட்டிக்கும் ரொம்ப தள்ளலை. அதுக்கப்புறம் நான் திருவான்மியூர் வரை ஒரு கல்யாண பட்சண வேலை சம்பந்தமா ஒருத்தர் வீட்டுக்குப்போய் வரணும்...'' அவனைப் பார்க்காது படபடவென்று பேசிய அம்மா ஒரு டிபன் செட்டை தூக்கிக் கொண்டு காலில் செருப்புகளை திணித்துக் கொண்டு வேகமாக வெளியேறி விட்டாள்.

அம்மா பொய் சொல்லுகிறாள் என்ற உணர்வில் அவன் கோபத்திலே ஆடிப்போய் விட்டான்.

காரியம் தலைக்கு மிஞ்சுமுன் தடை போட வேண்டும். பிள்ளை என்கிற உறவில் அவனுக்கு உரிமை இருக்கிறது. மனம் கொந்தளித்தது.

அடுத்த நாள் அரை நாள் விடுப்புடன் வேலையினின்று வீட்டுக்குத் திரும்பினான். அந்தக் கோவில் எதிரேயிருந்த ஒரு டீக்கடையில் உள்ளே போடப்பட்ட பெஞ்சி மீது உட்கார்ந்தபடி பெரிய சி.ஐ.டி. போல கண்காணித்துக் கொண்டு, ஒரு பன்னை மெல்ல கடித்து சுவைத்துக் கொண்டிருந்தான்.

சரியாக இரண்டு மணி அளவில் யாரும் இல்லாத சமயத்தில் கோவிலின் சிறு கதவு வழியே அம்மா சின்னாளப்பட்டுச் சேலையும் - வெள்ளை ரவிக்கையும் - தலை நிறைய பூவுமாக - கையில் டிபன் செட்டுடன் உள்ளே நுழைவதைப் பார்த்து விட்டான். அவ்வளவுதான் தலையில் யாரோ நெருப்பை வாரிக் கொட்டி விட்ட போன்றதொரு பயங்கர வேதனை. ஆத்திரம் - ஆவேசம்.

சிறிது நேரம் பொறுத்துப் பார்த்தான். அம்மா வெளியே வரக்காணோம். மெள்ள நடந்து வீட்டிற்குப்

போய் பூட்டை திறந்து கொண்டு உடை மாற்றிக் கொண்டு கூண்டுப் புலியாக கோபத்துடன் வெகுநேரம் கூடத்தில் உலவிக் கொண்டிருந்தான்.

பொழுது அமரும் சமயம் அம்மா கதவைத் தட்டினாள்.

''இன்னிக்கு கூட சீக்கிரம் வேலையிலிருந்து வந்திருக்கே போலிருக்கே'' கேட்டபடி செருப்புகளை நடையில் கழற்றி வைத்துவிட்டு காலி டிபன் செட்டை குறட்டின் மீது வைத்துவிட்டு முகம் கழுவிக் கொள்ள முற்றத்தில் இறங்கினாள். அப்போ கவனித்தான். அம்மாவின் கண்கள் சிவந்து முகம் லேசாக உப்பி காணப்பட்டது. இஸ்திரி மடிப்பு கலையாது அவள் உடுத்திப் போயிருந்த சேலை மீது இலைச்சருகுகள் சில ஒட்டிக் கொண்டிருந்தன.

''இன்னிக்குக் கூட கோபுரவாசல் கிழவி வீட்டுக்குத்தான் போய்விட்டு வரேளா அம்மா?''

முகத்தை கழுவிக் கொண்டிருந்தவள் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

''நன்னா ஒரு மூச்சு அழுது உங்கள் கணவரின் திருப்பாதங்களில் விழுந்து நமஸ்கரித்துவிட்டு வந்திருக்கீங்க இல்லையா? உங்கள் துயரத்தைப் பார்த்து அவரும் மனம் கனிந்து, சந்நியாச கோலத்தை கைவிட்டு விடுவதாக வாக்குத் தந்திருக்கிறார் இல்லையா?''

தூண் மீது சாய்ந்தபடி உட்கார்ந்த அம்மாள் விக்கி விக்கி அழுதாள். ''கேட்டதுக்கு பதில் சொல்லலை. என்கிட்டே ஏன் அப்படி பொய் சொன்னீங்க? சந்நியாசி வேஷத்திலே என்னை பெத்த மகராஜன் முத்துலிங்கீஸ்வரர்



கோவிலில் வேப்ப மரத்தடியில் உட்கார்ந்திருப்பதை நான் பார்த்துவிட்டுதான் பேசறேன். நேத்திக்கு - இன்னிக்கு நீங்க எடுத்துப்போன சாப்பாடு கோபுர வாசல் தெரு கிழவி பேத்திக்கு இல்லை. உங்கள் கணவருக்கு இல்லையா?''

''ஆமாம். பொய் சொன்னேன். நீ என்ன சொல்லுவியோ! தலைக்கு மிஞ்சின பிள்ளையாயிட்டியேன்னு பயந்துண்டு பொய் சொன்னேன். திருட்டுக் காதலனைப் பார்க்கவா கிளம்பினேன். என் கழுத்தில் தாலியைக் கட்டின என் கணவரைப் போய் பார்த்து வரக் கிளம்பினேன். பசியோடு தவிச்ச அவருக்கு என் கையால் சமைச்சதைக் கொண்டு பரிமாறி உபசரித்தேன். அவர் பாதத்திலே விழுந்து அழுதேன். இப்படி எங்களை விட்டுட்டுப் போய்... நீங்களும் ரொம்ப கஷ்டப் பட்டுட்டேள் - நாங்களும் தவிச்சுப் போனோம். இனியாகிலும் இந்த கோலத்தை விட்டுட்டு வந்து வீட்டோட இருங்கோ. குழந்தைக்கு ஒரு கல்யாண மானால்...''

''அம்மா, உங்களுக்கு அறிவு இருக்கா? திடீர்னு ஒரு சந்நியாசியை என் புருஷன்னு சமூகத்தின் முன் அறிமுகப்படுத்தினால் யாராவது நம்புவாங்களா?''

''அவரை ரொம்ப பேர் இந்த தெருவிலே அடையாளம் கண்டுக்குவாங்க - மேலும் என்னைப்பத்தி எல்லாருக்கும் தெரியும். சபரி நீ மனம் வச்சு சரின்னு சொன்னா?'' அம்மா மீண்டும் ஒருமுறை அழுதாள்.

''என்னிக்கு உங்களை கைவிட்டு திருட்டுப் பணத்துடன் ஓடினாரோ அன்னிக்கே அவர் செத்துட்டார் அம்மா.''

''அடப்பாவி. என் பூவுக்கும் பொட்டுக்கும் அவர் தாண்டா பொறுப்பாளி. வெள்ளைப் புடவையும் விபூதியுமா என்னைப் பார்க்க உனக்கு ஆசையா இருக்காடா? அதுக்காகத்தானா பத்து மாசம் உன்னை நான் சுமந்தேன்?'' அம்மா வீரிட்டு அலறினாள்.

''அண்டை அசல் தெரியராப் போல நாம் சண்டை போட்டுக்க வேண்டாம். எப்ப அவர் சந்நியாசம் ஏத்துக் கொண்டாரோ அப்பவே அவருக்கும் நமக்கும் உறவு துண்டிச்சுப் போச்சு. இனி நீங்க அவர் மனைவியல்ல. நான் அவர் பிள்ளையல்ல.''

''நிர்தாட்சண்யமா பேசறே. நியாயமில்லையடா. பெத்த தகப்பனை கடைசி காலத்திலே கஞ்சிக்கலைய தவிக்கவிடறது நியாயமா?''

''பச்சைக் குழந்தைகளையும் - ஒரு இளம் பெண்ணையும் சமூகத்திலே நிர்க்கதியா நிக்கவிட்டு போனது மட்டும் நியாயமா?''

''ஒருத்தர் தப்பு செஞ்சா நாமும் தப்பு செய்யணுமா?''

''இது தப்பு இல்லை. அவர் எந்த உறவை வச்சுண்டும் இந்த வீட்டுக்குள் நுழையக்கூடாது. நான் அனுமதிக்க மாட்டேன். சந்நியாசி வேஷத்திலே எந்த கடத்தல்காரன் கூட்டத்திலே இவர் சேர்ந்துண்டு இருக்காரோ யார் கண்டா. நாம நிம்மதியா கஞ்சியோ கூழோ குடிச்சிண்டு இருக்கிறது இவருக்கு ஆகலையா. நாளைக்கு திமுதிமுன்னு போலீஸ் நம் வீட்டில் வந்து நிக்கணுமா? அம்மா நீங்களே சொல்லியிருக்கேள். சேர்வராயன் சந்நியாசின்னு ஒருத்தர், சேலம் பக்கம்



ரொம்ப பிரபலமாயிருந்து மந்திரம் - மாந்தரீகம் எல்லாம் செய்ய ஆரம்பிச்சு ஜனங்கள் கூட்டம் கூட்டமாக அவரை தரிசிக்கத் தொடங்கினார்கள் என்றும், பாதகாணிக்கை என்று பணமாக தட்டில் ஏராளம் விழுந்தது என்றும் பிறகுதான் போலீஸ் கண்டுபிடித்தது, அந்த சந்நியாசி ஜெயிலிலிருந்து தப்பி ஓடிய ஒரு ஆயுள் கைதி; கொலைகாரன். விரைவில் போலீஸ் புகுந்து கைது செய்துவிட்டார்கள் என்று நீங்கதான் எங்களுக்கு கதை சொல்லியிருக்கேள்.

''நம் நாட்டில் சந்நியாசிகளுக்குப் பஞ்சமேது? ஆனால் எல்லோருமே முற்றும் துறந்த மகான்கள் என்று நம்புவதற்கில்லை. காலந்தொட்டு வேறுநாட்டில் உளவு கண்டுபிடிக்க - ஊரில் யார் பெரிய புள்ளி - கொள்ளை யடிக்கலாம் என்று கண்டுவர - இன்னும் பல காரணங்களை மறைக்க காவியுடை உடுத்திக் கொண்டு இருப்பது சரித்திரப் பிரசித்தம். நமது நாடோடி இலக்கியத்தில் கூட இதுமாதிரி போலி சந்நியாசிகள் ரொம்ப உண்டு -

''வள்ளியை மணக்க சந்நியாச வேடம் போட்டதாக பாவம் முருகன் மீது கூட ஒரு குற்றச்சாட்டு உண்டு.''

''படித்துவிட்ட திமிரில் கன்னா பின்னான்னு பேசறே - அப்பா அப்படி ஒண்ணும் கள்ளக்கடத்தல் கூட்டத்திலே இருக்கலை. பணத்தை எடுத்துண்டு போனது தப்புனு ஒத்துக்கறார் - பணம் செலவானதும் வடக்கே ஒரு ஆசிரமத்தில் சேர்ந்து சந்நியாசத்தை மேற்கொண்டு விட்டாராம். சந்நியாசியாறது ஒண்ணும் அப்படி நினைச்சபோது போட்டுக்கற வேஷமில்லையாம் - ஆசிரமத்திலே நல்லதொரு சீடனாக சில வருஷங்கள்

உழைச்சு - அதன் தலைவரின் நன்மதிப்பைப் பெற்று பிறகுதான் சந்நியாசம் அவர் தந்து ஏத்துக் கொண்டார்கள்.''

''அப்போ அங்கேயே இருக்கிறது. நம்மையெல்லாம் தேடிக்கொண்டு இங்கே வருவானேன் - சந்நியாசிகளுக்கு பாசம் பந்தம் இதெல்லாம் கூடாதே...''

''உடம்புக்கு வந்துவிட்டது. ஏதாவது ஆயிட்டான்னு புறப்பட்டு வந்திருக்கார். அவரைப் பார்த்தா உன் மனம் கரைஞ்சு போயிடும் சபரி!''

''அவர் சொன்ன கதைகளை நீங்க விழுங்கிக்கொள்ள முடியும் - என்னால் ஏற்கமுடியாது. அவருக்கு உடம்புக்கு முடியலைன்னா அங்கேயே ஆசிரமத்து ஆஸ்பத்திரியில் படுத்துக் கிடக்கிறது...''

''அவருக்கு ஏதாவது ஆயிட்டா...''

''அம்மா சந்நியாசிகளுக்கு ஒரே ஒரு பந்தம் உண்டு. அவர்களுக்கு பெற்ற தாய் இறந்து போனால் அவளுக்கு கொள்ளி வைக்கும் ஒரு கடமை உண்டு. தாய்க்கு மட்டும்தான் அந்த பாக்யம். ஆனால் சந்நியாசி இறந்து போனால் அவருக்கு மகன் கொள்ளி போடவேண்டிய அவசியமல்ல. அவர்களது முறைப்படி அவர்களை ஆஸ்ரமத்திலேயே அடக்கம் செய்து விடுவார்கள். அந்தக் கதையைப் பேசிக் கொண்டு இங்கே வந்து இவர் நம் கழுத்தை அறுக்கத் தேவையில்லை.''

''என்ன இருந்தாலும் அவர் என் கணவர்டா - எனக்குன்னு சில கடமைகள் இருக்கு இல்லையா?'' அம்மா அழுதாள்.

''அந்த கடமையை செய்வதிலே கண்ணகிக்கு அடுத்தபடியாக உங்களுக்கு கடற்கரை ஓரத்திலே யாரும்



சிலை எழுப்பிவிடமாட்டாங்க. அப்பாவை நீங்க ரொம்ப நாளா இந்தக் கோவிலில் சந்திச்சு பேசிக் கொண்டிருக்கீங்க. உங்களை அவர் பிரைன்வாஷ் பண்ணியிருக்கார். நீங்க செய்கிறது பெரிய தவறு அம்மா.''

''ஏண்டா நீ செய்கிறதுமட்டும் தவறு இல்லையோ.'' கோபத்துடன் உறுத்து விழித்தாள் அம்மா.

''நான் என்ன தவறு செய்துட்டேன். சொல்லுங்க.''

''உன் மனசாட்சியைத் தொட்டுப் பார்த்துக்கோ. கடற்கரையிலே நீ தினமும் வசந்தாங்கிற பெண்ணோட பேசிண்டு இருக்கியாமே. பார்த்தவா என்கிட்டே சொல்லியிருக்கா.''

''வசந்தாவை நான் காதலிக்கிறேன். அவள் என்னை காதலிக்கிறாள். இதிலே என்ன தவறு - ஜாதி சமய - இடைஞ்சல் ஏதும் கிடையாது. அதனாலே நீங்க கவலைப் படத் தேவையில்லை.''

''சில நாளா எனக்கு உன்னைப் பத்தியும்தான் உள்ளூரக் கவலை. வசந்தா யார் தெரியுமா? நீ வேலை செய்கிற கங்காதரன் கம்பெனி வீட்டுப் பெண்.''

''அது தெரியும். அதனாலே என்ன?''

''நீ ரொம்ப சினிமாக்களைப் பார்த்திட்டு அதில் வராப்பல குப்பத்து பையன் குபேரன் மகளைக் கல்யாணம் செய்துகிறாப்பல மங்களமான முடிவை எதிர்பார்க்கிறே. பணக்காரங்களோட பழகறச்சே பாம்புகிட்ட பழகராப்பல இருக்கணும். நாளை அவளுக்கு வேறு பெரிய இடத்திலே நிச்சயமாயிடும். நீதான் மனசு உடைஞ்சுப் போவே. அதுக்கப்புறம் அதை முகாந்திரமா வச்சுண்டு அசட்டு

பிசட்டுனு நீ ஏதாவது செய்திட்டா தனியா நான் தவிப்பேன். எல்லாருமா சேர்ந்து என்னை ஏன் இப்பவே கொன்னுடக் கூடாது.''

''சரோஜா வீட்டு மனுஷா பிடுங்கலை என்னால் சகிக்க முடியலை. அந்தக் குழந்தை கண்ணும் கண்ணீருமா வாழறா. கழுத்திலே தாலியை கட்டி எனக்கு பூவும் பொட்டும் கொடுத்த மகராஜன் உடம்புக்கு வந்து ஒரு மரத்தடியில் அனாதையாக யாரும் கவனிக்க முடியாத நிலையிலே கிடக்கார்.''

''பணக்காரப்பெண் மோகத்திலே பெத்தவகிட்ட கூட சொல்லாம நீ காதல் பண்ணிக்கிட்டிருக்கே? அது எதில் முடியுமோ?''

''எந்தவிதமான கஷ்டமும் வரத்துக்குமுன் இந்த பூவும் பொட்டோட நான் போயிடணும் தெய்வமேன்னு தினம் முத்துலிங்கீஸ்வரரை அழுதழுது வேண்டிண்டு வரேண்டா... உனக்கு என் மனப்போராட்டத்தைப் பத்தி என்ன தெரியும்?''

''அடுத்த ஜன்மம்னு ஒண்ணு இருந்தா எனக்கு பெண்ணாக பிறக்கவே ஆசையில்லையடா... போரும் இந்த ஜன்மத்திலே நான் பட்டபாடு...'' அம்மா அழுத போது அவனால் தாளமுடியவில்லை.

சட்டென்று அருகில் போய் உட்கார்ந்து கொண்டான். ''அம்மா! உங்களை நான் ஒருபோதும் கைவிடமாட்டேன். கூலி வேலை செய்தாவது காப்பாத்துவேன். நீங்க மனம் ஒடிஞ்சு அழறது என்னை சித்திரவதை செய்கிறதம்மா. நம்ப வருங்காலத்து நல்லதுக்காகத்தான் சொன்னேன். சரோஜா புக்ககத்தார்



இந்த அப்பா சங்கதியைக் கேள்விப் பட்டால் அவளை இன்னும் ரொம்ப இளக்காரம் பண்ணுவா. யாரோ ஒரு திருடனை இந்த வயதில் நீங்க புருஷன்னு வீட்டில் சேர்த்துக் கொண்டு விட்டதாக உங்க நடத்தைக்கு மாசு கற்பிப்பா அம்மா. எனக்கு தெரிஞ்ச வரை ஒரு தூசிகூட உங்கமேலே பட்டதில்லையே. பவித்திரமான உங்களது பேருக்கு ஏதாவது தவறு வந்துட்டா என்னால் தாங்க முடியாதம்மா அதுக்காகத்தான்...'' பேச முடியாது விம்மியபடி அவன் தன் தாயாரின் தோள்மீது தலையைச் சாய்த்துக் கொண்டான்.

''சே! அசடு, அழாதே. ஆண்பிள்ளை சிங்கம் அழலாமா-'' அம்மா புடவைத் தலைப்பால் அவன் கண்ணீரைத் துடைத்து விட்டாள். தன் முகத்தையும் துடைத்துக் கொண்டாள்.

''இதையெல்லாம் பத்தி பிறகு நன்னா யோசிச்சுப் பேசலாம். இப்போ அப்படியே விட்டு வைப்போம். எழுந்து கை கால் அலம்பிண்டு வா-

''நான்கூட மத்தியானம் எதுவும் சாப்பிடலை. ரெண்டு பேரும் சாப்பிடுவோம்'' உபசரித்தாள்.

கலைந்து விட்ட தன் கூந்தலை சீராக்கிக் கொண்டு குங்குமப் பொட்டை சரிசெய்துகொண்டு அவனது தட்டை கூடத்து தரை மீது வைத்து சாப்பாட்டை சூடாக்கிப் பரிமாறினாள்.

''நீங்களும் உட்கார்ந்து சாப்பிடுங்கோ அம்மா'' - உபசரித்தான் அவன். ''அம்மா! கத்தரி வத்தல் குழம்பு தேனா இருக்கும்மா - என்ன இருந்தாலும் உங்க கைமணம்

சமையலில் யாருக்கும் வராது-'' குழம்பைப் பிசைந்து வாயில் போட்டு சுவைத்தபடி தாயைப் புகழ்ந்தான்.

''இன்னும் கொஞ்சம் குழம்பு ஊத்தட்டுமா. கறியை தொடலையே. வாழைத்தண்டு உடம்புக்கு ரொம்ப நல்லது. கிட்னியிலே கல் வராதுன்னு ஏதோ புஸ்தகத்திலே படிச்சேன். என் குழந்தைகள் ஆரோக்கியமா - நன்னா - சீரும் சிறப்புமா இருந்தா அதுவே எனக்குப் போரும் பகவானேன்னு தினமும் வேண்டிக்கிறேன்.

''சரோஜாவுக்கு கொஞ்சம் கருவடாம் எடுத்து வச்சிருக்கேன். ஒரு நாள் நீ கௌரவத்தைப் பாராம அவ புக்ககத்தில் கொண்டு கொடுத்துட்டு வாடா. ஜவ்வரிசி வடாம்னா குழந்தைக்கு ரொம்ப ஆசை.''

''குடுத்துட்டு வரேன் அம்மா. அவ மாமியார் அந்த காளகண்டி கேட்பா - வெறும் வத்தல் வடகத்தைக் கொண்டு வந்து கொடுத்துட்டு வைர மூக்குத்தி சமாசாரத்தை சமாளிக்கலாம்னு பார்த்துடாதீங்கன்னு பட்னு சொல்வா...''

''வெறும் - கருவடாம் கொடுத்தால் இப்போ எண்ணெய் விக்கிற விலையில் யார் அதை பொறிக்க முடியும். அப்படின்னு கேட்பாள் அவள் நாத்தனார் - அந்த வாயாடி.''

''பெண்ணைப் பெத்துட்டேன். அவா சொல்றதை யெல்லாம் கேட்டுக் கொண்டு அடங்கிப் போகணும்.''

''அதெல்லாம் அந்தக் காலம். நாமும் எதிர்த்துப் பேசணும். அப்பதான் அடங்கிப் போவா.''

சாப்பிட்ட பின்னர் கைகழுவிக் கொண்டு அம்மாவுக்கு உதவியாக தட்டுகளைக் கழுவி - சுவர்



ஓரமாக கவிழ்த்து விட்டு - பாயை உதறிப் போட்டான். தலையணையை போட்டுக் கொண்டு அம்மா படுக்க உட்கார்ந்தாள்.

உள்ளிருந்த தன் ஜமுக்காளத்தை எடுத்து உதறி அவன் கூடத்தில் வேறு ஒரு பக்கத்தில் தாழ்வார ஓரமாக காற்றை உத்தேசித்து போட்டுக் கொண்டு தலையணையை எடுக்கப் போனபோது வாயில் கதவு படபடவென்று தட்டப் பட்டது.

வேகமாகச் சென்று கதவைத் திறந்தான். சரோஜாவின் கணவனும் இன்னும் சில இளைஞர்களும் நின்று கொண்டிருந்தனர்.

மாப்பிள்ளையின் முகம் பேயறைந்ததைப் போலிருந்தது.

''உள்ளே வாங்கோ - உட்காருங்கோ-'' என்றபடி கதவை அகலத் திறந்துவிட்டு ''அம்மா மாப்பிள்ளை வந்திருக்கார்'' - குரல் கொடுத்தான்.

வாரிச் சுருட்டிக் கொண்டு அம்மா எழுந்து வந்தாள். அவிழ்ந்து முதுகில் புரண்ட கூந்தலை முடிந்து கொண்டே வாசலுக்கு ஓடி வந்தாள். சரோஜாவுக்கு நெருப்பு காயம் ஏற்பட்டுவிட்டது. மண்ணெண்ணெயை மேலே கொட்டிண்டு பத்தவச்சுண்டா-'' மாப்பிள்ளை திக்கினான்.

''ஐயோ சரோஜா!- என்ன காரியம் செய்தே'' அம்மா எட்டு வீடு கேட்குமளவு அலற விஷயம் ஒரு வினாடியில் அக்கம்பக்கம் பரவி விட்டது.

''நெருப்பு பத்தவச்சுக் கொண்டு விட்டாளா - அட பாவிப் பொண்ணே - சித்த பொறுத்துக் கொண்டிருக்கப்

படாதா. பாவம் பார்வதி அவ வயத்திலே நெருப்பு வச்சுட்டியே அம்மா'' புலம்பினாள் எதிர் வீட்டுப்பாட்டி.

''டாக்சி எடுத்துக் கொண்டு வரோம். ஆஸ்பத்திரியில் தானே இருக்கா. போய் பார்க்கலாம். காயம் ரொம்ப பலமோ மாப்பிள்ளை'' - கூட்டத்தில் ஒருவர் விசாரித்தார்.

ஒரு சில பவுனுக்கும் - வைர மூக்குத்திக்கும் ஒரு பெண் தன் மேல் மண் எண்ணெய் ஊற்றிக் கொண்டு தற்கொலை செய்து கொள்ள முயல்வாளா - என்ன அக்கிரமம். அதிர்ந்து போனான் - அவனையுமறியாது சபரி அழுதான்.

## 6

ஆஸ்பத்திரியில் தீவிரக் கவனிப்பு பகுதியில் மிகவும் மோசமான நிலையில் சரோஜா அனுமதிக்கப் பட்டிருந்தாள்.

வராந்தாவில் கிடந்த பெஞ்சுகள் மீது அவர்கள் அனைவரும் கவலையோடு காத்திருந்தனர். உள்ளேயிருந்து வேகமாக வெளிப்பட்ட நர்ஸிடம் ஓடிச் சென்று விசாரித்தாள் அம்மா.

குழந்தைக்கு எப்படிம்மா இருக்கு. பேசற நினைவு இருக்கா?'' தொண்டையை அழுகை அடைத்தது.

''டையிங் ஸ்டேட்மெண்ட் வாங்கவே ரொம்ப பாடா இருக்கு - அரைகுறை நினைவு - பேச முடியாம தொண்டை எல்லாம் நெருப்புக் காயம்.''



ஓவென்று அலறி அழ இருந்த அம்மாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டு வராந்தாவுக்கு வெளியே பரவிக்கிடந்த தோட்டத்திற்குத் தள்ளிக் கொண்டு வந்தான் சபரி.

சரோஜாவைப் பறிகொடுக்கப் போகிறோம் என்ற உள் உணர்வில் ஏற்பட்ட துயரம் அவனது கண்களிலும் நீர் புரளச் செய்துவிட்டிருந்தது.

''சரோஜா ஏன் இப்படி செஞ்சா. சபரி அவளை நாம் மறுபடி பார்க்கமாட்டோமாடா. என் வயிற்றிலே தீயை வச்சுட்டாளே. சரோஜா ஏம்மா இப்படிப் பண்ணினே -'' குலுங்க குலுங்க அவள் அழ - கண்ணீரை சிந்தியபடி அம்மாவைச் சாந்தப்படுத்த முயன்றான்.

''அப்படித்தாம்மா டாக்டர், நர்ஸ்கள் நம்மை முதலில் பயமுறுத்துவா. நம்பிக்கை தெரிவித்துவிட்டு ஏதாவது ஆயிட்டா அவர்கள் கௌரவம், பேர் எல்லாம் கெட்டுடுமே. அதனால் மதில்மேல் பூனையாகப் பதில் சொல்லுவா.''

''சரிடா சபரி, நான் மரத்தடியிலே உட்கார்ந்துண்டு என் இஷ்ட தேவதையை ஸ்மரிச்சுண்டு இருக்கேன். நீ சித்த போய் என்னன்னு பார்த்துட்டு வந்து சொல்லிண்டு இரு. எனக்கு அந்த வராண்டா பெஞ்சியிலே மாப்பிள்ளை மூஞ்சியைப் பார்த்துண்டு உட்கார்ந்திருக்க அருவருப்பா இருக்குடா. நம்ப குழந்தையை அனுசரிச்சுக்கொண்டு போகாத கிராதகண்டா அவன்.''

''சரிம்மா. மௌனமா அழாம தைரியமா இருங்கோ. நான் பார்த்துட்டு வரேன்'' அம்மாவுக்கு ஆறுதல் பல சொல்லிவிட்டு அவன் மெள்ள கலவரத்துடன் சென்றான்.

வெளியே வந்த டாக்டர் முகமே உண்மையைச் சொல்லி விட்டது.

''பிரயோஜனமில்லை. ரொம்ப நெருப்புக் காயத்தினால் ஏற்பட்ட ஷாக். இதயம் நின்று போச்சு. செத்துப் போய் சில நிமிடங்கள் ஆகிறது. உடலை உடனே தர முடியாது. போஸ்ட்மார்ட்டம் பண்ணி பிறகுதான் தருவாங்க. இப்போ இது போலீஸ் கேஸாச்சே! தற்கொலையா - கொலையான்னு முடிவு தெரியணுமே!'

டாக்டர் தமது தோள்களைக் குலுக்கிவிட்டு டக்டக்கென்று பாதணி சப்திக்க நடந்து போய்விட்டார்.

சரோஜா - என்று ஒருமுறை கூவிவிட்டு வாயில் துண்டை அடைத்துக் கொண்ட ஜகதீசனைப் பார்க்க சபரிக்குப் பிடிக்கவில்லை.

கடன்கார பாவி. என் தங்கையை காவு கொண்டு விட்டானே? ஆத்திரமும் துக்கமும் தாளாது தோட்டத்திற்கு ஓடினான்.

''என்னடா டாக்டர் சொல்றார்?'' அம்மா தவித்த போது தாங்க முடியாது அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டான்.

ஆஸ்பத்திரியில் அலறிப் புடைத்துக் கொண்டு அழக்கூடாது. மற்ற நோயாளிகளுக்கு இடைஞ்சலாக இருக்கக் கூடாது. ஆனாலும் தாள முடியவில்லை. ''அம்மா, சரோஜா போயிட்டாம்மா - போயிட்டாம்மா - புக்ககத்தாரின் பிடுங்கலைத் தாங்கமுடியாது உலகத்தை விட்டே போயிட்டாம்மா-'' புலம்பினான்.

ஓவென்று அழத் தொடங்கிய அம்மாவின் வாயைப் பொத்தி அவளை வெளியே அழைத்துக் கொண்டு ஒரு



ஆட்டோவில் ஏற்றினான். ''அவ மூஞ்சியையாவது சித்த பார்க்கிறேண்டா'' அம்மா அழுதபோதுதான் சொன்னான்.

''மூஞ்சின்னு ஒண்ணு இருந்தாதானே அம்மா. ஏகப்பட்ட நெருப்புக்காயம். பேச முடியாது உயிர்மட்டும் லேசா துடிச்சுண்டு இருந்திருக்கு. அவதான் தன் மேலே நெருப்பு வச்சுக் கொண்டாளோ. அந்த பாவிகள் மேலே ஊற்றி எரிய விட்டார்களோ, கடவுளுக்குத்தான் வெளிச்சம்'' குமுறினான்.

அன்று இரவு இருவரும் உறங்கவேயில்லை. அம்மா நினைத்து நினைத்து அழுதாள்.

அவன் தாழ்வாரத்தில் பல யோசனைகளுடன் உலவிக் கொண்டிருந்தான். சில தினங்களுக்கு முன்னர் பத்திரிகையில் வந்ததொரு விவரம் அவன் மனதை வெகுவாக உறுத்தியது. பெண் வைத்திய மருத்துவக் குழுவைச் சேர்ந்த ஒரு பிரபல வைத்தியர் பத்திரிகைக்கு கொடுத்த செய்தி அது.

''திருமணமான பெண்கள் தற்கொலை செய்து கொள்வது இந்தியா முழுவதிலும் அதிகமாகிவிட்டிருக்கும் ஒரு கலவரமான நிலையாக இப்போது உள்ளது. அதைப்பற்றி எங்கள் கூட்டத்தில் பேசப்போகிறோம். தற்கொலை செய்து கொள்ளும் முறைகளை ஊன்றி கவனிக்கும்போது நமது சமுதாய அமைப்பில் ஒரு வித்தியாசமான மாறுதல் சமீப காலத்தில் ஏற்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. மண்ணெண்ணெய் ஊற்றி தம்மேல் நெருப்பை வைத்துக் கொண்டு - அதன் விளைவாக இறக்கும் பெண்கள் முன்னைவிட மும்மடங்காகி விட்டிருக்கின்றனர். இவர்களில் எண்பது

சதவிகிதம் கல்யாணமான பெண்கள் - கல்யாணமாகி இரண்டு அல்லது மூன்று வருஷத்திற்குள் இப்படிப்பட்டதொரு முடிவைத் தேடிக் கொள்கின்றனர். ஆஸ்பத்திரியில் புள்ளி விவரத்தைப் பார்த்தால் தென் சென்னையில் மட்டும் ஆண்டுக்காண்டு நெருப்புக்காயத்தில் இறக்கும் பெண்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டு போகிறது. வேலை செய்து கொண்டிருப்பவர்களாக பலர் இருந்தும், பொருளாதார சுதந்திரமில்லாத குறை இவர்கள் மரணத்திற்கு ஓரளவு காரணமாக கருதப்படுகிறது. தங்களது கணவன் - மாமியார் உறவினர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய முடியாத தோல்வியும் ஒரு காரணம். இந்த மரணங்களை அலசிப்பார்க்கும்போது - சில தற்கொலையல்ல, கொலையென்ற சந்தேக கோட்டிற்குள் வந்து நிற்கின்றன. ஆனாலும் நிச்சயமாக நிரூபிக்க முடியாத நிலையில் உள்ளது.''

''சரோஜாவின் நாத்தானரும் - மாமியாரும் சேர்ந்து கொண்டு மண்ணெண்ணெயை ஊற்றி அவளைக் கொளுத்திக் கொன்று விட்டார்களோ? கூசாமல் இருவரும் கொலை செய்யும் இனத்தைச் சேர்ந்த படுபாவிகள். போஸ்ட் மார்ட்டத்தில் தெரியாது போனால் - சரோஜா மட்டும் பேசமுடிந்து மரண வாக்குமூலம் கொடுத்திருந்தால்... தன்னைக் கொலை செய்தவர்கள் மாமியாரும் நாத்தனாரும் என்று கூறிவிட்டுப் போயிருந்தால் அவர்கள் இருவரையும்-'' கைகளைப் பிசைந்து கொண்டு ஓங்கித் தலையில் அடித்துக் கொண்டான் சபரி.

மறுநாள் மாலை பிரேத பரிசோதனைக்குப்பின் சரோஜாவை ஒரு மூட்டையாகக் கட்டி எடுத்துக்கொண்டு நேரே இடுகாட்டுக்குப் போய்விட்டனர். பாதிமுகம்



வெந்து பிரேத பரிசோதனையில் கூறுபோட்ட அந்த கண்றாவி உடலை, பார்க்கத் தாயை அவன் அனுமதிக்கவில்லை. தற்கொலை என்று கேஸ் போலீசில் பதிவாகியது.

ஆனால் சபரியின் மனம் சமாதானமடையவில்லை. ஜகதீசன் அக்கம்பக்கதாரை அணுகி துப்பறிந்து பார்த்தான். உண்மையில் அது கொலையாக இருந்தால்கூட யார் சொல்லப் போகிறார்கள்?

நமக்கென்ன வம்பு. பின்னால் கோர்ட் - போலீஸ் ஸ்டேஷன் என்று நடக்க நேரும். நம் காரியம் கெட்டுப் போகும் என்ற மனப்பான்மை.

''என்னமோ ஒரே சத்தம் கேட்டது. குளியலறை கதவை ஓங்கி உதைத்துத் திறந்தாங்களாம். சரோஜா புடவை தலையெல்லாம் பத்திக்கொண்டு கிடந்தாளாம். ஒரு குடம் ஜலத்தைக் கொட்டி முதலில் தீயை அணைச்சுட்டாங்களாம். கடிதாசி ஏதும் எழுதிவச்சுட்டு இந்த காரியத்தைப் பண்ணலையாம்'' அடுத்த வீட்டுக்காரர் ரகசியமாகச் சொன்னார்.

''அவ மாமியார் பாவம் கவலைப்படறா. செஞ்சதை ஒழுங்கா செய்யாம பாவிப்பெண் எங்களை காட்டிக் கொடுக்கிறாப்பலே போயிட்டாளேன்னு...''

''ஒரு கடுதாசி எழுதி வச்சுட்டு கொளுத்திண்டு சாகறதுதானே? அனாவசியமா போலீசார் எங்களை என்ன கேள்விகள் கேட்டாங்க. ஊரார் சந்தேகத்தோட பார்க்கிறாங்க - வடக்கே ஒரு மாமியாரும் - புருஷனும் சேர்ந்து ஒரு பெண் மேலே மண்ணெண்ணெயைக் கொட்டி பத்த வச்சுட்டு போலீசில் அகப்பட்டுக் கொண்டு

திண்டாடற கதையை காது கேட்க கோடி வீட்டுக்காரி சொல்றப்போ நாக்கை பிடுங்கிக்கலாமான்னு அவமானமா இருக்கு -

''இவ போயிட்டா மகராசி... எங்க ஜகதீசனுக்கு சட்டுன்னு பொண் கொடுக்க பலர் தயங்குவாளே.''

சரோஜாவின் மாமியார் பலரிடம் கூறி முறையிட்டுக் கொண்டிருந்தாள்.

பத்திரிகைகளில் எல்லாம் சரோஜாவின் கதை இடம் பெற்றுவிட்டது. சபரிநாதனை துக்கம் விசாரிக்காதவர்கள் அலுவலகத்தில் ஒருவர் கூட பாக்கியில்லை. நேரே வர முடியாது, வசந்தா அவனுக்கு தன் அனுதாபத்தை கடிதம் மூலம் தெரிவித்திருந்தாள்.

அம்மா எழுந்திருக்கக்கூட சக்தியின்றி துயரத்தில் துவண்டு போய்விட்டிருந்தாள்.

அந்த நிலையிலும் அவளுக்கு தன் கணவரைப் பற்றிய நினைவு! ''பேப்பர்ல பார்த்திருப்பார் - எதுக்கும் நீ ஒரு வார்த்தை நடந்ததைப் பற்றி சொல்லிவிட்டு வந்துடு-'' அம்மா விக்கி அழுதாள்.

அவளுக்கு அமைதி கொடுக்க - அப்படியே செய்கிறேன் என்று தலையை ஆட்டினான். ஆனால் அவன் தன் தந்தையை சந்திக்க விரும்பவில்லை. பெற்றவன் ஒழுங்காக இருந்திருந்தால் சரோஜாவுக்கு இந்தக் கதி ஏற்பட்டிருக்காது என்றதொரு எண்ணம் ஆத்திரமாக அவனுள் புகைந்து கொண்டிருந்தது.

''ஒரு சிநேகிதன் மூலம் போய் சொல்ல ஏற்பாடு செய்திட்டேன். இப்போ நீங்க உங்க உடம்பை கவனிச்



சிக்கனும். இந்த பயங்கரமான துக்கத்திலே ஒரே வாரத்தில் பாதியா இளைச்சு போயிட்டேள் அம்மா.''

அம்மாவைத் தேடிக் கொண்டு அவள் வேலை பார்த்த இடத்து பெரிய மனிதர் வீட்டுப் பெண்கள் சிலர் துக்கம் விசாரிக்க வந்து போயினர். அவர்களில் ஒருத்தி அந்தப் பகுதியின் மாதர் சங்கத்தைச் சேர்ந்தவள். அவள்தான் உசுப்பிவிட்டுப் போனாள்.

''சரோஜாவின் மரணம் சந்தேகமான சூழ்நிலையில் ஏற்பட்டிருக்கிறது. இதை அரசு மறு பரிசீலனை பண்ணி முடிவெடுக்க வேண்டும் என்று நாங்கள் பெண்கள் பலர் கையெழுத்துப் போட்டு ஒரு மனுவை நேரிடையாக ஆளுநரிடம் ஒப்படைக்கப் போகிறோம். கூட்டங்கள் போட்டு இந்த மாதிரியான தீ விபத்துக்களை போலீஸ் தீவிரமாக விசாரிக்க வேண்டும் என்ற தீர்மானங்களை எழுப்பப் போகிறோம்'' என்று கூறிவிட்டுப் போனாள்.

அவள் சும்மா சொல்லவில்லை. கூட்டம் போட்டுப் பேசி... பல பெண்கள் கையெழுத்தை வாங்கி; ஊர்வலமாகச் சென்று ஆளுநர் மாளிகையில் சேர்ப்பித்து விட்டு வந்தனர் - பத்திரிகைக்காரர்களுக்கு ஒரு சூடான செய்தியும் - படங்களும் கிடைத்தன. மறுபரிசீலனை செய்த பின்னரும் தற்கொலை என்றுதான் சரோஜாவின் மரணம் ஊர்ஜிதமாகியது.

''இல்லை... இல்லை, இது கொலை, தன்மேல் மண்ணெண்ணெயை ஊற்றிக் கொள்ள வேண்டிய கோபம் வரும்வரை குழந்தையை அந்த ராட்சசிகள் பிடுங்கித் தின்றிருக்கிறார்கள். ஆகவே கொலைக்கு சமந்தானே'' என்று வேலையிலிருந்து வந்த சபரி ஒரு நாள் கோபத்துடன் - துயரத்துடன் கத்தினான்.

சரோஜா இறந்து இரண்டு மாதங்களாகி விட்டிருந்தன. குச்சியாக இளைத்துப் போன அம்மா, டிபன் செட்டுடன் அப்பாவைக் காணச் செல்வதைப் பற்றி அவன் ஏதும் பேசவில்லை - தடுக்கவும் இல்லை.

ஒருநாள் வீடு வந்த அம்மா நெஞ்சைப் பிடித்துக் கொண்டு தூண் மீது சாய்ந்தபடி உட்கார்ந்தாள்.

''சபரி - என்னவோ மார்லே அடைக்கிறது. கொஞ்சம் குடிக்க ஜலம் கொண்டுவா'' - திணறினாள்.

முகம் முழுவதும் வியர்த்து விட்டிருந்தது. வலியால் துடிப்பவள் போல கண்கள் சுருங்கின.

தண்ணீரைக் கொண்டு வந்தபோது ஒரு வாய் பருகின அம்மா அவனைப் பார்த்து லேசாக முறுவலித்தாள்.

''ஹார்ட் அட்டாக் போல இருக்கு - ஆஸ்பத்திரியிலே சேர்த்துடு. உனக்கு ஏன் வீண் கஷ்டம்'' என்றாள்.

மறுபடி ஆஸ்பத்திரிக்கு அவன் நடக்க வேண்டிய துர்பாக்கியம்.

இரண்டு தினங்களில் கொஞ்சம் குணமானது போலத் தெரிந்தாள். வீட்டுக்குப்போக வேணும் என்று பிடிவாதத்துடன், ஆஸ்பத்திரியிலிருந்து திரும்பிவிட்டாள்.

கூடத்து தரையில் பாயில் கிடந்தவள் - மகனை அருகில் கூப்பிட்டாள்.

''பூவும் பொட்டுமாக புறப்பட்டு போறோமேன்னு எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு சபரி. மறுபடி நெஞ்சு வலிக்கிறது. அப்பாகிட்டே நீ சரோஜாவைப் பத்தி ஒண்ணு சொல்லலையாம். உனக்கு அவரைப் பார்க்க



பிடிக்கல்லை பரவாயில்லை. உன்மேல் அதுக்காக எனக்கு கோபம் இல்லை. ஆனால் ஒண்ணே ஒண்ணு கடைசியா கேட்டுக்கிறேன். எனக்கப்புறம் அவர் ரொம்ப நாள் இருக்கமாட்டார். வேப்ப மரத்தடியிலே வெய்யில் மழை - குளிர்ன்னு அவர் உடம்பு எத்தனை நாளைக்கு தாக்குபிடிக்கும். என்னை மஞ்சளும் குங்குமுமா அனுப்பிட்டு - அவர் காலம் முடிஞ்சதும் அவரை அனாதைப் பொணமாக கிடக்க வைக்காம அவரையும் அனுப்பிடுடா...'' இதைச்சொல்லி முடிக்க அவளுக்கு நீண்ட நேரம் பிடித்தது. மூச்சு வாங்கியது. கண்களில் நீர் பெருகியது.

''அம்மா! கவலைப்படாதீங்க. உடம்பை அலட்டிக்காதீங்க. அப்படியே செய்துடறேன், சத்தியம்...'' என்றதும் அவள் முகத்திலே முறுவல் அரும்பியது. அவனது கரத்தை அன்போடு பிடித்துக் கொண்டிருந்தாள் சில நிமிடங்கள். தன் பிடியிலிருந்து அவள் கரம் நழுவித் தானே கீழே விழுவதைக்கண்டு திடுக்கிட்டு அம்மாவின் முகத்தைத் தொட்டு பார்த்தான் சபரி. அவள் அமைதியாக செத்து விட்டிருந்தாள்.

தெருவே அவளது கடைசி யாத்திரையைக் காண கூடிவிட்டது. கேள்விப்பட்ட பெரிய மனிதர் வீட்டு அம்மாக்கள் காரில் வந்து இறங்கினர். கவலை தெரிவித்தனர். ஈமச் சடங்குகளுக்கு பொருள் தந்து உதவினர். சிவப்பு சல்லா துணியில் பெரிய குங்குமப் பொட்டும் மல்லிகை மாலையுமாக அவள் சாவில் கூட அழகான அமைதியான ஒரு நல்ல பெண்மணியாக இடுகாட்டிற்கு ஜாம் ஜாம் என்று போய் விட்டாள்.

பெற்றவளுக்கு நெருப்பு போட்டுவிட்டு சங்கதியை சொல்லிவிட கசப்பை விழுங்கிக் கொண்டு முத்துலிங்கீஸ்வரர் ஆலயத்திற்குள் நுழைந்தபோது அங்கே ஒரு கூட்டம்.

''இந்தக் கிழம் மரத்தடியில் செத்துக் கிடக்கிறது. அனாதை பொணம்-'' என்று முணுமுணுத்த அர்ச்சகரிட மிருந்து உத்திரவு வாங்கிக் கொண்டு போலீஸ் வந்து புகுந்து மேலே பற்பல சிக்கல்கள் ஏற்படுமுன் டாக்டர் ஒருவரை அழைத்து வந்து, சாவு... இயற்கை கோளாறி னால் ஏற்பட்டது என்றதொரு சான்றிதழ் வாங்கிக் கொண்டு ஒரு டாக்ஸியில் தூக்கிப் போட்டுக் கொண்டு இடுகாட்டிற்கு விரைந்தான்.

முதல்நாள் தாயாருக்கு நெருப்பு போட்டு கடமையை முடித்தான் - அடுத்தநாள் அப்பாவை அனுப்பி வைத்தான்.

எல்லோரும் போய் அனாதையாக... தன்னந்தனியே அவன் தவித்துக் கொண்டிருந்தான். கொஞ்ச நாட்களாக வசந்தா அவனைக் கடற்கரையில் சந்திப்பதை நிறுத்தி விட்டிருந்தாள். என்ன காரணம் என்று கவலையுடன் ஒருநாள் அவளது அலுவலகத்திற்கே சென்று பார்க்க முயன்றான்.

''அவங்க போன மாதக் கடைசியிலேயே வேலையை விட்டுப் போய் விட்டாங்க. கல்யாணம் ஆகப் போகிறதாகப் பேச்சு காதில் விழுந்தது'' என்றாள் ரிஸப்ஷனிஸ்ட்.

அதிர்ந்து போனான் அவன். அப்படி நடக்குமா? அப்பொழுதுதான் அடுத்தநாள் மாலை அந்த மொட்டைக்



கடிதம் வந்தது. மறுநாள் காலை முதலாளி அவனைக் கூப்பிட்டு அவனது வேலைக்கு சீட்டுக் கிழித்து விட்டார்.

இப்போது அவனுக்குப் புரிந்தது. அம்மா சொன்னது எத்தனை பெரிய உண்மை. பணக்காரர்களோடு பழகும் போது பாம்போடு பழகுவதுபோல ஜாக்கிரதையாக இருக்கணும். அவன் கொஞ்சம் அசட்டையாக இருந்து விட்டான். இல்லை இல்லை ரொம்பவே நம்பிவிட்டான். ஆசையைத் தூண்டிவிட்டு அவள் மோசம் செய்து விட்டாள். அந்தக் கடிதம் உண்மையாக இருந்தால் - உண்மைதான்! இல்லாவிட்டால் ஒரு தடவையாவது அவனை சந்திக்க முயற்சிக்க மாட்டாளா? அவன் வேலைக்கு வெடி வைத்துவிட்டதுடன் - அவனை உதறிவிட்டு வேறு ஒருவனுக்கு கழுத்தை நீட்டப் போகிறாள் வசந்தா.

சினிமாவில்தான் நடக்கும். குடிசைவாழ் காதலனை பங்களா வாசியான பணக்காரப் பெண் மணந்து கொள்ளும் வினோதம்...

நடைமுறையில் பணம் பணத்தைத்தான் தேடி ஓடும். அம்மா உலக அனுபவமறிந்தவள். சொன்னது அத்தனையும் உண்மை.

தங்கை இறந்து போன துயரம் - தாயின் மரணம் - வேண்டாத அப்பாவுக்கு கடைசி கடமை நிறைவேற்றி வந்துவிட்ட மனக்கசப்பு - வேலை போனதொரு கஷ்டம் - காதலி தந்த ஏமாற்றம் இத்தனையையும் அவனால் ஒரேடியாக தாங்கிக் கொள்ள முடியவில்லை. முகத்தைக் கூட மழித்துக் கொள்ளப் பிரியமின்றி தாடியும், மீசையுமாக வீட்டிலிருந்த அரிசி பருப்பு தீர்ந்து போகும்

மட்டும் தானே சமைத்து சாப்பிட்டு விட்டு வீட்டைப் பூட்டிக் கொண்டு வேலை தேடி அலைந்தான். பல அலுவலகப் படிகளை ஏறி இறங்கியதுதான் மிச்சம். முந்தைய அனுபவம் ஏதாவது உண்டா? அப்படியிருந்தால் சான்றிதழ் வாங்கி வரவும் என்று சிலர் துரத்தினர்.

சிலர் வேலையில்லை என்று கைவிரித்தனர்.

அம்மா உயிரோடு இருந்திருந்தால் யார் காலிலாவது விழுந்து மகனுக்கு ஒரு வேலை தேடிக்கொடுத்திருப்பாள்.

முந்திய அனுபவம் உண்டு என்று சான்றிதழ் கேட்க கங்காதரன் அண்ட் கோவில் கால் வைக்க அவனுக்கு துணிச்சல் இல்லை.

மனிதன் கூர்க்காவை விட்டு வாசல் வரை நெட்டித் தள்ளச் சொல்லி அவமானப்படுத்துவான்.

வசந்தியால் பட்ட அவமானம் போதும். இன்னும் அலுவலகமே கொல்லென்று சிரிக்குமளவு அவன் அவரிடம் தொடர்ந்து அவமானப்படத் தேவையில்லை. வங்கியிலிருந்த சேமிப்பெல்லாம் அம்மா - அப்பா இருவரையும் கரை சேர்ப்பதில் கரைந்து போனது - மீதி இருந்தது அவனது அன்றாட சாப்பாட்டுக்கும் வேலை தேடி அலைய பஸ் செலவிற்கும் போய்விட்டது. பால்காரனிலிருந்து சுற்றிலும் டீக்கடை நாயர் வரை பல இடங்களில் பாக்கி வைத்துக் கொண்டிருந்தான். ரொம்பவே மனதை உறுத்தியது.

அம்மா உயிருடன் இருக்கையில் பாக்கி பணம் கேட்டு மளிகைக் கடைக்காரரோ வீட்டுக்காரரோ வாசலில் வந்து நின்றதில்லை.



மாதம் பிறந்ததும் அம்மா தானே மளிகைக் கடைக்குப்போய் புத்தகத்தைக் காட்டி பாக்கியைத் தீர்த்து விட்டு கையெழுத்து வாங்கிக் கொண்டு வந்திருப்பாள். அப்படியே வழியில் எதிர்ப்படும் வீட்டுக்காரரைப் பார்த்து மறக்காம ஞாயிற்றுக்கிழமை வந்து வாடகையை வாங்கிக் கொண்டு போங்கோ என்று ஞாபகப் படுத்துவாள். வேலு முதலியார்தான் கொஞ்சம் அலட்டிக் கொள்வார். வீட்டை சுற்றிப் பார்த்துவிட்டு புருவங்களை உயர்த்துவார். இங்கே என்ன இடிஞ்சிருக்கு, அங்கே என்ன கறை என்று ஏதாவது குற்றம் சொல்லிப் பார்ப்பார்.

அம்மா புன்னகையுடன் பதிலளித்தபடி வாடகையையும் பட்சணங்களையும் தந்து அவரை வெட்டி விடுவது வழக்கம்.

மனிதன் வாடகைக்குப் பேயாக அலைகிறான் - பத்து நாள் கெடு வேறு வைத்துவிட்டுப் போயிருந்தான். மிகவும் தீவிரமாக யோசித்துவிட்டு வீட்டைச் சுற்றிலும் ஆராய்ந்தான்.

அம்மாவின் சொத்து ஒரு பெரிய வெந்நீர் தவலை, பட்சணம் செய்யும் பாத்திரங்கள், மிகவும் தேய்ந்துபோன ஒரு வெள்ளி டம்ளர், தாத்தா உபயோகித்ததாகச் சொன்ன ருத்ராட்ச மாலை - அந்தக் காலத்தில் அவர் நேப்பாள் பக்கம் ராமாயணம் வாசிக்கச் சென்றபோது கிட்டியதாம். உண்மையான உயர்ந்த ரக ருத்திராட்ச மாலை - நல்ல விலை போகும் என்று அம்மா ஒதுக்கி வைத்திருந்த - இவைகளை எல்லாம் விற்றால்...

ருத்திராட்ச மாலையை நகைக் கடைக்காரர் பல தடவை சோதித்துவிட்டு மிகவும் தயக்கத்துடன் நூறு ரூபாய்க்கு விலை பேசினார்.

வெந்நீர் தவலையையும் - மற்ற பாத்திரங்களையும் கடையில் போட்டதற்கு முந்நூறு ரூபாய் கிடைத்தது.

வெள்ளி டம்ளர் - அம்மா அவனுக்குக் கொடுத்து விட்டுப் போனதொரு தங்க மோதிரம் எல்லாவற்றையும் விற்று ஆயிரம் வரை சேர்த்தான்.

கடன்காரர்கள் வாயைப்பூட்ட அந்தப் பணம் ஓரளவு உதவியது. கையிலிருந்த மீதி சில ரூபாயுடன் அவன் மறுபடியும் வேலை தேடி பசியும் தாகமுமாக அலைந்து கொண்டு அலுப்புடன் வீட்டிற்கு வந்தபோது மிகவும் மனமொடிந்து போயிருந்தான்.

அடுத்த நாள் அந்த ஜவுளிக்கடையில் போய் கேட்டுப் பார்ப்பது. இல்லாவிட்டால் மூட்டைப் பூச்சி மருந்து... சே! அத்தனைக் கோழையில்லை. வேலை கிடைக்காவிடில் புதிதாக ஒரு வேலையை அவனே தேடிக் கொள்வது. அதற்குத்தான் அவன் அப்பா வழிவகுத்து விட்டுப் போயிருக்கிறாரே?

அருகிலிருந்த ஓட்டலில் ஒரு கப் டீ வாங்கிக் குடித்து விட்டு மீதமிருந்த இரண்டு ரூபாய்களை கெட்டியாக கையில் பதுக்கி வைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து படுத்தான்.

தலைக்கு மேல் ஒரு கூரை இருந்தால் பட்டினியாக வயிற்றின் மீது ஈரத் துணியைப் போட்டுக்கொண்டு தூங்கிவிடலாம். அம்மா சொல்வது வழக்கம். வாடகை பாக்கியைத் தந்துவிட்டான். தலைக்குமேல் ஒரு கூரை அவனுக்கு இன்னும் ஒரு மாத காலத்திற்கு இருந்தது - ஆனால் பசி அப்படி ஒன்றும் ஈரத் துணியில் அடங்கும் சங்கதியாக இருக்கவில்லை.



ஒரே சமயம் பல எலிகள் புகுந்து குடலைக் குடைவதைப் போன்றதொரு வேதனையில் பலமுறை எழுந்து உட்கார்ந்தான். உடம்பின் மீது வந்து அப்பிய கொசுக்களை அடித்துக் கொன்று கோபத்தைத் தீர்த்துக் கொண்டான் - பானையில் இருந்த தண்ணீரை விழுங்கினான். காய்ந்த குடல் முறுக்கியபோது தூக்கமா வரும்? புரண்டு புரண்டுபடுத்து - அப்பாடா பசியின் களைப்பிலேயே அவன் எப்படியோ தூங்கிப் போனான்.

## 7

**கா**லையில் பரபரப்புடன் எழுந்தான். பல் துலக்கினான். கிணற்றடியிலேயே நின்றபடி இரண்டு வாளித் தண்ணீரை இழுத்து குளிரைப் பொருட்படுத்தாது தலையில் ஊற்றிக் கொண்டான். குளியலை வேகமாக முடித்துக்கொண்டு கதவைத் தாளிட்டுவிட்டு உள்ளே வந்தான். ஈரமான லுங்கியையும் பனியனையும் முற்றத்து அண்டா தண்ணீரில் அலசிப் பிழிந்து கொடியில் போட்டுத் துவாலையில் உடலைத் துடைத்துக் கொண்டான்.

வேலை தேடிப்போக என்று பத்திரமாக பெட்டி போட்டு வைத்திருந்த ஷர்ட் பாண்டை உடுத்திக்கொண்டு பழைய சட்டைப் பையில் தேடி எடுத்த மீதி சில்லரையுடன் வீட்டு வாயிலைப் பூட்டிக்கொண்டு புறப்பட்டான்.

ராத்திரியே பட்டினி, இனிநாள் முழுவதும் பட்டினியாக அலைய முடியாதே? அந்தப் பெரிய துணிக்கடைக்காரர் சொல்லியிருந்தாரே இன்று போய்

நாளை வா என்று - அதையும் பார்த்துவிட வேண்டாமா? அதற்காவது தெம்பு வேண்டாமா?

தெருமூலை ஓட்டலில் போய் ஒரு மேஜைக்குப் பின் சுவற்றோரமாக உட்கார்ந்து கொண்டு சில்லரையை எண்ணிப் பார்த்தான். பஸ் செலவு போக காலை இட்லி, காப்பிக்கும் - பகல் வேளைக்கு வெறும் தயிர் சாதத்தை வாங்கி தண்ணீருடன் விழுங்க போதுமானதாக அது இருந்தது.

அந்த துணிக் கடைக்காரர் சொன்னபடி வேலை கிடைத்ததோ அவன் மறுநாளைப் பற்றி கவலைப்பட வேண்டாம்.

மளிகைக் கடைக்காரரிடம் கடன் வாங்கி சாமான் களைப் போட்டுக் கொண்டு காஸ் தீர்ந்து போனாலும் ஸ்டவ்வில் சமைத்துக் கொள்ளலாம். பின்னர் மெள்ள பாதி மாதத்தின்போது கடைக்காரரிடம் சம்பளத்தில் ஒரு பகுதியைக் கடனாக வாங்கிக் கொண்டு காஸ் வரவழைத்து - ''இரண்டு இட்லி, சாம்பார்... அப்புறம்'' பையன் தட்டைப் பட்டென்று மேஜை மீது வைத்தபோது நினைவினின்று விழித்துக் கொண்டான்.

காப்பி மட்டும் போதும் என்றபடி சுற்றிலும் பார்த்தான்.

காலைவேளை - அலுவலக உடையில் வீட்டில் டிபன் சாப்பிட நேரமில்லாதவர்கள் கூடியிருந்தனர்.

அவனைப்போல அதில் வேலை வேட்டைக்கு கிளம்பி இருக்கும் வாலிபர்கள் எத்தனையோ? யார் கண்டது?



''ஏண்டா அந்த பால்ராஜ் அண்ட்கோ சங்கதி என்ன ஆச்சு'' - அடுத்த மேஜையில் அமர்ந்திருந்த தொங்கு மீசை வாலிபன், தன் எதிரேயிருந்த நண்பனை அதட்டிக் கேட்டது அவன் காதுகளில் நன்றாகவே விழுந்தது. இட்லியை முடித்துவிட்டு அருகிலிருந்த பேசனில் கையை கழுவிக் கொண்டு அந்த எதிர் ஆசனத்து வாலிபனையே நோக்கினான். அவனும் அவனைப்போல வேலைக்கலை கிறவனா? வியப்புடன் பார்த்தான். பளிச்சென்று உடுத்திக் கொண்டிருந்தான். அழுக்கு ஆடைகளுடன் வேலைக்குப் போய் நின்றால் எடுத்த எடுப்பிலேயே வாசலில் நிற்கும் அலுவலகப் பையனே விரட்டிவிடுவானே.

ஆடைபாதி... ஆள்பாதி என்றாகிவிட்ட உலகம், ஒரு திறமையான நல்ல உழைப்பைத் தரும் வாலிபன் என்று அவனது புத்திசாலித்தனத்தை எடைபோடுவதற்குப் பதில் சிபாரிசுகளுக்கு மதிப்புக் கொடுத்து உடைக்கு மதிப்பெண் வழங்கி வேலையை வழங்கும் காலமாகி விட்டதே. இயந்திரங்களை ஆயிரக்கணக்கில் உருவாக்கி வெளியே தள்ளுவது போன்று பல்கலைக்கழகங்கள் பட்டதாரி இளைஞர்களை ஆண்டுதோறும் பல ஆயிரக்கணக்கில் உருவாக்கி வெளியே தள்ளி விடுகின்றன.

ஆனால், அத்தனை பேர்களுக்கும் வேலை வாய்ப்பு...?

சுய வேலை வாய்ப்புகளைத் தேடி அமைத்துக் கொள்ள வேண்டும் என்று மேடையிலே பெரியவர்கள் சுலபமாகப் பேசி விடுகிறார்கள். அவனும் இன்னும் சில வாலிபர்களும் அந்த முயற்சியிலும் ஈடுபட்டு பார்த்து விட்டனர்.

அரும்பு மீசையும் - குறும்பு பார்வையும் - வெள்ளை பாண்டும், வரிபோட்ட ஸ்போர்ட் ஷர்ட்டுமாக உடுத்துக் கொண்டு, ''சோப்பு பவுடர் விற்க வந்திருக்கிறோம் ஸார். எங்களுக்கு வேலை கிடைக்காததால் இந்த கமிஷன் வேலையை முயன்று பார்க்கிறோம். ஒரு பாக்கெட் வாங்கி உதவுங்கள்'' என்றால் வீட்டுக்காரர் வினோதமாகப் பார்க்கிறார். அவர் கண்களில் சந்தேகம்.

''தோளில் பையை சுமந்து கொண்டு தெரு முழுவதும் புகுந்து கதவைத்தட்டி வாங்க வற்புறுத்திக் கெஞ்சும் பெண்கள் கூட்டம் போதாது போல புதுசா நீங்க வேறே கிளம்பிட்டீங்களா.''

''சோப்பும் - சீப்பும் - பவுடரும் வீடு வீடாகச் சென்று விற்பது பெண்கள் வேலை. ஆண் பிள்ளையா லக்ஷணமா வேறே உடம்பால் உழைக்கும் வேலை ஏதாவது தேடிக் கொள்ளுங்கள். போங்கோ...'' கத்திவிட்டு கதவை அறைந்து சாத்துகிறார்.

தோட்டத்தை கொத்துகிறோம் என்றால்கூட வேலை தர பயப்படுகிறார்கள். படிச்சப் பசங்க. இவங்களுக்கு தோட்ட வேலை என்ன தெரியும்?

சின்ன பெண்கள் இருக்கிற வீடுன்னு துப்பு பார்த்துக் கொண்டு இப்படி ஒரு கோஷ்டி கிளம்பியிருக்கலாம்.

எதை நம்பி இவர்களை வீட்டு கேட்டைத் திறந்து உள்ளே விடமுடியும் என்று சந்தேகத்துடன் விரட்டு கின்றனர்.

சுய வேலைவாய்ப்பைத் தேடிக் கொள்ளக் கூட ஒரு தனித்திறமை வேண்டும். கூட்டு முயற்சி வேண்டும்.



சோடா புட்டியைத் திறந்தால் பொங்கும் உற்சாகத்துடன் ஆரம்பத்தில் கூட்டுசேர வருகிற வேலையற்ற வாலிபர்கள் தொடர்ந்து முயலுவதில்லை. வெகு சீக்கிரம் சலிப் படைந்து பிரிந்து போய்விடுகின்றனர்.

''அந்த பால்ராஜ் மனுஷன் ஏற்கனவே தன் மச்சானின் சிபாரிசில் வந்தவனுக்கு வேலையைக் கொடுத்துட்டான். விளம்பரம் - இண்டர்வியூ எல்லாம் வெறும் கண்துடைப்பு'' என்றான் அந்த வாலிபன். தொடர்ந்து ''இன்னிக்கு இன்னொரு கம்பெனியைப் போய்ப் பார்க்கப் போறேன். அதில் வேலை கிடைக்காவிட்டால் கந்தல் வேட்டியுடன் 'அம்மா கண்ணில்லாத கபோதின்னு' தகரக் குவளையுடன் பிச்சையெடுக்கப் புறப்படப் போகிறேன்.''

''இப்ப பிச்சை போடுவது தவறுன்னு பிரபலமா விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கையில் கொழு கொழுன்னு தெரிகிற வாலிபன் நீ போய் பிச்சை கேட்டால் என்ன கிடைக்கும் தெரியுமா...?''

''குண்டாந்தடியால் ரெண்டு தலையில் போடுவாங்க. அந்தக் கருவையையே நான் எடுத்துக்கிட்டு ஒரு தொழிலை ஆரம்பிச்சிடுவேன். பசி வந்திடப் பத்தும் பறந்து போகும்னானே - அது உண்மை. இன்னிக்கு உன் தர்மத்திலே காலை காபி பலகாரம் கிடைக்கிறது. இன்னிக்கு வேலை கிடைக்காவிட்டால் அந்த குண்டாந்தடியுடன் முடிவு எடுத்துடப் போறேன்.''

''என்னடா அது மர்மமா பேசறே'' - சிரித்தான் தொங்கு மீசை.

''அதாண்டா, பெண்கள் பட்டினியாகக் கிடக்கும் போது வேறு வழியின்றி ஆரம்பிக்கும் அந்த பெரும்

பழைய தொழிலைப் போல ஆண்கள் பட்டினியும் பசியுமாக வாடும்போது பல காலந்தொட்டு கையாளும் அந்தத் தொழில் - கத்தி தடியுடன் ஒரு வீட்டுக்குள் புகுந்து கொள்ளை அடிப்பது சுருக்கமா சொன்னால் திருட்டுத் தொழில்''' - விரக்தியாக வெறுப்பாக சபரியின் எண்ணங்களின் எதிரொலி போல சொன்னான் அந்த வாலிபன்.

வெளியில் வந்த போதும் வெகுநேரம் பஸ்சிற்காக காத்திருந்த போதும் அந்த கடை முதலாளியின் தரிசனத்திற்காக பையன் காட்டிய பெஞ்சியில் உட்கார்ந்து சபரி தவம் கிடந்தபோதும் முன்பின் தெரியாத அந்த வேலையில்லாத வாலிபன், மனம் வெறுத்துப் பேசியது காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

வேலையில்லாத - வயிற்றுப் பசிக்கு சோறு போடுவார் இல்லை என்ற பயங்கர நிலை வந்ததும், சில பெண்கள் அதைத் தாள முடியாது தங்களது கௌரவம், மதிப்பு, குடும்பத்தின் பெயர் இவைகளை உதறி விட்டுத் தமது உடலை விற்கவும் துணிந்து விடுகிறார்கள். முதலில் அவமானமாகத் தோன்றும் இந்தக் காரியம் பின்னர் அனுபவப்பட்டதும், அசட்டையாகிப் போய்விடுகிறது.

பெண்களால் விபச்சாரம் செய்து சம்பாதிக்க இயலும். ஆண்பிள்ளை, அவன் என்ன செய்யமுடியும்! திருடனாக மாறினால்தான் பிழைக்க இயலும்.

இந்த வேலையில்லாத் திண்டாட்டம், நல்ல பெண்களையும் நல்ல இளைஞர்களையும் எப்படி திசை திருப்பி விடுகின்றது. கடவுளே!

''ஸார்! உங்களை முதலாளி கூப்பிடுகிறார்'' - திடுக்கிட்டு விழித்துக் கொண்டு எழுந்தான். திண்டொன்றின் மீது சாய்ந்து கொண்டிருந்தார் முதலாளி.



ஆனாலும் ஏ.சி.அறை. பழைய தினுசையும் - புதிய சுகானுபவங்களையும் கலந்து அனுபவிக்கும் மனிதர். சுவற்றிலே தேசியத் தலைவர்களின் படங்கள் வரிசை செய்தன. மீசைக்கு அடியில் தெரிந்த அவரது பற்களும் வரிசையாகத்தான் ஒளியிட்டன.

நின்று கொண்டிருந்தவனை உட்காரச் சொல்லாது, அருகிலிருந்த வெள்ளி லோட்டாவிலிருந்த பாதாம்கீரை வேகமாகக் குடித்தார்.

வாயை வெள்ளைத் துவாலையால் துடைத்துக் கொண்டார். தலையில் குல்லாவும், உடலில் லக்னோ ஜிப்பாவுமாக வடக்கத்தி மனிதராகத் தெரிந்த அவர் முகத்திலே சிரிப்பு நிழலாடியது.

''தம்பி! உன்னை இன்னிக்கு வரச் சொன்னேன்தான். ஆனால் உனக்குத் தரதாக இருந்த இடத்தை என் உறவுக்காரப் பையன் ஒருவனுக்குத் தரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுடுச்சு'' தட்டுத் தடுமாறித் தமிழில் சொன்னார்.

கேட்டு அலுத்துப் புளித்துப் போன பதில். அவன் அதிர்ச்சியடையவில்லை.

''அதனால் என்ன ஸார். கூப்பிட்டீங்க வந்தேன். பரவாயில்லை'' மரியாதையுடன் சொல்லி விட்டு வெளியே வந்தான். கடைக்குப் பின்னாலிருந்த அந்த அலுவலகத்து ஊழியர்கள் அத்தனை பேரும் முதலாளியின் இனத்தைச் சேர்ந்தவர்கள். பொருள் தேட தமிழ் நாட்டிற்கு வந்த அவர்களிடமாவது ஒற்றுமை இருக்கிறதே. நம்மவர்கள் நமது இளைஞர்களை ஊக்குவிக்க இப்படியொரு மனப்பான்மையோடு முன்வருவ

தில்லையே? அடுத்த தமிழன் தன்னைவிட முன்னுக்கு வந்துவிட்டால்... என்று வேரோடு கிள்ளும் முயற்சியால் நாம் நெல்லிக்காய் மூட்டையாக, ஒற்றுமையின்றி பலவாறு பிரிந்து கிடக்கிறோம். யாரை நோவது? என்று கசப்பாக எண்ணியபடி அலுவலகத்தினின்று கடைப் பகுதிக்கு வந்தான்.

திடீரென்று யாரோ கன்னத்தில் அறைந்தது போன்றதொரு அதிர்ச்சி. கடைக்குள் ஒரே கூட்டம். ஆனாலும் அவன் அவர்களிருவரையும் பார்த்துவிட்டான். பழைய முதலாளி கங்காதரன் மகள் மாக்ஸி மோகினி. இன்று ஒரு மெல்லிய அமெரிக்கன் ஜார்ஜெட்டில் கூடுதலான ஒப்பனையில் கைநிறைய புடவைத் துணி பொட்டலங்களுடன் கவுண்டர் அருகே நின்று கொண்டிருந்தாள். அவள் அருகே அவனது மாஜி காதலி வசந்தா காஞ்சீபுர நீலப்பட்டுச் சேலையில் நெற்றியில் குங்குமப் பொட்டும், கொண்டையில் செண்பகப் பூச்சரமுமாக அலங்காரத்திலே நின்று கொண்டிருந்தாள்.

உடம்பே நெருப்பாகி விட்டது போன்ற ஆவேச உணர்வில் அவன் அவளையே உற்றுப் பார்த்தான்.

திடீரென்று திரும்பியவள் அவனைப் பார்த்து விட்டாள். முகத்திலே ஒருவித கலவரம் தெரிந்தது. ஆணி அடித்து நிறுத்தப்பட்டவன் போல அவன் அந்த இடத்தினின்று நகரவில்லை - தன் பார்வையையும் திருப்பவில்லை.

கங்காதரன் மகளுக்கு அடையாளம் தெரியவில்லை. ஒரே ஒரு தடவை பார்த்தது. மழிக்கப்படாத தாடை"யில் லேசாக முடி வளர்ந்திருந்த நிலையில் அவன் இப்போது



கொஞ்சம் உடல் இளைத்து வித்யாசமாகத் தென்பட்ட தாலோ என்னவோ அவள் அவனைத் தாண்டியபடி தன் பார்சல்களுடன் தன் தங்கையிடம் ஏதோ சொல்லி கலகலவென்று சிரிப்பைக் கொட்டியபடி நடந்தாள். பின்னால் வந்த வசந்தா ஏதோ ஒரு கணம் தயங்குவது போல தென்பட்டாள். ஆனால் ஒரே ஒரு கணம்தான் - அவள் கையில் தூக்கமாட்டாது பல துணி பொட்டலங்கள் அவன் காலடியில் அவளது கைப்பை சரிந்து விழுந்ததைக் கவனிக்காது அவள் வேகமாகத் தன் சகோதரியுடன் நகர்ந்து வெளியே நிற்கும் பென்ஸ் காரில் ஏறிக்கொண்டாள்.

குனிந்து அவன் அந்த சிறு கைப்பையை எடுத்தான் - சுற்றுமுற்றும் இருந்த கூட்டத்தில் தன்னை யாராவது கவனிக்கிறார்களா என்று நோட்டம் பார்த்தான். பையை தன் கையிலிருந்ததொரு பிளாஸ்டிக் பொட்டலத்தில் பொதித்துக் கொண்டு மெல்ல படியிறங்கினான்.

ஒரு கணம் அல்ப ஆசை. அதை வசந்தாவிடம் கொடுத்துவிட்டு அவள் நன்றி தெரிவிக்கிறாளா - தெரிந்த தாகக் காட்டிக் கொள்கிறாளா அல்லது தெரியாதவள் போல நடிக்கிறாளா என்று தெரிந்து கொண்டு விட வேண்டும் - இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று தோன்றியது. கீழே இறங்கியவன் சாலையில் காலை வைப்பதற்குள் பென்ஸ் கார் நகரத் துவங்கியது. அவன் மனம் வைத்தால் ஒரே ஓட்டத்தில் காரை அணுகியிருக்க முடியும். தெரியாதவள் போல போகும் அவளை அவன் ஏன் தேடிக்கொண்டு போக வேண்டும்?

ஓட்டலில் சொன்னானே அந்த வாலிபன், வேலை கிடைக்காவிடில் திருடும் தொழிலை ஆரம்பிக்க

வேண்டியதுதான் என்று துணிக்கடைக்காரர் கைவிட்டு விட்டார் - இனி வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை எதுமே இல்லை. நாளை சாப்பாட்டுக்கு என்று கவலைப்பட வேண்டாம். அவன் துவங்க நினைத்த அந்தத் தொழில் எதிர்பாராத விதமாக அவனது மாஜி காதலியிடமே ஆரம்பமாகிவிட்டது ஒரு நல்ல அறிகுறியே. கோபம் - வெறுப்பு - ஏளனம், அதே சமயம் ஒரு குரூர திருப்தியுடன் அவன் நடந்தான்.

வீட்டிற்கு வந்து அந்த கைப்பையைத் திறந்து பார்த்தான். என்ன அதிசயம்? கட்டுக் கட்டாகப் பத்து ரூபாய் நோட்டுக்குள் - நூறு ரூபாய் நோட்டு இருபது... மொத்தம் நான்காயிரம் ரூபாய்கள். கொஞ்சம் ஒரு பகுதியில் இருபதுக்கு மேல் சில்லரைப் பணம்.

இடறி விழுந்தவனுக்குக் கிடைத்தது போல ஆரம்பத் திருட்டே வெகு ஜோராக அமைந்துவிட்டதே!

ஒரு சமயம் அவள் வீடு போய் கைப் பையைக் காணாது அவன் அருகில் விழுந்ததாக எண்ணிக் கேட்க வந்தால்?

வரமாட்டாள். அத்தனை நெஞ்சுதைரியம் அவளுக்கு இருக்காது. அவள் மணக்கப் போகும் அந்தப் புது காதலனிடம் சொல்லி எங்கேயோ கூட்டத்தில் கைப் பையை யாரோ அடித்துக் கொண்டு போய்விட்டதாகப் புலம்பி ஆறுதல் பெற்றுக் கொண்டிருப்பாள்.

கங்காதரன் கைப்பை காணாமற் போனதைப்பற்றி ஒரு சமயம் போலீசுக்குத் தகவல் கொடுத்தாலும் அவன் பெயர் அதில் சம்பந்தப்படாது.



அவன்தான் சற்றுத் தொலைவில் தன்னிச்சையாக நின்று கொண்டிருந்தானே?

ஒரே குழப்பம். முதல் முறையாக செய்த தவறு. ஆனால் உள் மனம் வஞ்சம் தீர்த்துக் கொள்ள ஒரு சந்தர்ப்பம் இது, விடாதே என்று இடித்தது.

அப்பா செய்துவிட்டு ஓடிய காரியத்தைப்பற்றி பல தடவை குற்றஞ்சாட்டி பேசிய மகன், அவனே இப்போது அந்தத் தொழிலைச் செய்கிறான் என்றால்? அவனையு மறியாது கோபத்தில் சிரித்தான்.

பையை எடுத்துக் கொண்டு போய் நேரே கங்காதரன் வீட்டில் சேர்த்தால்... கங்காதரன் மகா கிராதகன். அவன் அதற்காகப் பாராட்டப் போவதில்லை. உடனடியாகப் போலீசை அழைத்து அவரது தம்பி மகளின் கரத்திலிருந்த கைப் பையை கூட்டத்திலே லபக்கென்று பிடுங்கிக் கொண்டு ஓடிவிட்டான். அடையாளம் கண்டு திருப்பிக் கொண்டு வந்து தருவது போல பாவனை செய்கிறான். அந்தப் பையில் வசந்தா பத்தாயிரம் ரூபாய் வைத்திருந்தாள். மீதிப் பணத்தை ஏப்பம் விட்டிருக்கிறான். இவனை நான் ஏற்கனவே சந்தேகப்பட்டு வேலையினின்று நீக்கி விட்டிருக்கிறேன். வசந்தா பார்த்து விட்டதால் நல்லவனைப் போல நாடகம் போடுகிறான் என்று குற்றம் சாட்டி - அவனைச் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் தள்ளி விடச் சிறிதும் தயங்க மாட்டார்.

ஈவு இரக்கமற்ற அவரிடம் போய் தானே மாட்டிக் கொள்வது மடத்தனம்.

இந்த நாலாயிரத்துச் சில்லரை போனால் வசந்தா ஏழையாகிவிட மாட்டாள். பணத்திலே புரள்கிற அவளுக்கு அது நாலாயிரம் பைசாவுக்குச் சமம்.

பலவாறு யோசித்தபடி வீட்டில் வெகு நேரம் கதவை உட்புறம் தாளிட்டுக் கொண்டு உட்கார்ந்தான்.

பசி வயிற்றைக் குடைந்தபோது பகல் சாப்பாட்டை அருகிலிருந்ததொரு பெரிய ஓட்டலில் ஏ.சி. அறைக்குள் நிம்மதியாக சாப்பிட்டான்.

பீடாவை சுவைத்தபடி - பாயை விரித்து கூடத்துத் தரை மீது போட்டுக் கொண்டு சிறிது நேரம் நன்றாகத் தூங்கினான்.

சமையலறையில் அரிசி டின் அடியில் பதுக்கப்பட்டிருந்த அந்தப் பையிலிருந்த பணம் அவனது கற்பனையை பலமாகத் தட்டிவிட்டது. அதிர்ஷ்டம் வலிய அவன் காலடியில் கொண்டுவந்து பணத்தைப் போட்டிருக்கிறது - அனுபவிடா ராமா அனுபவி என்று காதோடு சொல்கிறது. அவன் வாழ்க்கையில் வறுமையிலே வாழத் துவங்கிய கொஞ்ச நாட்கள் அந்தப் பணத்திலே குஷியாகக் காலந் தள்ளினால் என்ன?

பகல் தூக்கத்திற்குப் பின் எழுந்து உட்கார்ந்து யோசித்தான். அம்மா ஒரு பிறந்த நாளுக்கு அவனுக்கு வாங்கித் தந்த சட்டையொன்று இஸ்திரி மடிப்பில் பத்திரமாக இருந்தது. வேலைக்குப் போக அவன் அன்று காலை உடுத்திக் கொண்டிருந்த பாண்டுக்கு கனபொருத்தமான நிறம். சில நாட்களாக மழிக்கப்படாத முகத்தை சிரத்தையுடன் மழித்துக்கொண்டு சோப்பு போட்டு நன்றாகக் கழுவினான்.

நோயாளி போன்ற தோற்றம் மறைந்து - கண்ணாடியில் முகம் பளிச்சென்று தெரிந்தது. சிரத்தையுடன் முடியை அழகாக வாரிக்கொண்டான். அவனிடமிருந்த ஒரே ஒரு



ஜதை ஷூவை அணிந்து கொண்டு பையிலிருந்து ஒரு ஆயிரம் ரூபாயை எடுத்து சட்டைப் பைக்குள் வைத்து கொண்டு ஆட்டோவுக்கு கொஞ்சம் சில்லரையைத் தனியாக வைத்துக்கொண்டு மீதி பணத்தை பழையபடி அரிசி டின் அடியில் பதுக்கி வைத்தான். இன்று திடீரென்று ஒரு அச்சம். தினமும் திறந்தபடி போட்டு வைக்கும் சமையலறையை அழுத்திப் பூட்டினான். ஜன்னல் கதவுகளை பத்திரமாக சாத்தினான்.

மீண்டும் ஒருமுறை தன் முகத்தை அந்த கண்ணாடியில் பார்த்து திருப்தியுடன் வாயில் பூட்டை நன்றாகப் பூட்டி, பூட்டை சிலமுறை ஆட்டிப் பார்த்து விட்டு புறப்பட்டான்.

வழியில் பாதையோரத்திலேயே ஒரு ஷூ பாலிஷ் ஆளிடம் தன் பழைய ஷூவிற்கு பாலிஷ் போட்டுக் கொண்டான். நிதானமாக நடந்து இருட்டும் சமயம் அந்த பெரிய ஃபைவ் ஸ்டார் ஓட்டலுக்குள் நுழைந்தான்.

அவனது வாழ்க்கையிலே அவன் முதல் முதலாக மிகத் துணிவுடன் சாப்பிட அத்தனை பெரிய ஓட்டலுக்குள் நுழைவது ஒரு புதிய அனுபவமாக அவனை பயமுறுத்தியது.

வரவேற்பரையில் உச்சியிலிருந்து தொங்கிய கண்ணாடி சரவிளக்கு உமிழ்ந்த அந்த ஒளிச் சிதறலை உற்றுப் பார்த்துக் கொண்டே நிற்க வேண்டும் போன்றதொரு ஆசை.

பட்டிக்காட்டான் யானையைப் பார்த்ததுபோல என்று யாராவது அவன் அந்த இடத்திற்கு புதிது என்று

கண்டுபிடித்து விட்டால்... விசிறி மடிப்பு டர்பனுடன் சீருடையில் குறுக்கே நடந்த ஒரு ஓட்டல் சிப்பந்தியிடம் தனக்கு சைவ உணவு வேண்டும். எந்த அறை? ஊருக்குப் புதிது என்று கிசுகிசுத்தான்.

புன்னகை முகமெல்லாம் வழிய ஓட்டல் ஊழியர் அவனுடன்கூட நடந்து சென்று மிகவும் பெரிதாக மங்கலான வெளிச்சத்தில் மிதந்து கொண்டிருந்த ஒரு அறைக்குள் அனுப்பி வைத்தார்.

கண்களில் மேஜைகள் தென்பட சில நிமிடங்கள் சென்றன. மேலே தொங்கிய விளக்குகள் லேசானதொரு மஞ்சள் வெளிச்சத்தை வீசி ஒரு புகை மண்டலத்தைப் போன்ற பிரமிப்பைக் கொடுத்தது. களுக்கென்ற சிரிப்பும் பீங்கான் மீது கரண்டிகள் மோதும் ஒலியும் கேட்டவுடன் தான் அது ஒரு சாப்பாட்டறை என்பது அவனுக்கு விளங்கியது. அவன் வாயிலில் தயங்கி நிற்பதைக் கண்டு ஒரு சீருடை சர்வர் ஓடி வந்து இப்படி வாங்கோ ஸார். இங்கே ஒரு மேஜை காலி என்று அவனை கைப்பிடித்து தரதரவென்று இழுக்காத குறையாக தள்ளிக்கொண்டு போனான்.

அந்த சாப்பாடு தினுசுகளும் அவனுக்கு மிகவும் புதியவை.

மஷ்ரும் ஸூப் தண்டோரி ரொட்டி - வெஜிடேபிள் கட்லட்... பிரைட் ரைஸ்... வெங்காயத் தயிர் பச்சடி... ஆலுமேதி... குர்மா என்று என்னென்னவோ சுற்றிலும் சூழ்ந்திருக்க நடுவில் தட்டை நிறைத்த சாதமும் ஒரு சிறு தட்டில் அடுக்கு சப்பாத்தியும் கண்ணாடி டம்ளரில் தண்ணீரும் வந்து குவிந்தன.



ரொட்டியை கடித்து இழுத்துத் தின்றபடி அங்கு பரவிய மங்கிய ஒளியில் தன்னைச் சுற்றிலும் பார்த்தான். பாரின் சென்ட் குப்பென்று வீச பெல்பாட்டம் சட்டையில் ஒரு பெண்ணும் லக்னோ குர்தா வாலிபன் ஒருத்தனும் அடுத்த மேஜையில் தென்பட்டனர். இப்படிப் பல ஜோடிகள் - பல வித உடைகளில், அந்தக் கூட்டத்திலே ஒட்டாத ஒரு மனிதனாக மிகவும் சிரமப்பட்டு சாப்பாட்டை முடிப்பதற்குள் மணி ஒன்பதுக்கு மேல் ஆகிவிட்டது.

சர்வர் ஒவ்வொன்றையும் கொண்டு வந்து வைக்க ஒரு யுகம் எடுத்துக் கொண்டது போலத் தோன்றியது அவனுக்கு.

சாப்பிடத்தான் பொழுதே விடிந்தது என்று நிரூபிப்பது போல அங்கு கூடியிருந்தவர்கள் லேசில் சாப்பாட்டை முடித்துக் கொள்ளவில்லை. மெல்ல பேசிச் சிரித்தபடி சாப்பிட்டார்கள். சாப்பிட்டுக் கொண்டே யிருந்தனர்.

புட்டிங்கும் காப்பியும் வருவதற்குள் மணி ஒன்பதரையைத் தாண்டிவிட்டது.

பில்லுக்குரிய தொகையைப் பார்த்தபோது அவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. எழுபத்தைந்து ரூபாய்க்கா சாப்பிட்டிருக்கிறான்! அம்மாடி! அதிர்ந்து போய் எண்பது ரூபாயாக எண்ணி வைத்து விட்டு வெளியே வந்தான். கோலாகலமாக வர்ண விளக்குகளில் மின்னிய அந்த ஹோட்டலை விட்டு கால் நடையாக வெளியே வந்தபோது மணி பத்து.

கால் வந்த வழி நடந்தான் - வீட்டிற்குப் போக அவசரமென்ன?

ஒரு நாளையிலேயே நூறு ரூபாய்க்கு மேல் செலவாகிவிட்டது. இந்தக் கணக்கில் அவனிடமுள்ள அந்த நாலாயிரம் ரூபாய்கள் எத்தனை காலத்திற்கு தாக்குப் பிடிக்கும்!

உலகில் உள்ள எல்லா சுகங்களையும் அனுபவிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டால், தினமும் ஃபைவ் ஸ்டார் ஹோட்டல்களில் சாப்பிட விரும்பினால், பம்பாய் கல்கத்தா முதலிய நகரங்களுக்கு ஆகாய விமானங்களில் பறக்க ஆசைப்பட்டால் இந்த சில ஆயிரங்கள் எந்த மூலைக்கு?

அதை அவன் பெருக்க வேண்டும். பல வழியில... முதல் சுலபமான வழி காலையில் ஓட்டலில் அந்த வாலிபன் சொன்னானே அந்த வழி. வியாபாரிகள் என்று பெயர் வைத்துக் கொண்டு கொள்ளை லாபத்திலே பொருளை விற்று மக்களை கொள்ளையடிக்கும் போது அந்தத் தொழிலுக்கு கண்ணியமான பெயர்.

அதைச் சிறிய அளவில் ஒரு மனிதனிடம் இன்னொரு மனிதன் தட்டிப் பறித்துக் கொள்ளும்போது அது திருட்டு.

விந்தையான உலகம், அவன் தொழிலுக்கு என்ன பெயர் வந்தாலும் சரி. அந்த முடிவு தவறாகி அவன் சிறைக்கு போக நேர்ந்தாலும் சரி. வேலையில்லாது வீட்டில் வெட்டியாக பொழுதைக் கழித்துக் கொண்டு அலுவலகப் படிகளில் ஏறி இறங்குவதைவிட கம்பி



எண்ணிக் கொண்டிருந்தால் சிறைக்குள்ளே சோறும் வேலையும் கிட்டும்.

மூளை பல விதமாக சிந்தித்தபோது அவன் போகுமிடம் பற்றி எண்ணாது நடந்து கொண்டே யிருந்தான்.

திருவல்லிக்கேணியில் நெருக்கமானதொரு தெருவுக்குள்ளே தான் நடப்பதை உணர்ந்து ஒரு கணம் திடுக்கிட்டுப் போனான்.

கை கடிகாரத்தை தெரு விளக்கில் உற்றுப் பார்த்தான். இரவு மணி பதினொன்று, உண்மையா? இத்தனை நேரம் தெருத்தெருவாக, தான் போக வேண்டிய இடத்திற்கு எதிர்மாறான பகுதியில் சுற்றிக் கொண்டிருக்கிறானே!

விந்தையிலும் விந்தை. ஒரு நூறு ரூபாய் குறைய மீதி தொள்ளாயிரம் ரூபாய்களை அவன் சட்டப்பை சுமந்து கொண்டிருந்தும், இரவில் தனிவழியே நடந்தும் அவனிடம் உள்ளதைத் தட்டிப் பறிக்க யாரும் அவனை அணுகவில்லையே! மெல்ல நடந்தான் அவன்.

கார்ப்பரேஷன் தெருவிளக்கு இங்குமங்கும் அணைந்து இருந்த தெரு, இடை இடையே ஒரே இருட்டு அப்பிக் கொண்டிருந்தது. கொஞ்ச தூரத்தில் எதிர்வீட்டில் எரிந்த விளக்கொளியில் பார்த்தான். அந்த வீட்டு முகப்பில் பூட்டு தொங்கியது.

எதிர் வீட்டு விளக்கு பட்டென்று அணைந்தது. ஜன்னல் கதவுகள் சாத்தப்பட்டன அதுதான் சமயம் என்று பரபரப்புடன் பூட்டியிருந்த வீட்டை அணுகினான். எப்பொழுதும் அவன் கையுடன் ஒரு சிறு டார்ச் விளக்கை

பாண்ட் பையில் போட்டுக் கொள்வது வழக்கம். அம்மா இறந்தபின் வேலைக்கு அலைந்து அலுத்து களைத்துவரும் போது வாசலில் இருளில் பூட்டைத் திறக்க தட்டுத் தடுமாறாதிருக்க பாதையோரத்து கடை ஒன்றில் வாங்கிய கையளவு உள்ள சின்னதொரு டார்ச் அது.

அவனது தொழிலுக்கு மிகவும் உதவியான கருவி. பட்டனை அழுத்த எழுந்த வெளிச்சத்தில் வாயில் புறத்தை நோட்டமிட்டான். எங்கேயோ உறுமிய ஒரு நாயைத்தவிர, தெருவிலே ஆள் நடமாட்டமேயிருக்கவில்லை. மெள்ள வீட்டின் கதவை நெருங்கி அதன் பூட்டைப் பார்த்தான். அவர்கள் வீட்டு வாசலில் தொங்கியது போன்ற ஒரு சாதாரண இரும்புப்பூட்டு அது. தன்னிடமிருந்த கொத்து சாவியில் ஒன்றை நுழைத்துத் திருப்பினான். லொடக்கென்று பூட்டு திறந்து கொண்டது.

மெல்ல கதவை உட்புறம் சாத்திக் கொண்டு டார்ச்சை பொருத்திக் கொண்டு உள்ளே நடந்தான்.

யாருமே இல்லாத வீடு. சில நாட்களாக பூட்டியிருப்பது போன்றதொரு மக்கல் வாசனை முகத்தில் மோதியது.

தெரு வீடுகளுக்கே உரித்தான அதே பழைய பாணியில் கட்டப்பட்ட பழுதடைந்ததொரு வீடு.

கூடத்தைத் தாண்டி விளக்கை இப்படியும் அப்படியும் திருப்பினான்.

ஒரு சிறு அறை, பூட்டப்படாது வெளியே சங்கிலியால் தாளிடப்பட்டிருந்தது. மெல்ல திறந்து கொண்டு உள்ளே சென்றான். குறுக்கே புகுந்து ஓடிய ஒரு



எலி அவனை மிரண்டு ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது. அறைக்குள்ளே ஒரு பழைய படுக்கை - ஒரு சிறு துணி மூட்டை - ஒரு தகர பெட்டிதான் இருந்தன.

அட, அவனைவிட வறுமையான இடத்தில் அல்லவா அவன் தொழிலை ஆரம்பித்திருக்கிறான்? வெறுப்புடன் தகரப் பெட்டியை மூடி பூட்டியிருந்த அந்த சிறு பூட்டை இழுத்தான். படக்கென்று துருப்பிடித்த பூட்டு கையோடு கழன்று வந்துவிட்டது. பெட்டியைத் திறந்து டார்ச்சை சுழற்றினான்.

உள்ளே இரண்டு பழைய பட்டுப் புடவைகள். ஒரு நூல்சேலை, சில ரவிக்கைகள் இருந்தன. பட்டுப் புடவைகளின் அடியே கனமானதொரு கடித உறையைக் கண்டதும் வியப்புடன் வெளியில் எடுத்தான். கடிதஉறை ஒட்டப்படவில்லை - பாவம் என்ன அவசரமோ என்று எண்ணியபடி உள்ளே இருந்ததை இழுத்தான்.

கட்டாயம் அவன் அன்று ஒரு நரியின் முகத்தில் விழித்து இருக்கவேண்டும். நரி போன்ற தந்திரமிக்க மனிதன் அந்தத் தெருவில் அப்படி யார்? அவனுக்கு மிக்க அதிசயமாக இருந்தது. நூறு ரூபாய் நோட்டுகளாக பத்து அந்த உறைக்குள் இருந்தன. பரவாயில்லையே; சிதலமாகத் தெரிந்த பழைய ஓட்டு வீட்டில் தொட்டதும் வாயைப் பிளந்த பூட்டு... பழைய தகரப் பெட்டியில் புடவைக்கடியில் யாரோ மகராஜன் - அல்லது மகராஜி ஆயிரம் ரூபாய்களை வைத்துவிட்டு போயிருக்காங்களே! தொழில் துவக்கத்திலேயே ஆயிரக்கணக்கான ரூபாய்களை அள்ளித் தருகின்றதே! கொஞ்சம் துணிச்சலோடு தீவிரமாக ஈடுபட்டால்! டார்ச்சை அழுத்திப் பிடித்தபடி பார்த்தான்.

ரூபாய் கத்தையை எடுத்து பைக்குள் திணித்துக்கொண்டு கைரேகை அடையாளம் தெரியாது தொட்டதை கைக்குட்டையால் அழித்துவிட்டு விரைவாகக் கிளம்ப வேண்டும் என்று அவன் தீர்மானித்தான்.

அட, இதென்ன ஒரு கடிதம்! வியப்புடன் உறைக்குள் இருந்து நழுவி விழுந்த கடிதத்தை கையில் எடுத்துப் பிரித்து வைத்துக்கொண்டு அதிகம் விரல்களால் தொடாது டார்ச் விளக்கை அதன்மீது படியவிட்டான்.

# 8

அன்புள்ள சாரதாவுக்கு, அம்மா எழுதிக் கொண்டது. இதை எழுதும் போதே எனக்கு இதுதான் என் கடைசி கடிதம்னு உள்ளுணர்வு ஏற்பட்டு விட்டது. வாசலில் டாக்ஸியை வைத்துக்கொண்டு எதிர் வீட்டுக்காரர் அவசரப் படுத்துகிறார். அவர் மேல் குற்றமில்லை. என் உடம்பு மிகவும் கெட்டுவிட்டிருக்கிறது - போதாதிற்கு உன் அப்பா போன பிறகு நான் உன்னை வளர்க்க நாலு வீட்டுக்கு சமைச்சுப் போட்டு நெருப்படியில் வெந்து உழைத்ததின் விளைவு - ரத்த அழுத்தமும் - சர்க்கரை நோயும் - இருதய பலவீனமும் சீக்கிரமே வந்துவிட்டது.

இரண்டு வாரத்திற்கு முன் ஒரு தடவை எதிர் வீட்டு வாசலில் மயங்கி விழுந்தேன். வீட்டிலேயே டாக்டர் வச்சு கவனித்தும் பயனில்லை. உடம்பு ரொம்ப வீணாகிட்டது. ஆஸ்பத்திரியில் இருப்பதுதான் நல்லதுன்னு டாக்டரும் - எதிர்வீட்டுப் புண்ணியவானும் சொன்னதை மறுக்க



முடியலை - சிரமப்பட்டு இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். சொல்றதை முழுதும் எழுதுவதற்குள் டாக்ஸி ஹாரன் அடிப்பது கேட்கிறது. எழுத முடியாம கை நடுங்குகிறது. ஆயிரத்து ஐநூறு ரூபாய் சீர்வரிசையில் குறைஞ்சு போனதுக்கு உன்னை மாமியார் வீட்டில் படுத்துகிறார்கள் என்று போன தடவை நீ வந்து அழுதப்போ நான் மனம் இடிஞ்சு போயிட்டேன். நான் மேலே போட்டிருந்த நகை பூராவையும் வித்து இதில் பணம் கொஞ்சம் வச்சிருக்கேன். பாங்கியில் என்னோடு கூட்டு கையெழுத்தில் போட்டிருக்கும் மூவாயிரம் எனக்குப் பின் உன்னுடையது தான் என்று சம்பந்தியம்மாவிடம் சொல். கண்டபடி அவர்கள் பேசுகிறார்கள் என்று நீ ஏதாவது அசட்டுக் காரியங்கள் செய்துடாதே.

வரவர பெண்கள் புக்ககத்தார் பேசும் அவமதிப்பான பேச்சைக் கேட்டு சகிக்காமல் தற்கொலை செய்துக்கிறது ரொம்ப பரவலாயிட்டுது சாரதா. அப்படி எதுவும் செய்துடாதேயம்மா. நேரில் வந்து பணத்தை தர முடியாமல் ஹார்ட் அட்டாக் வந்து ரொம்பக் கஷ்டப்பட்டு எழுந்து உட்கார்ந்திருக்கேன் - அடுத்தது வந்தால் செத்துடுவேன். ஓய்வாக ஆஸ்பத்திரியில் இருக்கணும் என்று டாக்டர் சொல்லியிருக்கிறார்.

இதில் உள்ள பணத்தை எடுத்துக்கோ - வீட்டு சாவியை எதிர் வீட்டு மனிதர் பத்திரமாக வச்சு உன்கிட்ட இந்த பெட்டியையும் வீட்டில் உள்ள சில சாமான்களையும் எடுத்துத்தர சொல்லியிருக்கேன் -

எனக்கு உடம்பு அதிகமாயிட்டதாலே அவர் தந்தி கொடுத்திருப்பார். உடனே உன் கணவரோடு வந்து விடு.

என்னை பார்க்க அல்ல. உனக்கு சேர வேண்டியதை எடுத்துண்டு போக. எதிர்வீட்டு மனிதர் எட்டிப் பார்க்கிறார். என்னால் நீண்ட கடிதம் எழுத முடியலை. இதுவே ரொம்ப ஜாஸ்தி. புத்திசாலியாக புக்ககத்தை அனுசரிச்சுண்டு வாழத் தெரிஞ்சுக்கோ. வாழ்க்கை வாழத்தான் கடவுள் தந்திருக்கிறார். சாவதற்கல்ல. உனக்கு நான் விட்டுப்போகும் பணம் - உன் புக்ககத்தின் வாயைக் கட்டாயம் மூடும் - என்ன செய்கிறது. பெண்ணாய் பிறந்தால் நம் நாட்டில் இதுதான் கதிபோலும். பொறுமை யாக இரு. அம்மா சாரதா, என் கண்ணே, உன்னை பார்க்காமலேயே ஒரு சமயம் நான் போய் விடுவேன் - வருத்தப் படாதே. உன் புருஷனாவது உன்கிட்ட கொஞ்சம் ஆதரவா இருக்காரே அது போதும் எனக்கு. அநேக ஆசிகள் - அலமேலு.''

மார்பின் மீது சூடான கண்ணீர் துளிகள் விழுவதை உணர்ந்து திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

ஒரு ஏழைத்தாய் - இறக்கும் நிலையில் ஆஸ்பத்திரியில் கிடக்கிறாள். தன் மகளை புக்ககத்தார் கொடுமை செய்யக்கூடாது, எந்தவித குறையும் சொல்லக் கூடாது என்பதற்காக பாவம் அவள் தன் உடமைகளை விற்று வைத்திருக்கும் அந்தப் பணத்தைப் போய் திருடினால் சே! திருடுவது ஒரு தொழிலா... என் புத்தியை... தனக்குள்ளே நினைத்து தன் செய்கைக்காக வருந்தி துடித்துப் போனான். இத்தனை நாள் நேர்மையானவனாக வாழ்ந்து நேர்மையைப்பற்றி பிறருக்குச் சொல்லி - நேர்மை தவறிய அப்பாவை முடிவுவரை வெறுத்த அவன் செய்யும் செய்கையா இது - சே! இதைவிட பட்டினியில் இறப்பதே மேல்.



புலி பசித்தால் புல்லைத் திங்காது என்பாளே அம்மா. மனிதனுக்கு பசி வந்தால் அந்த மிருகத்தை விட கேவலமாக மானம் - குலம் - கல்வி எல்லாவற்றையும் பறக்கவிட்டு இப்படியா இறங்கிவிடுவது. இல்லை இல்லை. சரோஜாவுக்கு நேர்ந்த துன்பமான முடிவு உலகத்தில் உள்ள எந்தப் பெண்ணுக்கும் நேரக்கூடாது. கண்களைத் துடைத்துக் கொண்டான்.

அண்ணனான தான் நிறைய சம்பாதிக்க திறமை இல்லாததினால் - தங்கை சரோஜாவுக்கு நிறைவான வாழ்க்கை தர இயலவில்லை. அவள் வரதட்சிணை, சீர் என்ற கொடுமைக்குப் பலியாகிப் போனாள். இந்த நல்ல காரியத்தினால் சரோஜாவின் ஆன்மா சாந்தியடையட்டும். எண்ணியபடி சரோஜாவின் நினைவால் நெஞ்சுக்குள் எழுந்த துக்கத்தை சமாளித்துக் கொண்டு சட்டைப் பையிலிருந்த தொள்ளாயிரம் ரூபாய்களையும் சேர்த்து அத்துடன் வைத்த கடிதத்தை மடித்து உறைக்குள் எல்லாவற்றையும் போட்டு முன்பு இருந்த படியே புடவைக் கடியில் வைத்தான். டார்ச்சின் மெல்லிய ஒளியில் கூடத்து சுவரில் தொங்கிய ஒரு நடுத்தர வயது அம்மா நரைத்த தலை மனிதருடன் படத்தில் காணப்பட்டாள். அவள்தான் சாரதாவின் தாய் அலமேலு அம்மாள் போலும். கணவன் போன பின்பு சமையல் தொழிலில் இறங்கினவள். அவனது மனம் மறந்துபோன தாயை அதிகம் நினைக்கவே அவனால் துக்கம் தாள முடியவில்லை.

அந்த படத்தருகே சென்று கையால் தொட்டு அலமேலு அம்மாவைக் கும்பிட்டான்.

உங்களைப் போன்றவள்தான் என் தாய். படிப்பு அதிகம் இல்லாவிட்டால் என்ன? உடல் உழைப்பால் நேர்மையாக வாழ்ந்து காட்டியவள். நீங்கள் எல்லாம் எங்களைப் போன்ற படித்த இளைஞர்களுக்கு வழி காட்டிகள். அம்மா மன்னிச்சுக்கோங்க நான் மறுபடி கனவில்கூட இந்தத் தாழ்வான தொழிலை நினைத்துப் பார்க்க மாட்டேன்.

இத்தனையும் கணப்பொழுதில் மனதில் சிந்தித்தபடி மெல்ல நடந்து வாயில் பக்கம் வந்து கதவைத் திறந்து சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு பூட்டை தன் சாவியால் பூட்டிவிட்டு தெருவில் நடந்தான்.

வெகுநேரம் நடந்தே தன் வீட்டிற்கு வந்தவன் களைப்பு தாளாது உறங்கிப் போனான். அந்த உறக்கத்திலே எத்தனை ஒரு அமைதி! மறுநாள் காலை எழுந்ததுமே அவனுள் ஒரு பரபரப்பு.

அந்த அலமேலு அம்மாளின் மகள் வசந்தாளா? அலமேலு அம்மாளின் உடல்நிலை இப்போது எப்படியிருக்கிறது? எதிர்வீட்டுக்காரர் தயவில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாள் என்றால் அவளுக்கு சாரதாவைத் தவிர வேறு பிள்ளையோ பெண்ணோ கிடையாது என்றுதான் அர்த்தம்.

பாவம் - வயது காலத்தில் வியாதியும் - மன வேதனையுமாக ஆஸ்பத்திரியில் போய் படுத்துக் கிடக்கிறாள். மெல்ல போய் பார்த்தால்... அரிசி டப்பாவி லிருந்த வசந்தாவின் கைப்பையிலிருந்து இன்னும் கொஞ்சம் சில்லரையை எடுத்துக் கொண்டான்.

வசந்தா அம்மா! இதை நான் கடனாகத்தான் எடுத்துக்கிறேன். சில நாட்களில் அந்தப் பையுடன்



உன்னை துணிவாக வந்து சந்தித்து உன் பையையும் மீதமுள்ள பணத்தையும் கொடுத்துவிட்டு - குறைவான தொகையை கடனாக பாவித்துக் கொள் - விரைவில் கடனை பாடுபட்டு உழைத்து அடைத்து விடுகிறேன். நான் செய்த பிசகிற்கு, குற்றத்திற்கு நீ என்னை உன் பெரியப்பா விடம் காட்டிக் கொடுத்து தண்டனை எது வாங்கிக் கொடுத்தாலும் ஏற்கத் தயார்...

தனக்குள்ளே பேசியபடி வெளியே போக துரிதமாக ஆயத்தமானான். வழக்கம் போல தெரு மூலை ஓட்டலில் இரண்டு இட்லியும் ஒரு கப் காப்பியும் வாங்கி சாப்பிட்டு விட்டு பஸ்சில் புறப்பட்டான். நிலையத்தில் இறங்கி அந்தத் தெருவை நோக்கி நடந்தான்.

வீடு திறந்திருந்தது. பகீர் என்ற கலவர உணர்வில் துணிவைத் திரட்டிக் கொண்டு வாசல் படியேறி திறந்து கிடந்த கதவின் நாதாங்கியைப் பற்றி இழுத்தான்.

மூக்கு கண்ணாடியணிந்த ஒரு வயதான மனிதர் எட்டிப் பார்த்தார்.

''யாரப்பா - நீ - என்ன வேணும்?'' கொஞ்சம் சிடு சிடுப்பாகவே விசாரித்தார்.

''அலமேலு அம்மாளைப் பார்க்கணும்... அவங்க என் உறவினர் வீட்டுக்கு சில சமயம் பலகாரங்கள் செய்து தர வழக்கம், அதனால்-''

''அவங்களை நீ பார்க்க முடியாது. நேத்து ராத்திரியே செத்திட்டாங்க.''

திடுக்கிட்டுப் போய் நின்றவன் எதுவும் பேசுமுன் சரோஜாவைப்.போன்ற வயதுடைய ஒரு பெண் மாநிறமாக ஒடிசலாக இருந்தவள் உள்ளிருந்து வந்தாள்.

''மாமா? நீங்க தந்தியடிச்சது நல்லதா போச்சு - அம்மாவை ஒரு சில நிமிஷமாவது உயிரோடு பார்க்க முடிஞ்சது. பெட்டியிலே பணம் - பணம்னு பேச முடியாது கண்களை மூடிட்டா. பெட்டியைத் திறந்தப்போ அம்மா கடிதாசியோட ஆயிரத்து தொளாயிரம் ரூபா வச்சிட்டு போயிருக்கா மாமா. அம்மா எனக்காக எத்தனை தியாகங்கள் செஞ்சிருக்கா-'' மேலே பேச முடியாது விம்மினாள்.

''ஆயிரத்து ஐநூறை மாப்பிள்ளை கையில் இப்பவே கொடுத்திடு. மிச்சம் நானூற்றை வச்சுண்டு உங்கம்மா காரியத்தை ஒப்பேத்திடலாம். வருத்தப்படாதேயம்மா. ஒருநாள் இல்லாட்டா ஒருநாள் இந்த உலகத்திலிருந்து எல்லாரும் கிளம்பித்தான் ஆகணும்...'' கூறிவிட்டு சபரியின் பக்கம் சற்று கோபமாகத் திரும்பினார். துக்க வீடுன்னு உனக்கு இன்னமும் புரியலையா? அடிக்குரலில் அதட்டினார்.

யார் அது இந்த வேளையில் என்றபடி எட்டிப்பார்த்த கண்ணாடிக்கார வாலிபன் சாரதாவின் கணவனாக இருக்க வேண்டும். எப்படியோ போகட்டும். இனியாகிலும் பணப் பிரச்சினையில் சாரதா அவதிப்படாது கணவனுடன் சுகமாக இருக்கட்டும். மனதிற்குள் வாழ்த்தியபடி...

''ஸாரி ஸார். எனக்குத் தெரியாது வந்துட்டேன்'' என்றபடி விடை பெற்றுக் கொண்டான். அவன் திருட்டுத்தனமாக எடுத்துக் கொண்ட பணம் சாரதாவின் வாழ்க்கையை வளமாக்கவும் - அலமேலு அம்மாவின் இறுதிக் கடனுக்கும் உதவப் போகிறது என்ற எண்ணம் மனதில் இனித்தது. பாவம் செய்துவிட்டான் - ஆனாலும் அதற்கு ஒரு பரிகாரமும் உடனடியாக செய்துவிட்டான் என்ற அமைதியில் வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.



## 9

**வ**சந்தாவை சந்திக்க வேண்டும். எங்கே? எப்போது? நடந்ததைச் சொல்லி மனதை உறுத்தும் அந்தக் குற்ற உணர்வை முதலில் உதறிவிட வேண்டும். அவள் கூறப் போகிற பதிலை சாந்தமாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற சிந்தனையில் குழம்பியபடி அவன் வீட்டோடு இரண்டு தினங்கள் போக்கிவிட்டிருந்தான்.

மூன்றாவது நாள் தனது துணிவையெல்லாம் திரட்டிக்கொண்டு - அன்று காலை சீக்கிரமாக எழுந்தான். குளியலை முடித்துக் கொண்டு வெளியே வாயிற் கதவை வழக்கம் போல தட்டினார் பால்காரர் - சில தினங்களாக தன்னிடம் பால் வாங்காது தெரு மூலை ஹோட்டலிலேயே அவன் காப்பி பலகாரத்தை முடித்துக் கொள்வதைப் பற்றி அவருக்கு ஆதங்கம்.

''தம்பி - பணம் முன்னே பின்னே கொடு. எத்தனையோ வருஷமா இந்த வீட்டுக்குத்தான் கரந்ததும் முதல்லே பாலை ஊத்தரது. அதனாலே-'' தலையைச் சொரிந்தார்.

''அப்படின்னா சரி'' என்று உள்ளே ஓடிச்சென்று மீதமாக வைத்துக் கொண்டிருந்த சில பாத்திரங்களிலிருந்து ஒரு சிறு ஸ்டீல் செம்பை எடுத்து வந்தான்.

பாலை வழக்கம் போல ஊற்றி விட்டு கொஞ்சம் கொசுறு வேறு தாராளமாக ஊற்றியவர் சிரித்துக் கொண்டே சொன்னார்.

''என்ன இருந்தாலும் வீட்டுக் காப்பிக்கு ஈடு கிடையாது தம்பி - சீக்கிரமா ஒரு பெண்ணைக் கட்டிக்கோ.

அம்மா இருந்த இடத்திலே அது இருந்து உன்னை கவனிச்சுக்கும்'' ஆசிர்வதித்தபடி வெளியேறினார்.

இப்போ அது ஒண்ணுதான் குறைவாக இருக்கு. தனக்குள்ளே சிரித்துக் கொண்டபடி காஸ் அடுப்பை மூட்டி தண்ணீரைக் கொதிக்க வைத்து பில்டரில் காப்பி பவுடர் மீது ஊற்றினான். பால்காரன் சொன்னதில் தவறேயில்லை. காப்பியின் மணம் கும்மென்று மூக்கில் மோதியது.

பாலைக் காய்ச்சி டிகாக்ஷனுடன் கலந்து காப்பியைத் தயாரித்துக் கொண்டிருந்தபோது வாயில் கதவு இடிபடும் ஓசை கேட்டது. கடன்கள் பூராவையும் முன்னமேயே அடைத்து விட்டான். கையில் அகப்பட்ட வசந்தா பணத்தில் சில நாட்களாக தேவையான பொருட்களை காசு கொடுத்து வாங்கிக் கொண்டான்.

இப்போது யார் திடீரென்று வந்து இந்தக் காலை வேளையில் கதவைத் தட்டுவது? மெள்ள நடந்து சென்று கதவைத் திறந்தவனுக்கு ஓர் அதிர்ச்சி. கூடையில் உடைந்த தேங்காய், பழம், பூ, விபூதி, குங்கும பிரசாதத்துடன் கோயிலிருந்து வந்தவள் போல காணப்பட்ட வசந்தா நின்று கொண்டிருந்தாள்.

''உங்களுக்கு இன்று பிறந்த நாள் இல்லையா? உங்க நட்சத்திரத்திற்கு அர்ச்சனை பண்ணினேன். பிரசாதம் எடுத்துக் கொண்டு துணிவாக நேரே வந்திருக்கேன்-''

''என் பிறந்தநாளைப் பற்றி உனக்கென்ன அக்கறை?'' ஏளனமாக கோபத்துடன் கேட்டான் சபரி.

''உள்ளே வந்து பேசலாமா?'' அவனைப் பார்த்து அவள் கொஞ்சலாகக் கேட்டபோது அவனால் மறுப்புத் தெரிவிக்க முடியவில்லை. அவள்மேல் கொண்டிருந்த



ஆங்காரமும் - துவேஷமும் ஏனோ அவள் பேசிய சில வார்த்தைகளைக் கேட்டு மாயமாயின.

''காபி வாசனை கம்னு அடிக்கிறதே - உங்க பிறந்த நாள் வாழ்த்துச் சொல்ல வந்திருக்கிற எனக்கு ஒரு கப் காப்பி கிடைக்குமா?''

பற்களை கடித்துக் கொண்டான் சபரிநாதன். ஒன்றுமே நடக்காதது போல எத்தனை சகஜமாக பேசுகிறாள். திடீரென்று அலுவலக வேலையை விட்டு மாயமாகப் போனதற்கு என்ன பதில் சொல்லப் போகிறாள். அந்த மொட்டை கடிதத்திற்குத்தான் என்ன பதில் கிடைக்கப் போகிறது. ஒருவனை ஒரு நாள் ஏமாற்றலாம். பலரை சில நாள் ஏமாற்றலாம். எல்லோரையும் எப்போதும் ஏமாற்ற முடியாது பார்த்து விடலாம். கருவிக் கொண்டு தனக்கு தயாரித்த காப்பியில் பாதியை ஒரு டம்ளரில்விட்டு அவள் முன் வைத்தான்.

''நிஜமாகவே உங்களுக்கு நன்னா காப்பி போடத் தெரிகிறதே. சமைக்கவும் தெரியும்னு நினைக்கிறேன்.''

''முன்பே சொல்லியிருக்கேனே சமைக்கத் தெரியும் என்ற சங்கதியை. சமையற்காரியின் மகன், சமைக்கத் தெரிந்து கொண்டிருப்பதில் அதிசயமென்ன? உன் அந்தஸ்துக்குத் தக்கபடி ஒரு ஐ.ஏ.எஸ். ஆபிசராகி விட்டிருந்தால் அதிசயப்பட வேண்டும்?''

''எத்தனையோ எதிர்ப்புகளைத் தாண்டிக் கொண்டு உங்களை சந்திக்க நான் புறப்பட்டு வந்திருக்கேன். ஊசியாக வார்த்தைகளால் குத்தி என்னை நோகச் செய்வதில் உங்களுக்கு என்ன திருப்தி. அப்படி நான் என்ன தவறு செய்திருக்கேன்?''

"அது பெரிய கதை. நிறைய பேசி தெரிஞ்சு கொள்ள வேண்டிய விஷயம்."

"நானும் உங்ககிட்ட நிறைய பேச பல சங்கதிகளை வச்சிருக்கேன். இப்போ நான் உடனடியா வீட்டுக்குப் போய் ஆகணும். பெரியப்பா வியாபார சம்பந்தமா பம்பாய் போகக் கிளம்பிண்டு இருக்கார். பெரியம்மாவும் அவர்கூட விமானத்தில் காலையிலேயே பறந்துவிடுவாள். மோகினி தன் சிநேகிதியோட தங்கியிருக்க பங்களூர் போயிருக்கா. அவளுக்கு இன்னும் சில நாட்களில் கல்யாணம் நடக்க இருக்கிறது. இன்று மாலை என்னை வழக்கம் போல் கடற்கரையில் நீங்க சந்திக்க முடியுமா?"

"எனக்கும் உன்னோட பேசி சில தீர்மானங்கள் எடுக்க கொஞ்ச நேரம் தேவைப்படுகிறது. கட்டாயம் சந்திக்கத் தயாராக இருக்கிறேன்" காப்பியை குடித்து விட்டு விபூதி - குங்குமம் பிரசாதத்தில் சிறிதளவு மேஜை மேல் அவனுக்காக வைத்துவிட்டு கூடையுடன் அவள் கிளம்பிப் போய் விட்டாள்.

மாலை வழக்கமாக அவர்கள் சந்திக்கும் கடற்கரை பகுதியில் மணல் மீது அவளுக்காக அவன் காத்திருந்தான்.

சிறிது தூரத்தில் அவள் வருவது தெரிந்ததுமே மனம் படபடப்பதை உணர்ந்தான். சே! என்ன இன்னும் இந்த அல்ப ஆசை. தன்னையே சாடிக்கொண்டான்.

எதிரே மணல்மீது வந்து உட்கார்ந்து கொண்டாள் வசந்தா.

நீலவண்ண மல்மல் சேலையும் - ஏற்ற ரவிக்கையும் அணிந்து வழக்கம்போல எளிய அலங்காரத்தில் இருந்தாள்.



ஆனாலும் அவன் கண்களுக்கு மிகப் புதுமையான தொரு அழகுடன் தென்பட்டாள்.

தன் உணர்வுகளை சமாளித்தபடி கையில் சுமந்து வந்த பிளாஸ்டிக் பையினின்று அவளது கைப்பையை எடுத்து அவள் முன் மணல்மீது வைத்தான்.

"சரியா எண்ணிக் கொள் - எத்தனை பணம் குறைகிற துன்னு சொன்னால் நான் எடுத்துச் செலவழித்ததற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டு - அந்த கடனை விரைவில் தீர்த்துடறேன்" என்றான்.

"இந்தப் பையில் உள்ள பணம் உங்களுடையது. உங்கள் செலவிற்காகத்தான் நான் அன்னிக்கு உங்களைப் பார்த்ததும் பையை வேணுமென்றே உங்க காலடியில் நழுவ விட்டுப் போனேன்."

"எனக்கு ஏன் உன் பணம்?"

"நீங்க வேலையிலிருந்து நிறுத்தப்பட்டது. வேலை தேடிக் கொண்டு கஷ்டப்பட்டது எல்லாம் எனக்குத் தெரியும். உங்களைத் தேடிக் கொண்டு சில தடவைகள் வீடு வரைகூட நான் வந்திருக்கேன் - ஆனால் அப்போ தெல்லாம் வீடு பூட்டிக் கிடக்கும்."

"என்னையேன் தேடிண்டு வரணும். உனக்கும் எனக்கும் உறவு ஏதும் இல்லைன்னு நீ உதறி விட்டுப்போன பிறகு தேடிக் கொண்டு வந்து ஏன் குழப்பம் பண்ணனும். என் வேலை போனதுக்கு நீயே காரணம்னு தெரிஞ்சும் உனக்கு ரொம்பவும் துணிச்சல்.'

"நான் ஒரு வகையில் காரணம் என்பது உண்மை - பெரியப்பாவுக்கு நமது காதல் சங்கதி தெரிஞ்சு போச்சு அதனால்..." பேச முடியாது அவள் கண்களில் நீர் பரவி அவனை பரிவுடன் பார்த்தாள்.

"பணக்காரி ஒரு சாதாரண கணக்கரை - அதுவும் சமையற்காரி மகனைக் கல்யாணம் செய்துக்க முடியாத நிர்ப்பந்தம். இல்லையா! பெரியப்பாகிட்ட மன்னிப்பு கேட்டுக்கொண்டு நீ தப்பிச்சுட்டே. ஏன்னா இது உனக்கு கை வந்த கலை. நான் உன் காதலர்களில் மூணாவது பலி இல்லையா?"

"கன்னா பின்னான்னு பேசாதீங்க. யார் அப்படி சொன்னது. பெரியப்பா கோபப்பட்டுக்கொண்டு உங்களை வேலையிலிருந்து நிறுத்திட்டார். ஆனால் என் மனதை அவராலோ - அந்த ஆண்டவனாலோ மாத்த முடியாது."

"அப்படி பசப்பினா நான் நம்பிடுவேனா. இந்த கடிதத்துக்கு என்ன பதில்" கையிலிருந்த அந்த மொட்டை கடிதத்தை எடுத்து நீட்டினான் கோபத்துடன். கீடிதத்தைப் பிரித்துப் படித்தாள். அவள் முகம் கோபத்தில் சிவந்து போனது.

"கையெழுத்து இல்லாத ஒரு கடிதத்தை ஆதாரமாகக் கொண்டு நீங்கள் என்னைப்பற்றி சந்தேகித்தீங்களா - அதை நினைச்சால் கோபமும் துக்கமும் ஏற்படறது. நீங்கள் நினைக்கிறாப்பல நான் பணக்காரியே இல்லை. சின்ன வயதிலேயே என் தாய் இறந்து போயிட்டா - அப்பா தமக்கிருந்த சொத்தை குடியிலும் - குதிரைப் பந்தயத்திலும் தோற்று விட்டு - அண்ணன் வீட்டில் என்னோடு அடைக்கலம் புகுந்தார். அங்கேயும் ரொம்ப நாள் இருக்கவில்லை. இரண்டே ஆண்டில் பத்து வயது சிறுமியான என்னைவிட்டு செத்துப் போனார்..."

"ஐயாம் வெரி ஸாரி. இதெல்லாம் எனக்குத் தெரியாது."



"நம்மைப்பற்றி பேசி தெரிந்து கொள்வதை விட்டு ஊர் கதைகள் பேசி நாம் காலம் கழித்தோம். ஆரம்பத்திலேயே இதை நான் சொல்லாதது என் பிசகு. என் பெரியப்பா வீட்டில் நான் ஒரு உயர்மட்டத்து வேலைக்காரியாக நடத்தப்பட்டேன் - ஏதோ பெரியப்பா அலுவலகத்தில் வேலை தேடிக் கொண்டால் கடைசி வரை அவர்கள் தயவில் வாழணும்னு பயந்துண்டு அந்த ஆடிட்டரின் நிறுவனத்தில் கணக்கர் வேலையில் சேர்ந்தேன் - அப்படியே மெள்ள சி.ஏக்கு படிக்கணும்னு ஆசை."

"படிச்சிருக்கலாமே?"

"என் பெரியம்மாவின் பிளான் வேறாக இருந்தது. தன் உதவாக்கரை தம்பிக்கு என்னைக் கல்யாணம் செய்து வச்சு வீட்டோடு வேலைக்காரியாக்கிக் கொள்ள திட்டம் போட்டா."

"உனக்குக் கல்யாணம்னு கேள்விப்பட்டேன்."

"அப்படி ஒரு கதை பரப்பினால் நீங்கள் என்னை மறந்துடுவேள்னு ஒரு சதி. இந்த மொட்டைக் கடிதம் என் பெரியம்மாவின் வேலையாக இருக்கணும். இதில் என் பெரியப்பா பெண் மோகினிக்குப் பங்கு இருக்கும். மோகினிக்கு என்னைப் பிடிக்கவே பிடிக்காது, ஒரு வேலைக்காரியைப் போல மிகவும் மட்டமாக நடத்துவாள். என்னிக்காவது நான் ஆடம்பரமா உடுத்திக் கொண்டு நகை நட்டோடு வந்திருப்பதை பார்த்திருக்கீங்களா?...

"நான் உடுத்தியிருந்த துணிமணி நானே வேலை செய்து சம்பாதித்ததில் வாங்கினது. சில நகைகள் அம்மா எனக்கு விட்டுப் போயிருக்கிறாள். படிப்புதான் எனக்கு ஒட்டு மொத்தமான சொத்து, வேலைதான் என் ஆஸ்தி."

''அப்படி இருக்கும்போது அத்தனை பணத்தையும் பையோடு என் காலடியில் போட்டுட்டு போனீயே ஏன்?''

''இது தெரியலையா - உங்களை நான் என் உயிர்போல நேசிக்கிறேன். நீங்க பட்டினியும் பசியுமா வாடறதைப் பார்த்து நான் எப்படி சும்மா இருக்க முடியும்? உங்களை வேலையிலிருந்து நிறுத்தின கையோட என்னையும் வேலையிலிருந்து பெரியப்பா விலக்கிக் கொள்ள உத்திரவிட்டு வெளிவாசலுக்குக்கூட தனியா போக முடியாதபடி வீட்டோட ஹவுஸ் அரெஸ்ட் போல வச்சிருந்தார். அந்தப் பணம் என்னுடையது - அதை உங்களிடம் சேர்த்துடணும்னு - பாங்கிலிருந்து எடுத்துக் கொண்டு வந்து உங்க வீட்டைப் பார்த்தப்போ வீடு பூட்டியிருந்தது. நல்ல வேலையாக உங்களை அந்த கடையில் சந்தித்தேன். அது ஒண்ணே என் தூய அன்புக்கு சாட்சி. என் மனதில் அந்த எண்ணம் அத்தனை தீவிரமாக இருந்ததால் உங்களை எதிர்பாராது சந்திக்க நேர்ந்தது. டெலிபதிபோல என் உணர்வுகள் உங்கள் மனதை உங்களுக்குத் தெரியாமல் ஈர்த்து அங்கே வரச் செய்திருக்கு.''

''உன் பெரியப்பாவுக்கு என்னைக் கண்டால் ஆகலையே, நாமிருவரும் ஆசைப்பட்டு என்ன பயன்?''

''நான் ஒரு மேஜர் - படிச்சவள் - பெரியப்பா வீட்டின் கொத்தடிமை இல்லை. இதை நேராக சொல்லி விட்டு அந்த வீட்டைவிட்டு புறப்பட தீர்மானிச்சுட்டேன் - அதுக்கு நீங்க ஒத்துழைக்கணும்னு நேரில் கேட்கத்தான் எத்தனையோ முறை முயன்றேன், முடியலை.''

''நிஜமாவா. வசந்தா உன்னை நான் ரொம்ப தப்பா நினைச்சுண்டு, நான் கோணா மாணான்னு பல



குற்றங்களை செய்திருக்கேன்...'' படபடவென்று நடந்ததையெல்லாம் அவன் சொன்னான்.

''என் பணம் ஒரு பெண்ணின் நல்வாழ்வுக்கும் ஒரு நல்ல பெண்மணியின் இறுதி சடங்குகளுக்கும் உபயோகப்பட்டதைப் பற்றி ரொம்ப மகிழ்ச்சி. பெரியப்பாகிட்ட என் மனதை திறந்து பேசிட்டு நான் புறப்பட்டு வந்துடப் போறேன். சபரி உங்களை நான் ரொம்பவே நேசிக்கிறேன்'' கண்களில் நீர்புரள லேசாக விசும்பியபடி அவள் தன் கரங்களை நீட்டினாள்.

ஆவலுடன் பற்றிக் கொண்டான் சபரிநாதன். ''வசந்தா, நானும் உன்னை என் உயிருக்குமேல் நேசிக்கிறேன், கல்யாணம் செய்துக்க ஆசைப்படறேன். இரண்டு பேருக்கும் வேலை இல்லை என்கிற நிலையில் நாம் எப்படி வாழமுடியும்?''

''பெரியப்பா வீட்டை விட்டு கிளம்பின மறுநாளே நான் பழைய வேலையில் போய் சேர்ந்துடுவேன். அந்த அலுவலகத்திலிருந்து சீனியர் ஆடிட்டர் என்னை போனில் கூப்பிட்டு வந்து சேரச்சொல்லியிருக்கார். நான் வேலை செய்து வீட்டை நிர்வகிக்கிறேன்.''

''நீ சம்பாதித்துப் போட்டதை தின்றுவிட்டு நான் தண்ட பிண்டமாக உனக்குப் பின்னால் நிற்கணுமா - அது நன்றாக இருக்குமா?''

''உங்களுக்கு ரொம்ப அவசரம்?''

''நான் உடனடியாக பழைய வேலையில் சேந்துடறேன் நீங்க வேலை தேடிக் கொண்டு அலைய வேண்டாம். சொந்தமா ஒரு சின்ன வியாபாரத்தை நடத்த ஆரம்பியுங்க.''

"முதல் வேண்டாமா?"

"இப்போ உங்ககிட்ட இன்றே மூவாயிரம் ரூபாயோட என் நகைகளை வித்து கொஞ்சம் பணம் போடறேன்."

"கல்யாணத்துக்கு உனக்கு பணம் தேவைப் படாதா?"

"ரொம்ப எளிய முறையில் வடபழனியில் நாம் கல்யாணத்தை நடத்திக் கொள்வோம். அதில் செலவழிக்க நினைக்கிற பணத்தை மூலதனமாகப் போட்டு உங்க வியாபாரத்தை தொடங்குவோம். என்ன சொல்றீங்க?"

"என்ன வியாபாரம் செய்வேன் சொல்லு. முன்னே பின்னே ஏதாவது தொழில் செய்திருந்தால் மனதில் துணிவிருக்கும், சாமர்த்தியமிருக்கும்."

"நிறைய சாமர்த்தியமிருக்கு. ஆஞ்சநேய பகவானுக்கு தன்னுடைய சக்தியே தெரியாதிருந்ததாம். கூடவிருந்த வானரங்கள் அவரது வீரபராக்கிரமத்தை புகழ்ந்து எடுத்துச் சொன்ன பிறகுதான் அவருக்கு சமுத்திரத்தைத் தாண்ட வீராவேசம் வந்ததாம். அதுபோல உங்கள் திறமையை எடுத்துச் சொல்லி நான் உங்களுக்கு தூண்டுகோலாக விளங்கினா நீங்கள் விரைவில் வியாபாரத்தில் சிறந்தவராகி விடுவீர்கள்."

"குட்டை குழப்பாதே. பளிச்சுனு சொல்லேன்."

"சபரி! எனக்கு ரொம்ப நாளா இதே யோசனை. ஒருத்தர்கிட்ட கைகட்டிண்டு நீங்க சேவகம் பண்ணத் தேவையில்லை. ஆரம்பத்திலே வீட்டை நிர்வகிக்க, நாம் பசியில்லாம இருக்க, கொஞ்சகாலம் நான் வேலை செய்கிறேன். என் சம்பளம் நம்ப ரெண்டு பேருக்கும்



போரும். நகைகளை வித்து கிடைக்கிற பணத்தை முதலாக வச்சு, ஒரு சின்ன இடம் வாடகைக்கு எடுத்து நீங்க ஒரு பட்சணக் கடை வைக்கணும்."

"நல்லவேளை, என் அம்மா செய்ததுபோல வாணலியையும் சட்டுவத்தையும் எடுத்துண்டு வீடு வீடாகப் போய் பட்சணம் செய்து சம்பாதிக்கணும்னு சொல்லாமல் போனியே."

"யுனிவர்சிட்டியில் படிச்சு பட்டம் பெற்று விட்டதால் இந்த மாதிரியான வியாபாரம் செய்வது தவறா? உழைப்பு எங்கெல்லாம் உள்ளதோ அங்கெல்லாம் கலைவாணி கொலுவிருக்கிறாள். அவள் யுனிவர்சிட்டியில் மட்டுமே இல்லை தெரியுமா... மெல்ல சிரித்தாள் வசந்தா.

"முதலில் சாதாரண பட்சணக்கடை ஒன்றை பள்ளிக் கூடம், பஸ் நிலையம் போன்ற ஜன நெருக்கமான இடத்தில் ஆரம்பிப்போம். சுத்தமான கலப்படமில்லாத உணவு பொருட்களை தயாரித்து டேக் அவே ஃபுட் என்ற முறையில் விற்போம்.

"முதலில் உப்புமா, இட்லி, தோசை, சப்பாத்தி போன்ற உணவுப் பொருட்களை வேலையிலிருந்து திரும்பி வீடு செல்கிறவர்கள் சூடாக வாங்கி எடுத்துப் போகும் வகையில் தயார் செய்து பொட்டலமாகக் கட்டிக் கொடுப்போம். பின்னர் பலவித பலகாரங்களை சுத்தமான நெய்யில் தயாரித்து தீபாவளி, கிறிஸ்துமஸ், பொங்கல் போன்ற விசேஷ நாட்களுக்கு விற்போம். வியாபாரம் நன்றாக பிடித்துக் கொண்டதும் நான் கூட வந்து கடையில் உதவி செய்கிறேன். நீங்க கல்லாபெட்டியிலிருந்து பார்த்துக் கொண்டால் போதும். இப்போ பிரபலமாக நகரத்திலே இருக்கும் மிட்டாய் கடைகள் பல

இப்படித்தான் சின்னதாக ஆரம்பித்து பெருகிப் போச்சு... ஊராருக்கு நம் உழைப்பைக் கொடுத்து கொஞ்ச சம்பளம் வாங்கி பற்றாக் குறையில் திண்டாடுவதைவிட நாமே நம் வியாபாரத்தை பெருக்க உழைத்தால் கட்டாயம் கணிசமான லாபம் கிடைக்கும்.''

''என் அம்மாகூட இப்படித்தான் ஒருதடவை சொன்னாள். நான் அசட்டை செய்து விட்டேன். அப்பவே ஆரம்பிச்சிருந்தா...''

''இப்பவும் மோசமாகி விடலை... நமது திருமணத்திற்கு பிறகு உடனடியா ஆரம்பிச்சுடுங்க - இப்பவே ஒரு நல்ல இடமா பாருங்க.''

''நீ எனக்கு ரொம்பவே உற்சாகம் தந்து தூண்டிவிடுகிறாய். நீ சொல்லறபடி செய்தால் நாமிருவரும் சந்தோஷமாக வாழ இயலும்.''

''காதலனொருவனைக் கைப்பிடித்து அவன் காரியம் யாவினும் கை கொடுத்து, ''மாதரறங்கள் பழைமையைக் காட்டிலும் மாட்சி பெறச் செய்து வாழ்வமடி'' - இது பாரதியின் நூற்றாண்டு - அவர் சொன்னபடி கணவனாக உங்கள் கையைப் பிடித்து உங்களுக்குத் துணை நின்று ஒரு நல்ல மனைவியாக வாழ நான் ரொம்ப ஆசைப் படுகிறேன்.''

''அல்நாஷ்கர்போல நாம் மனோராஜ்யம் செய்கிறோமா? அல்நாஷ்கர் கையில் ஒரு திறமையையும் வைத்துக் கொள்ளாது கற்பனை செய்தான். காலால் எட்டி உடைத்து எதிரேயிருந்த கண்ணாடிப் பொருட்களை உடைத்து கடைக்காரரிடம் அவஸ்தைப்பட்டான். நாம் செய்யும் கற்பனைக்கு ஒரு தகுதியிருக்கிறது. முதல் இருக்கிறது. என் துணை இருக்கிறது.



''கற்பனையால் ஆகாயத்தில் பல கோட்டைகள் கட்டு. அப்பொழுதுதான் நிஜமாக ஒரு வீடாகிலும் நிலத்தில் கட்டுவாய் என்று ஒரு ஆங்கிலப் பெரியார் கூறி இருக்கிறார்.

''சபரி, சரின்னு ஒரு வார்த்தை சொல்ல ரொம்ப சுற்றி வளைக்கிறீங்களே, நியாயமா?''

''சரி வசந்தா, நீ சொல்றதுக்கெல்லாம் இனி சரி என்று தலையாட்டத் துணிந்து விட்டேன். அதற்கு முன் நான் வாங்கித்தரும் இந்தப் பரிசை சரின்னு நீ ஏத்துக்கணும்'' கூறியபடி அருகில் விற்றுக் கொண்டு போன பூக்கடை பையனிடம் இரண்டு முழம் மல்லிகை சரத்தை வாங்கி மடித்து தன் கையாலேயே அவள் தலையில் சூட்டினான்.

இருட்டிக் கொண்டு போகிறது. கிளம்பலாமா என்றபடி எழுந்திருக்க முயன்ற அவளது கையைப்பற்றி தூக்கி நிறுத்தினான்.

துயரமாக மனதைக் கனத்த அந்தப் பயங்கர இருள் மாயமாகி விட்டது போன்ற பிரமிப்பில் அவனது கையை பற்றிக் கொண்டு வருங்காலத்தை மகிழ்ச்சியுடன் எண்ணியபடி வெளிச்சத்தைத் தேடி இருவரும் கடற்கரை மணலில் மெல்ல நடந்தனர்.

★ ★ ★